விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 12 வெள்ளிக்கிழமை (26.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 158

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(R-8670)

# ஞானசார தேரர் தலைமறைவு!

## கைது செய்ய பொலிஸார் தேடுதல்



(கொழும்பு)

இனவெறுப்பு பரப்புரைகளை மேற்கொண்டு தமிழ் - முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தூண்டி வந்த பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கு பல பொலிஸ் குழுக்களை அமைத்து தேடுதலில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். (04-ம் பக்கம் பார்க்க...)

## 300 பிக்குகளின் வருகை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை அமைப்பொன்றை சேர்ந்த 300 பௌத்த மத துறவிகளால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவிருந்த விசேட சமய பூஜை அனுஷ்டா 23

## குளத்தில் மூழ்கி இளைஞன் பலி

(பரந்தன்)

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை குளத்தில் மூழ்கி இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று 23

## மன்னிப்பு; வருத்தமானது

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் சில குறுக்கீடுகள் ஏற்பட்டமைக்கு வட மாகாணசபை வருத்தத்தை தெரிவித்து 23

## மகிந்தவுக்கு இன்று வழக்கு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார வேலைகளுக்காக இலங்கை போக்குவரத் 23

## பாசத் தவிப்பு; மாணவி மரணம்

(பனிக்கன்குளம்)

தாயின் பாசம் அருகில் இல்லாது வேதனைகளைச் சந்தித்து வந்த மாணவி ஒருவர் மன்னாரில் வங்காலை புகையிரத கடவைக்கு அருகாமையில் பயணித்துக் 23

## வடக்கு சபை சிறப்பு அமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை கடந்த மூன்றரை வருடங்களில் சாதித்தது என்ன என்பது குறித்து மீளாய்வு செய்வதற்கு தனியான சிறப்பு அமர்வு ஒன்றை நடத்த வேண்டும் 23

### இராணுவம் விடுவித்த பகுதியில்

## இரு மோ.சைக்கிள்கள் கிணற்றிலிருந்து மீட்பு!



(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை வடக்கு, குரு வீதி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சொந்தமான கிணறு ஒன்றில் இருந்து பழைய மோட்டார் சைக் 24

### மீட்கப்பட்ட மோ.சைக்கிள்களின்

## இலக்கத்தகடுகளை கடத்திய இராணுவம்!



24

## நாவற்குழி விகாரை கட்டுமான பணிகளை தடுத்து நிறுத்துங்கள்!

### முதல்வரிடம் கோரி கவனயீர்ப்பு பிரேரணை

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் அனுமதியின்றி கட்டப்படும் விகாரையின் தாது கோபுர கட்டுமான பணிகளை சட்டம் ஒழுங்கு, உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் தடுத்து நிறுத்துவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கவனயீர்ப்பு பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசாவினால் மேற்படி பிரேரணை கவனயீர்ப்பு பிரேரணையாக முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவி 24

## ரயில் மோதியதில் குடும்பஸ்தர் சாவு



(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையாக யாழ்ப்பாணத்தில் 23

## இன உரிமையை ஒருநாள் தமிழர் நிச்சயம் வெல்வர்

### சிங்கள மாணவன் முகநூல் பதிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு அன்றும் இன்றும் நாளையும் இன உரிமையைப் பாதுகாப்பதே ஒரே பிரச்சினை 23




## குணவர்த்தன நேற்றுக் கைது

(கொழும்பு)

வெலிவேரிய - ரதுபஸ்வெலவில் சுத்தமான குடிநீருக்காக போராட்டம் நடத்திய பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்ட பிரிகேடியர் அநுர தேசப்பிரிய குணவர்த்தன நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் நாள் போராட் 02

## வட அமைச்சர்கள் மீதான குற்ற விசாரணை அறிக்கை

### அடுத்த அமர்வில் சமர்ப்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை மாகாண சபையின் அடுத்த அமர்வான எதிர்வரும் 6-ம் திகதி சமர்ப்பிக்கப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபையின் மாதாந்த அமர்வு அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்றைய அமர்வில் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# அரிய சந்தர்ப்பம்

மக்களின் சேவைக்காக
எமது கல்யாண மண்டபம்
விஷேட கழிவுச் சலுகையுடன்
நடைபெறுகின்றது
என்பதை மகிழ்வுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

மண்டபம், குருக்கள், மேளம், மரக்கறி சாப்பாடு ஓர் ஆள் ஒன்றுக்கு
**300/=**
மண்டபம் இலவசம்

அல்லது

தரமான மரக்கறி சாப்பாடு - **200/=**
குருக்கள், மேளம், மண்டபம் - **40,000/=** மட்டுமே
A/C தேவையானவர்களுக்கு - மேலதிக கட்டணம்

வீடியோ, போட்டோ போன்றவை குறைந்த கட்டணத்தில் பெற முடியும் என்பதையும் நேரில் கதைத்து இன்னும் பல சலுகைகளை பெற முடியும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

**வீடியோ கலாமினி இராஜமாணிக்கம்**
கல்யாண மண்டபம்

அச்சுவேலி (9016) 077 305 3080


## குணவர்த்தன...

டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்களில் 3 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 33 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த குற்றப்புலனாய்வுப் பொலிஸார் மூன்று இராணுவ அதிகாரிகளைக் கைது செய்திருந்தனர்.

இந்த நிலையில், பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்ட பிரிகேடியர் குணவர்த்தன குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

அவரை கம்பஹா நீதிமன்றத்தில் நிறுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இறுதிக்கட்டப் போரில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையிலான 58 ஆவது டிவிசனின் முதலாவது பிரிகேட்டுக்கு (58-1) லெப்.கேணல் தேசப்பிரிய குணவர்த்தனவே கட்டளை அதிகாரியாக பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**தேவை**

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் தென்னந்தோட்டத்தை பொறுப்பாக பராமரிப்பதற்கு வயதான ஒருவர் தேவை. தங்குமிட வசதி உண்டு. ஆரம்ப சம்பளம் ஒரு நாளைக்கு (C-8674)
ரூபா.800 0771681697



**தேவை**

நவாலியில் இயங்கும் **N.சீலன் பேக்ஹேசிற்கு** பேக்கரி வேலை தெரிந்தவர்களும் பழகவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: (C-8685) **(இருபாலாரும்)**
077 325 3610


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## இறைச்சிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைக்கான

## மீள்கேள்வி அறிவித்தல் - 2017

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 15.06.2017ம் திகதி முதல் 31.12.2017ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக் கட்டணம் | - | ரூபா 500.0 (VAT, NBT நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - | 29.05.2017 - 06.06.2017 பிற்பகல் 3.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளல் | - | 07.06.2017 மு.ப 9.30 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - | 07.06.2017 மு.ப 10 மணிக்கு |

**நிபந்தனைகள்**

1. யாழ்.மாநகர சபையினால் 18.10.2016, 19.10.2016 ஆகிய திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்
2. சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையின் இறுதி மூன்று மாத குத்தகை, வாடகையையும் சிற்றுண்டிச் சாலைக்கான குத்தகையை பெறுபவர்கள் மின்சாரக் கட்டணத்துக்கான பாதுகாப்பு வைப்புக் கட்டணமாக ரூபா 20,000.00 ஐயும் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும்.

### மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல. | விபரம் | கடை இல. | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5,000.00 | 94,200.00 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.03 | 5,000.00 | 108,000.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.08 | 5,000.00 | 42,250.00 |
| 4 | பண்ணை மாட்டிறைச்சிக் கடை | இல.10 | 5,000.00 | 457,150.00 |
| 5 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5,000.00 | 47,600.00 |
| 6 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5,000.00 | 162,100.00 |
| 7 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 157,000.00 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 185,250.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 165,000.00 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 116,000.00 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 116,000.00 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 114,500.00 |
| 13 | யாழ்.பொது நூலக சிற்றுண்டிச்சாலை (01.07.2017 - 31.12.2017) | | 5,000.00 | 120,000.00 |

மாநகர சபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
26.05.2017

பொ. வாகீசன்
ஆணையாளர்
யாழ்ப்பாண மாநகர சபை

(C-8688)



**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

- புறொயிலர் குஞ்சுகள்
- சேவல் குஞ்சுகள்
- ஊர்க் கோழிக் குஞ்சுகள்
- கழுத்து வெட்டி குஞ்சுகள்
- வான்கோழி குஞ்சுகள்
- Layer குஞ்சுகள்
- பேட்டுக் குஞ்சுகள்

சகல விதமான கோழிக்குஞ்சுகளையும் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். மொத்த கொள்வனவுாளர்கள், மொத்த விற்பனையாளர்களுக்கு தள்ளுபடி (Discount) வழங்கப்படும்.

தொடர்புக்கு
மானிப்பாய் (9026) Dilla - 077 408 1155


# 26வது ஜனன தினம்



(26.05.2017)


## துரைசிங்கம் ஐங்கரன்

இருபத்தாறாவது
அகவையில்
ஆல்போல் தழைத்து
அறுகுபோல் வேரூன்றி
வாழையடி வாழையாய்
வாழ்வில் வேரூன்றி குலம்
தழைக்க வாழ்வீர் என
நாமிருந்த வேளை
எதிர்பாராது கண்ணீரில்
ஆழ்த்தி விட்டீர்

பிறப்பு:-26.05.1991
இறப்பு:-26.03.2016

32, நெற்புலவு, பூநகரி. (9031) - குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சபாபதி இலங்கேஸ்வரன்

**(சபா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - புத்தூர்)**

ஆவரங்கால் மேற்கு, வங்கி வீதி, மந்திரிமலையைப் பிறப்பிடமாகவும், சுவிட்சர்லாந்து, ஏழாலை தெற்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி இலங்கேஸ்வரன் அவர்கள் 25.05.2017 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - முத்தம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இராசு ஆகியோரின் அன்பு மருமகனும், கிரிஜா அவர்களின் அன்புக் கணவரும் சுஜீவன், சகீரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் மகேஸ்வரன் (டென்மார்க்), பரமேஸ்வரன், சாந்தநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாஸ்கரவதி, சௌந்தரராஜன் (சுவிஸ்), விசயராசா (சுவிஸ்), செல்வராசா (ஜேர்மனி), தயாகரன் (சுவிஸ்), கருணராசா (பிரான்ஸ்), பிரதாபன் (கனடா), நல்லநாதன், சுயாதா, இராசேந்திரம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2017) வெள்ளிக்கிழமை ஏழாலை தெற்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாக்கியம்புலம்,
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

(9029)

தகவல் :
குடும்பத்தினர்

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை**
பெருமையுடன் வழங்கும்

**மனவளக்கலை யோகா எனும் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள்**

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை காயகல்பப் பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள் மற்றும்
- அகத்தாய்வு பயிற்சிகள்

இடம் : யாழ்ப்பாணம், அறிவுத் திருக்கோவில்
காலம் : 27.05.2017 (சனி) மாலை 5.00 மணி

**அகத்தாய்வு - 01**

27.05.2017 - 28.05.2017 ஆகிய தினங்களில்
காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்

**வழங்குபவர்**

மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி **வே.பாஸ்கரன்** அவர்கள்

**அருள்நிதியர்களுக்கான புத்தாக்க பயிற்சி**

04.06.2017 (ஞாயிறு) காலை 9.00 - 4.00 மணிவரை நடைபெறும்

**நெறியாளர்கள்**

மனவளக்கலை பேராசிரியர்கள்
அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
அருள்நிதி ச.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு, இந்தியா)
அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள்

அனைத்து அருள்நிதியர்களும் கலந்து பயிற்சியின் தன்மை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவும்
உணவு உட்பட தேவையான அனைத்து வசதியும் செய்து தரப்படும்.

**சர்வதேச யோகா தினம்**

21.06.2017 மாலை 04.30 மணிக்கு யாழ்.அறிவுத் திருக்கோவிலில் நடைபெறவுள்ளது.
மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும்
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் *அன்புடன் அழைக்கின்றோம்*

பயிற்சி பெற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம் 021 222 2772, 071 440 3268


வாழ்க வளமுடன்

(9030)

யாழ்.அறிவுத் திருக்கோவில் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

# அமைதியை சீர்குலைப்பவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

## ஆஸியில் ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை



(சிட்னி)

நாட்டில் அமைதியை சீர்குலைக் கும் வகையில் செயற்படுகின்ற வர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தர விட்டிருப்பதாக ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன அவுஸ்திரேலியா வில் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டுப்பிரதமர் மெல்கம் டேன்புல்லை நேற்று சந்தித்துள்ளார்.

இதன்போது இருநாட்டு இராஜதந்திர உறவுகள் மற்றும் பொருளாதார நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இரு தலைவர்களும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அவுஸ்திரேலியாவில் இலங்கையர்களையும் ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

அவர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, அண்மைக்காலமாக அரசியல் ரீதியாக இலாபம் தேடும் சில குழுக்கள், இனவாத செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான குழுக்களுக்கு எதிராக சட்டத்தை உரிய வகையில் அமுலாக்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், நாட்டின் அமைதியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவுஸ்திரேலிய வாழ் இலங்கையர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7)

## வேலையற்ற பட்டதாரிகள் கவனயீர்ப்புப் போராட்டம்






மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் சத்தியாக்கிரக போராட்டம் 93ஆவது நாளாகவும் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, விளக்கமறியலில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளின் சங்கத் தலைவர்களை விடுதலைசெய்ய நீதித்துறையினை சேர்ந்தவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறைச்சாலையுடன் தொடரும் 93ஆம் நாள் போராட்டம் என்னும் தலைப்பில் சத்தியாக்கிரகம் முன்னெடுக்கப்பட்டதுடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் உட்பட நான்கு பேரையும் விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்குமாறு வலியுறுத்தி அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர். (இ-7)





அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற்பதற்கான விசேட வைபவம் அந்நாட்டின் ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் (Government House) ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஜனாதிபதி அந்நிகழ்வில் கலந்துகொண்டார். இதன்போது அந்நாட்டின் ஆளுநர் Sir Peter Crosgrove மற்றும் அவரது பாரியார் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற்றனர். 21 மரியாதை வேட்டுக்கள் சகிதம் இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டு மிகக் கௌரவமான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் இருநாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. இந்நிகழ்வை நினைவுகூரும் வகையில் ஜனாதிபதி நினைவுக் குறிப்பேட்டில் கையெழுத்திட்டார்.

## எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக பிரதமருடன் இன்று முக்கிய பேச்சு

திருகோணமலை எண்ணெய் குதங்கள் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுக எண்ணெய் தாங்கித் தொகுதிகள் தொடர்பில் இன்று முக்கிய பேச்சுவார்த்தையொன்று இடம்பெறவுள்ளது.

குறித்த விவகாரங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபட உள்ளதாக கனிய எண்ணெய் தொழிற்சங்க ஒன்றியத்தின் தொழிற்சங்க இணைப்பாளர் வீ.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை எண்ணெய் களஞ்சிய விவகாரம், அம்பாந்தோட்டை துறைமுக எண்ணெய் தாங்கி தொகுதி மற்றும் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து பிரதமருடன் பேசவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமருடன் இன்று இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையின் பின்னர் தொழிற்சங்க போராட்டம் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## நாம் இருவரும் எதிரிகள் அல்ல

### கட்டி அணைத்துக்கொண்ட ரவி-மங்கள



(கொழும்பு)

நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேற்று வெளிவிவகார அமைச்சராக ரவி கருணாநாயக்க பதவியேற்ற பின்னர், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

வாழ்த்து தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில், தனக்கு எவ்வித கோபமும் இல்லை எனவும், கடந்த காலங்களில் வேறு சில குழுக்களே தன்னை விமர்சித்ததாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மேலும் இதன்போது இருவரும் கட்டித்தழுவி முத்தமிட்டு தமது அன்பை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உள்ளூராட்சித் தேர்தல் எப்போது? பிரதமர் நாடாளுமன்றில் விளக்கம்

தேர்தல் சட்டம் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததன் பின்னரே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கமளித்தார்.

புதிய தேர்தல் முறைமை குறித்து நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

தேர்தல்கள் சட்டம் தொடர்பாக கட்சித் தலைவர்களிடையே இடம்பெறும் கலந்துரையாடலில் ஏற்படும் இணக்கப்பாட்டுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்ததன் பின்னரே அடுத்த நடவடிக்கைக்கு செல்ல முடியும் என பிரதமர் தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறைமை தொடர்பில் பல்வேறு தரப்பினரால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சிறுபான்மை கட்சிகளது அரசியல் பிரதிநிதித்துவம் இதன் ஊடாக கேள்விக்குறியாகி இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அனைத்து கட்சிகளின் தலைவர்களுடனும் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி ஒரு வாரத்தில் அமைச்சரவைக்கு தெரியப்படுத்துவதாக பிரதமர் தெரிவித்தார். (இ-7)

## குளிக்கும் வாளிக்குள் விழுந்து ஒன்றரை வயதுக்குழந்தை பலி!

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள மீராகேணி ஸக்காத் கிராமத்தில் ஒன்றரை வயதுப் பெண் குழந்தையொன்று வாளிக்குள் விழுந்து மூச்சுத் திணறி மரணமடைந்து விட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மீராகேணி ஸக் காத் கிராமத்தைச் சேர்ந்த பாத்திமா தஸ்னிகா (18 மாதம்) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் எம்.எச்.எம். தாரிக் தெரிவித்தார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மூன்று குழந்தைகள் பெரிய வாளிக் குள் நிரப்பப்பட்டிருந்த நீரில் குளித்து விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அப்பொழுது குறித்த குழ ந்தை நீருக்குள் அமிழ்ந்து மூச்சுத் திணறியுள்ளது.

குளித்து விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளின் அலறல் கேட்டு வீட்டார் ஓடிச் சென்று நீருக்குள் அமிழ்ந்து கிடந்த குழந்தையை ஏறாவூர் ஆதார வைத்தியசா லையில் சேர்ப்பித்த போதும் குழந்தை ஏற்கனவே மரணமடைந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)



கிழக்கு மாகாணத்தில் கைது செய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளை விடுதலை செய்யக் கோரி நேற்றையதினம் யாழ். மாவட்ட செயலக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினர் முன்னெடுத்தனர். அண்மையில் கிழக்கு மாகாண சபையின் முன் நிகழ்ந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தினால் சில வேலையற்ற பட்டதாரிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் செய்த தவறை மன்னித்து விடுதலை செய்யும் படி கோரி மேற்குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தினை வடக்கு பட்டதாரிகள் நேற்று முன்னெடுத்திருந்தனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)

### ஞானசார தேரர் தலை ...

நாட்டில் கடும் போக்கு பௌத்த அமைப்பு என கூறப்படும் பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்வதற்கு பல பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, இனங்களுக்கிடையில் அமைதியை சீர் குலைக்கும் வகையில் உரையாற்றியமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களின் பேரில் இவரை கைது செய்வதற்கு சிறப்பு பொலிஸ் நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கலகொட அத்தே ஞானசார தேரர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கும் நீதிமன்றத்தினால் தடை உத்தரவொன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு புதுக்கடை - 4 நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் முன் வைக்கப்பட்ட அறிக்கையின் பேரிலே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப பிரிவு கூறுகின்றது.

பொலிஸார்வாக்கு மூலமொன்றை பதிவு செய்ய இவருக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் சமுகம் தராத நிலையிலே அவரை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலகொட அத்தே ஞானசார தேரா இன மற்றும் மத ரீதியான வன்முறைகளை தூண்டும் வகையில் கருத்துக்களை தெரிவித்து வருவதாக குறிப்பாக முஸ்லிம் அரசியல் தலைமைகளினால் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என முஸ்லிம் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி, பிரதமர், சட்டம் ஒழுங்கு அமைச்சர் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை ஏற்கெனவே கேட்டுள்ளனர்.

மூன்று நாட்களுக்கு முன்னர் வீதியில் வைத்து பொலிஸார் இவரை கைது செய்ய முற்பட்ட வேளை பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும ஞானசார தேரர் நடந்து கொண்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (செ-11)

### இன உரிமை ...

பக்கம் வைத்துவிட்டு நான் தமிழர்களுக்கு சார்பானவன் என்று திட்ட ஆரம்பிப்பீர்கள். இதோ அவரகளுக்கும் பதிலளிக்கிறேன். நான் இதை சிங்கள மொழியில் பதிவிட்டுளேன். தமிழர்களுக்கு புரியப்போவதில்லை. நான் தமிழர்களுக்கு எதிரான கருத்தை பதிவிட்டுள்ளேன் என்றே எண்ணுவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு இவ்வாறு பதிவிடும் ஒரே சிங்களவர் நான் மட்டுமே. நான் உங்களுக்கு (சிங்களவர்களுக்கு) புரிய வைக்கவே இவ்வாறு பதிவிடுகிறேன்.

ஒரு இனத்தவர்களாக நம்மால் முடியாத பல விடயங்களை அவர்கள் ஓர் இனமாக ஒற்றுமையுடன் சாதிதுள்ளனர். தமிழர்களி டமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய உள்ளது. அவர்கள் இன்று முடியா விட்டாலும் நாளை முடியா விட்டாலும் நூறு வருடங்களானாலும் அவர்களின் உரிமையை வென்றெடுப்பர். நாம் இதேபோல் என்றும் குறை கூறிக்கொண்டிருப்போமேயானால் நாம் முன்னேறுவது கடினம் என அந்த முக நூல் பதிவில் மாணவன் இந்திரஜித்தினால் பதிவிடப்பட்டுள்ளது.

இந்த மாணவனின் பதிவானது சமூக வலைத்தளங்களில் பலராலும் அவதானிக் கப்பட்டு பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பேருந்து மீது கல்வீச்சு

முல்லைத்தீவு முள்ளியவளையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மீது நேற்று இரவு 8.30 மணியளவில் கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத் தாக்குதலினால் பேருந்து சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

குறித்த தாக்குதலில் ஈடுபட்டுள்ள சந்தேக நபர்களை தேடி பொலிஸார தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சேதமடைந்த இலங்கை போக்குவரத்திற்கு சொந்தமான பேருந்து முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## வாயிற்கதவு பூட்டப்பட்டமைக்கு
## வடக்கு சபை அமர்வில் கண்டனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின்வாயிற்கதவுகளை பூட்டி முதலமைச்சர் உடபட உறுப்பினர்களை உள்ளே செல்ல விடாது பட்டதாரிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்திற்கு வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் 93வது அமர்வு நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சபை அறிவிப்பில் தனது அறிவிப்புக்களை வெளியிட்ட அவைத்தலைவர், அதில் கடந்த மாகாண சபையின் அமர்வின் போது வடக்கு மாகாண பட்டதாரிகள்மாகாண சபை முன்பாக போராட்டம் ஒன்றில ஈடுபட்டிருந்தனர். இதன் போது முதலமைச்சர், உறுப்பினர்கள், அரச அதிகாரிகளை மாகாண சபை அமர்வுகளில் பங்கேற்க விடாது தடுத்தமைக்கு மாகாண சபை கண்டனம் தெரிவிக்கின்றது என்றார்.

இதன் பின்னர் கவனயீர்ப்பு கருத்து ஒன்றை வெளியிட்ட திருமதி அனந்தி சசிதரன், மாகாண சபையின் 92வது அமர்வில் வருகை தரும் போது மாகாண சபையின் கதவுகள பூட்டப்பட்டு எம்மை உள்ளே செல்ல விடாது பட்டதாரிகள் வழிமறித்து இருந்தனர். எனினும் எம்மை உள்ளே அனுமதிக்காது சபையின் அமர்வு நடைபெற்றது.

இவ்வாறான சம்பவங்கள் இனி மேல் நடைபெறாது என்ற உத்தரவாதம் எமக்கு தரப்படல் வேண்டும் என்றார். அதற்கு இதனை சபை கவனத்தில்எடுத்து செயற்படும் என அவைத்தலைவர் பதிலளித்தார். (செ-4)

## கற்றல் நடவடிக்கைகள் குறித்து
## தனியார் கல்வி நிலையங்களிடம் வடக்கு மாகாண சபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் மாலை 6 மணிக்கு பின்னரும் காலை 6 மணிக்கு முன்னரும் செயற்படுவதை நிறுத்த வேண்டும் எனவும், வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் விடுமுறை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 93 வது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்கண்ட கோரிக்கை வடக்கு மாகாண சபை சார்பில் விடுக்கபட்டுள்ளது.

நேற்றைய அமர்வில் உறுப்பினர் சர்வேஸ்வரன், தனியார் கல்வி நிலையங்களில் மாலை ஆறு மணிக்கு பின்னர் கற்றல் நடவடிக்கைகள நடைபெறுவதனால் பல முறையற்ற சம்பவங்கள் நடைபெறுவதாக சுட்டிக்காட்டி, இதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

மேலும் காலை ஆறு மணிக்கு முன்னர் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதனை நிறுத்த வேண்டும் எனவும் கூறினார்.

இதேபோன்று ஏற்கெனவே முன் வைக்கப்பட்டிருந்த கோரிக்கைகளில் ஒன்றான வெள்ளி, ஞாயிற்றுகிழமைகளிலும் தனியார் கல்வி நிலையங்கள் நடத்த கூடாது எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இவை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தனியார கல்வி நிலையங்களிடம் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது. (செ-4)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்



## ஐயன் மார்க்கண்டன் (SLPS I, J.P)

**மலர்வு : 02.01.1937 உதிர்வு : 24.05.2017**

மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயன் மார்க்கண்டன் (SLPS I) (கஹவத்தை தமிழ் வித்தியாலயம் - இரத்தினபுரி, லுணுகல ஸ்ரீ ராமகிருஸ்ண வித்தியாலயம் - பதுளை, சுதுமலை சி.சி.த.க பாடசாலை என்பவற்றின் முன்னாள் ஆசிரியர், மன்னார்/சின்ன வலயங்கட்டு தமிழ்க் கலவன் பாடசாலை, யாழ்/அளவெட்டி றோ.க. த.க.பாடசாலை என்பவற்றின் முன்னாள் அதிபர், சமாதான நீதவான், முன்னாள் செயலாளர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஓய்வூதிய சங்கம், முன்னாள் தலைவர் - மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம், முன்னாள் செயலாளர் - ஆதீனப் பிரதிநிதி தென்னிந்திய திருச்சபை அளவெட்டி, முன்னாள் உப தவிசாளர் - சண்டிலிப்பாய் பிரதேச இணக்கசபை) நேற்று முன்தினம் (24.05.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயன் - குஞ்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இன்னாசி - அன்னம்மாவின் அன்பு மருமகனும் ஞானம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கைராசி, தாமு, கந்தையா, கிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுபேந்திரினி (ஆசிரியை - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை), மதிவதனன் (கனடா, யா/ஸ்கந்த வரோதயக் கல்லூரி பழைய மாணவன்), ஞானவதனன் (கனடா, யா/அருணோதயக் கல்லூரி பழைய மாணவன்), ஜெயவதனன் (பரிசாரகர் - காரைநகர் ஆதார வைத்தியசாலை), கிருபாகனி (ஆசிரியை-யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை), அருள்வதனன் (ஆசிரியர் - வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை), ரூபவதனன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்பணி S.பஞ்சரட்ணம் (அல்வாய் மெதடிஸ்த திருச்சபை), பாமா (கனடா), பியூலா (கனடா), உதயகுமாரி, அன்ரனி பெனடிக்ற் (உரிமையாளர் -கிருபாகனி புத்தகசாலை ஊர்காவற்றுறை), பிறின்சி அனித்தா (ஆசிரியை - வாழைச்சேனை அஸ்கர் வித்தியாலயம்), பனோஜா (தாதிய உத்தியோகத்தர்-யாழ்/போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் பொனோபர் (விஞ்ஞான பீடம் - கிழக்கு பல்கலைக்கழகம்), கிறிஸ்டோபர் (பல்கலைக்கழக புகுமுக மாணவர்), பிரியங்கா (முகாமைத்துவ பீடம் - ரொரன்டோ பல்கலைக்கழகம் கனடா), சோபியா (St.Joseph Secondary School - Canada), ஆசிகா (Hazel NcCaallian Senior Public School), காயத்திரி (கலைப் பீடம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சூரியகங்கேரி, ஜெயராஜ் (பல்கலைக் கழக புகுமுக மாணவர்), சூரியராஜ் (மகாஜனக் கல்லூரி), ஆசியா (அளவெட்டி றோ.க. த.க.பாடசாலை), அபிசன் (மகாஜனக் கல்லூரி), அபிமா (வாழைச் சேனை இந்துக் கல்லூரி), ரமோனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதி நல்லடக்க ஆராதனையும் இரங்கல் தெரிவிப்பும் 27.05.2017 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தென்னிந்தியத் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மதிபதி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.** **தகவல்:-**
**021 300 8620, 077 742 2217** (9034) **குடும்பத்தினர்**

# ஈரவிழிகளுடன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் : 1982.02.19 விண்ணில் : 2016.05.26

## தர்மகுலசிங்கம் துஷியந்தி (துஷி)



ஓராண்டு ஒரு நொடியாய் ஓடினாலும்
ஆறவில்லை துஷி என்துயரம் ஒவ்வொரு விநாடியும்
உன் எழில் முகம் காண துடிக்கின்றது என் இதயம்

இரவு பகல் என்றில்லாது கணப்பொழுதும் கனவிலும்
நினைவிலும் நினைந்து என்னுள் வாழ்ந்தவளே – துஷி
வார்த்தைகள் இல்லாத வடிவமாய் என்னுள் வாழ்பவளே
அளவில்லாத அன்பைத் தந்தாய் – நீ

கவலையில் தினமும் உன்முகம் பார்க்கத் தவறாமல்
வருகை தருகிறது உன் நினைவுகள் – என்னுள்
உன் அன்பை தோற்கடிக்கும் மற்றொரு அன்பு
இவ்வுலகில் எங்கும் இல்லை – எனக்கினி

வலிகளை மறைத்து வாழப்பழகி விட்டேன்
என் மூச்சுள்ளவரை நீ வாழ்வாய் – என்னுள்
ஆறுதலாய் ஓர் உணர்வு ஆழ்மனதில் உதயம்
அன்புக்கு மட்டும் இங்கே இத்தனை வலிமை
அதனை நான் கண்டதும் உன்னிடத்தில்
இன்று அந்த அன்பு முகத்தைத்
தேடுகின்றேன் கதறுகின்றேன்

உன் உறவுக்காய் தினமும் ஏங்கினாய் – துஷி
உன் உறவை இணைத்தே உனக்கு
தினமும் சிரம் தாழ்த்தி கரம் குவித்து
அஞ்சலி செலுத்துகின்றேன்.



S.தர்மேந்திரா
உரிமையாளர் தர்ஷா சவுண்ஸ்
V.H.லேன், இருபாலை,
கோப்பாய்.

# 44 கிராம சேவையாளர்கள் இணைந்து கணக்காளருக்கு கடிதம் அனுப்பி வைப்பு

யாழ்.மாவட்ட கிராம உத்தயோகத்தர் சங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தென் மராட்சி பிரதேச செயலக கிராம சேவகர்கள் 44 பேர் இணைந்து கையெழுத்து அடங்கிய கடிதம் ஒன்றினை தென்மராட்சி பிரதேச செயலக கணக்காளருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்களது கடிதத்தில் தென்மராட்சி பிரதேச செயலக கிராம சேவகர்களாகிய நாம் யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்க உறுப்பினர்கள் என்ற வகையில் எமது சம்பளத்தில் சந்தாப்பணமாக 50 ரூபா மாதாந்தம் அறவிடப்படுகிறது.

தற்போது அச் சங்கத்தின் நிர்வாகத்தினரின் செயற்பாடுகளில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக சங்கத்தின் நிர்வாகத்தினருக்கு ஏற்கனவே அறிவித்திருந்தும் நிர்வாகம் இதுவரை எந்தவித பதிலும் வழங்க வில்லை.

இதனால் தென் மராட்சி பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்திற்காக எமது சம்பளத் தில் இருந்து கழிக்கப்படும் சந்தாப் பணத்தை இந்த வருடம்மே மாதத்தில் இருந்து மறு அறிவித்தல் வரை நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அண்மைக்காலமாக யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராம சேவகர்கள் தாக்கப்படுவது தொடர்பிலும் அச் செயற்பாடுகள் தொடர்ச் சியாக நடைபெற இடமளிக்காத வகையில்நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம சேவகர்களால் யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்துக்கு பலமுறை அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)


# குருதிக்கொடை

யாழ்.திக்கம் மத்திய சனசமூக நிலைய ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வு நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (இ-7)

# இரண்டாம் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு செயலமர்வு

தரம்-6 தொடக்கம் தரம்-9 வரை இரண்டாம் மொழி (சிங்களம்) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் ஜுன் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் இடம் பெறவுள்ளது.இச் செயலமர்வில் இரண்டாம் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் வலுவூட்டல்கற்றல்கற்பித்தல் செயலமர்வு இடம் பெறவுள்ளதாக யாழ் கல்வி வலயபிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.எஸ். மாணிக்கராஜா அறிவித்துள்ளார்.(இ-3-136)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி




அமரர் ஆறுமுகம் நடராசா

பிறப்பு : 1946.09.08 இறப்பு : 2017.04.27

கடந்த 27.04.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை 27.05.2017 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் 4 மணிக்கு நடைபெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**



சுப்பர் வளவு,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்

குடும்பத்தினர்
021 226 3408

(C-8673)

# இராசி பலன்

26.05.2017
(வைகாசி 12, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
பிரதமை முன்னிரவு 11.43 மணிவரை
ரோகினி முன்னிரவு 11.22 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | புத | சூரி சந் செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்** கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**இடபம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், குடும்ப பொறுப்புக்கள் கூடும்.

**மிதுனம்** வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்..

**கடகம்** குடும்பத்தில் குதுாகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம்.

**சிம்மம்** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், புதிய முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

51

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



## ஈழத் தமிழர்களுக்கான முத்துக்குமாரின் வாக்குமூலம்

ஆனால். அதை செய்ய விடுகிறதா ஆளும் வர்க்கம்? உங்களை சிறுசிறு தவறுகள் செய்ய விடுவதன் மூலம் தன்னுடைய பெருந்தவறுகளை மறைத்துக்கொள்ளும் அதிகார வர்க்கம், உங்களை, எந்த மக்களுக்காகப் பாடுபட நீங்கள் விரும்பினீர்களோ, எந்த மக்களுக்காக உயிரையும் கொடுக் கலாம் என்று தீர்மானித்தீர்களோ, அந்த மக்களுக்கெதிராகவே, பயிற்றுவிக்கப்பட்ட அடியாள்களாக மாற்றுகிறது. டில்லி திகார் ஜெயிலைப் பாது காப்பது தமிழக பொலிஸ்தான். இந்தியாவில் பழைமையான காவல்துறையான தமிழக காவல்துறை சிறப்பாக செயற்பட்டு வரும் காவ்ல்துறைகளில் ஒன்று. ஆனால் அந்த மதிப்பை உங்களுக்குக் கொடுக்கிறதா இந்திய அரசாங்கம்! மத்திய அமைச்சர் ப.சிதம் பரம் தமிழகம் வந்து திரும்பிப் போகையில், சென்னை விமான நிலையத் தில், அவருக்கான பாதுகாப்பை வழங்க அனுமதிக்க மறுத்திருக்கிறார்கள் மத்திய காவல் அதிகாரிகள். ஏனென்று கேட்டதற்கு, ராஜீவ் காந்தியை நீங்கள் பாதுகாத்த லட்சணம் தான் தெரியுமே என்று கிண்டல் செய்திருக்கிறார்கள். ராஜீவ்காந்தியைத் தமிழக காவல் துறையால் காப்பாற்ற முடியவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவுக்கு உண்மை, ராஜீவோடு இறந்தவர்களில் பலர் அப்பாவி பொலிஸ்காரர்கள் என்பது. உங்கள் அர்ப்பணிப்புணர்வு கேள்விக்கப்பாறபட்டது. ஆனால் மேற்படி வெண் ணெய் வெட்டி வீரர்கள் - அதுதான், இந்திய உளவுத்துறை - ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்ற தகவலை அறிந்தபோதும் மெத்தனமாக இருந்தது என்பது பின்னர் அம் பலமானதல்லவா! இதுவரை காலமும் நீங்கள் அப்பாவி மக்களுக்கெதிராக இருந்தாலும் தமிழகத்தின் பெருமை களில் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த தருணத்தில், நீங்கள் மக்கள் பக்கம் இருந்தால் மட்டுமே மக்களிடம் இழந்திருக்கிற பெருமையை மீட்டெடுக்க முடியும். ஒருமுறை சக தமிழர்களுக்காக அர்ப்பணித்துப்பாருங்கள். மக்கள் உங்களை தங்கத்தட்டில் வைத்து தாங்குவார்கள். தமிழனின் நன்றி உணர்ச்சி அளவிடற்கரியது. தன்னுடைய சொந்தக்காசை வைத்து அணை கட்டிக்கொடுத்தான் என்பதற்காகவே அவனுக்கு கோயில் கட்டி. தன் பிள்ளைகளுக்கு அவன் பெயரை வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறான் முல்லையாற்றின் மதுரை மாவட்டத் தமிழன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கொந்தளிக்கப் போகும் தமிழகத்தில், மத்திய அரசு அதிகாரி களுக்கு ஒத்துழைக்க மறுப்பது, ரா, சி.பி.ஐ போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர் களை உள்ளூர் மக்களுக்கு அடையாளம் காட்டுவதும்தான். இதை மட்டுமாவது செய்யுங் கள். மற்றதை மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

களத்தில் நிற்கும் தமிழீழ மக்களே, விடுதைலைப்புலிகளே!

அனைத்துக்கண்களும் இப்போது முல்லைத்தீவை நோக்கி. தாய்த் தமிழகம் உணர்வுபூர்வமாக உங்கள் பக்கம் தான் நிற்கிறது. வேறு ஏதாவது செய்ய வேண்டும் எனவும் விரும்புகிறது. ஆனால் என்ன செய்வது உங்களுக்கு அமைந்தது போன்ற உன்னத தலை வன் எங்களுக்கில்லையே! ஆனால், நம்பிக்கையை மட்டும் கைவிடாதீர்கள். இதுபோன்ற கையறுகாலங்கள்தான். தமிழகத்திலிருந்து அப்படி ஒருவர் இந் தக் காலத்தில் உருவாகலாம் அதுவரை, புலிகளின் கரங்களை பலப்படுத்துங்கள். 1965இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரை சில சுயநலமிகளின் கையில் ஒப்படைத்த தால்தான் தமிழக வரலாறு கற்காலத் திற்கு இழுபட்டுள்ளது. அந்தத் தவறை நீங்கள் செய்து விடாதீர்கள்.

அன்பிற்குரிய சர்வதேச சமூகமே, நம்பிக்கைகுரிய ஒபாமாவே,

உங்கள் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால், இறையாண்மை கொண்ட ஒரு குடியரசு தம் குடிமகனை இனஒதுக்கல் மூலமாக கொடுமைப்படுத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. வசதிக்காக அமெரிக்காவின் கடந்த காலத்தையே எடுத்துக்காட்டாக சொல்லலாம். உலகப் புகழ் பெற்ற குத்துச்சண்டை மாவீரன் முகமதலி சொன்னானே, என் சரு மத்திலிருக்கும் கொஞ்ச வெண்மையும் கற்பழிப்பின் மூலமாகவே வந்திருக்கு மென்று நீங்கள் அமைதியாக இருக்கும் வரை இந்தியா வாயே திறக்காது. ஒட்டு மொத்த தமிழர்களும் அழிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால் அது நடக்கும். அதுவரை, இந்தியாவின் வாயைப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா? வன்னியில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்காள் என் கிறார்கள். அப்படியானால் அரசு சொன்ன பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போதுமே, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி. இலங்கை அரசைச் சார்ந்து நின்றாலும் சரி. தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே அவர்கள் கொல்லப்படுகிறார்கள் எஓன்பதற்கு. இது இனப்படுகொலை இல்லையா? இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக, இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர் களைக் கொள்கின்றனரென்றால். நீங் கள் உங்கள் மௌனத்தின் மூலமாக வும், பாராமுகத்தின் மூலமாகவும் அதே கொலையைத் தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கி போராடு வதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிடமாட்டார்கள். அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார். ம்றத்திற்கும் அஃதே துணை என்று பாடியுள்ளான் எங்கள் திருவள்ளுவர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா , என்னவோ பிரச்சினையே புலிகள் ஆயுதம் அடுத்ததால்தான் வந்தது என் பதைப் போலே.. உண்மையில், புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரணகர்த்தாக்கள் அல்லர் (they are not the reason: just an outcome)

இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருப்பது வெளிப்படையாகாத வரை, இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் தலையிட முடியாது என்றது. சீனா, பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற்காக செய்வதாகச் சொன்னது. நர்டா ளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய, மும்பை தொடர் வெடிகுண்டுகள், பிறகு அண்மையில் நடந்த தாக்குதல் எனப் பலவாறாக இந்திய மக்களைக் கொன்று குவித்த பாகிஸ்தானோடுஇணைந்து கொண்டு தமிழர்களைக் கொன்று குவிக்கிறது.

அப்படியானால், பாகிஸ்தானின் இந்திய மீதான பயங்கரவாதமென் பது இந்தியா-பாகிஸ் தான் இரு தரப்பு அதிகார வர்க்கங்களும் தங்கள் மக்களைச் சுரண்ட பரஸ்பர புரிதலுடன் உருவாக்கிக் கொண்ட ஒன்று என்ற எம் சந்தேகம் ஒரு பக்கம் இருக்க, இப்போது, விடு தலைப் புலிகள் தீவிரவாதிகள் அதனால் தான் சண்டை என்கிறது.

ராஜீவ் காந்தியைக் கொன்றார் கள் என்கிறது. ராஜீவ்காந்தி ஒரு கவுன்சிலரோ, மாவட்டச் செயலாளரோ அல்ல. அவ்ரை ஏற்கனவே ஒருமுறை கொலை செய்யும் முயற்சி இலங்கையில் நடைபெற்றிருந்த போதும் அந்தக் கொலைகாரன் விசாரிக்கப்பட வில்லை.

ராஜீவ்காந்தியைக் கொல்ல முயன்ற அந்த சிங்கள வீரன் ஆகியோரையும் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இணைத் துக்கொண்டு மறுபடியும் விசாரிக் கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கைகளில் ஒன்று. ராஜீவ் மீது புலிகளுக்கு வருத்தம் இருந்திருக்கலாமே தவிர, கோபம் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம், ராஜீவ் இந்திராவின் புதல்வர். இந்திரா, தமிழீழத்தின் சிறுதெய்வங்களில் எம்.ஜி. ஆருக்குப் பக்கத்திலிருப்பவர்.

இந்தியா சொல்லும் காரணங்கள் அடிக்கடி மாறுவதிலிருந்தே இந்தியா நியாயத்திற்குப் புறம்பாகத் தான் இந்தப்போரில் ஈடுபட்டிருப்பது அம்பலமாகி இருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் ஏன் நேரடியாகத் தலையிடக் கூடாது? புலிகள் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஆயுதம் குவிக்கிறார்கள் என்றது இலங்கை. சந்திரிகாவோ, ரணிலோ, மகிந்தாவோ கடந்த காலங்களில் ஒரு கடவுளாக அல்ல, மனிதர்களாகக்கூட நடந்து கொண்டதில்லை.

இவர்கள் ஒரு நிர்ப்பந்தத்தின் பெயரில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்பதால் மட்டுமே போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும்.

புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக் கூடாது என்று எதிர்பார்ப்பது என்ன வகை நியாயம்? தாங்கள் நேர்மையாக நடந்துகொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவது மூலமாக மட்டுமே போராளிகளை- ஆயுதத்தைக் கீழே வைக்கச் செய்ய முடியும்.

கடந்த கால அரசுகள் எவையும் அப்படி செயற்படவில்லை. உதாரணம் ரணில்- கருணா. ஆனால், புலிகள் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு செய்தது ஆயுதம் வாங்கியது மட்டுமல்ல, அது காலா காலமாக நடப்பதுதானே- ஓர் அரசு நிர்வாகத்தையே உருவாக்கியிருக்கிறார்கள்.

(வளரும்)

-புருசோத்தமன்-

# ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்று

## சாரதிகள் விளக்கமறியலில்; பூநகரியில் சம்பவம்



கிளிநொச்சி பூநகரி பகுதியில் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகளை கடத்த முற்பட்ட இரண்டு வாகனங்களையும் சாரதிகளையும் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சிபூநகரிபொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூநகரி பரந்தன் வீதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் முதிரை மரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற இரண்டு வாகனங்கள் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த இரண்டு வாகனங்கள் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்ன மற்றும் பூநகரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்தனக் கொடித்துவக்கு ஆகியோரின் கட்டளைக்கு அமைவாக பூந கரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டார தலைமையிலான குழுவினர் கடந்த 23 ஆம் திகதி அதிகாலை 5 மணி யளவில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை கூலர் ரக வாகனத்திலும் கன்ரர் வாகனத்திலும் கொண்டு சென்ற இரண்டு சாரதிகளைக் கைது செய்ததுடன் வாகனங்களையும் கைப்பற்றிய பொலிஸார் குறித்த இரண்டு பேரையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இரண்டு பேரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீத வான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இருவரும் வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அண்மைக் காலமாக பூநகரிப் பிரதேசத்தில் சட்ட விரோத காடழிப்பும் மரக் கடத்தல்களும் நடைபெறுவதாகவும் பூநகரி பொலிஸார் அண்மையில் கைப்பற்றிய மூன்றாவது மரக்கடத்தல் எனவும் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் தெரிவிக்கப்படுகிறது.

(2-5-84-15)

வன்னி வலம்

## பூநகரி - யாழ். வீதியில் அமைக்கப்பட்ட கடைத் தொகுதி மூடப்பட்ட நிலையில்



(பூநகரி)

கடந்த கால அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் பூநகரியில் வாடியடியில் காலாகாலமாக இயங்கிவந்த சந்தைத் தொகுதியும், பேருந்து நிலையமும் இடம் மாற்றப்பட்டு ஒரு கிலோ மீற்றர் தொலைவில் பூநகரி - யாழ்ப்பாணம் வீதியில் அமைக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டுக்கு வர்த்தகர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தும் அந்த நடவடிக்கை நடைபெற்று 32 கடைத்தொகுதிகளும் அமைக்கப்பட்டு அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டு 32 கடைகளும் கையளிக்கப்பட்டன.

தற்போது 28 கடைகள் பூட்டப்பட்ட நிலையில் சனநடமாட்டம் அற்று வெறிச்சோடிக் காணப்படுவதாக பொதுமக்கள், வர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பொருத்தமற்ற இடத்தில் இச் சந்தையையும், கடைத் தொகுதியையும் அமைத்ததன் விளைவாக எதுவிதமான நன்மையையும் அடைய முடியவில்லை என பொது அமைப்புக்கள் குறை கூறுகின்றனர்.

பிரதேச சபைக்குரிய வாடகைப் பணமும் செலுத்தப்படாத நிலையில் பிரதேச சபையின் மாற்று நடவடிக்கையை மக்கள் எதிர்பார்த்திருப்பதாக தெரிய வருகிறது. (2-5-84)





வவுனியாவில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ஏற்பட்ட மழையுடன் கூடிய மினிசூறாவளியினால் மரங்கள் முறிந்து விழுந்து வாகனங்கள் பல சேதமடைந்துள்ளதுடன் பொலிஸ் நிலையத்தில் அமைந்திருந்த பொலிஸார் விடுதி ஒன்றும் சேதமடைந்துள்ளது. நகரின் பல பகுதிகளில் மரங்கள் முறிந்து விழுந்ததுடன் பல்வேறு கட்டடங்களும், வாகனங்களும் சேதமடைந்துள்ளதைப் படங்களில் காணலாம். (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

## வவுனியா மாணவர்களுக்கு இடையில் முதியோர் விழிப்புணர்வுப் போட்டிகள்

(குருமன்காடு)

சமூகசேவை அமைச்சின் கீழுள்ள முதியோர் செயலகம் அகில இலங்கை ரீதியில் முதியோர் விழிப்புணர்வுச் செயற்பாடாக பாடசாலை மாணவரிடையே கவிதை, கட்டுரை, ஓவியம், நடனம், சிறுகதைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இதன் ஆரம்ப செயற்பாடாக வவு/வவுனியா விபுலானந்தாக்கல்லூரியில் பாடசாலை அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், மாணவர்கள் மத்தியில் சிறப்புரை நிகழ்த்தினார்.

இதில் மாணவர்கள் மூத்தோரின் வழி நடத்தலின் அவசியம், முதியோரின் விழுமியங்கள் பற்றி கருத்து தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, கதை, ஓவியம் போன்ற போட்டிகளை நடத்தி தேசிய ரீதியிலான பரிசுகளை வழங்குதல் பற்றியும் மாணவர்களிடையே தெளிவுபடுத்தப்பட்டது.

முதியோர் தேசிய செயலகம் மூலம் அனுப்பப்பட்ட சுமார் 200 போட்டிக்கான அப்பியாசப் புத்தகங்களை மாவட்ட முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. தனுசியா பாலேந்திரன் அதிபரிடம் கையளித்தார்.

போட்டிகளை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் அதிபர் மூலம் ஆசிரியர்களுக்கு எடுத்து விளக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக சமூகசேவை உத்தியோகத்தர் இராஜசேகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தரூபன், பாலேந்திரன், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முதியோர் விழுமியங்களை மாணவர்கள் மத்தியில் விதைப்பதற்கு மிகச் சிறந்த போட்டியாக இது அமையும் என அதிபர் தெரிவித்தார். (2-5-250)

## முல்லைத்தீவில் 15 ஆயிரத்து 682 புதிய வீடுகள் தேவையாகவுள்ளது

### ஒருங்கிணைப்பு அபிவிருத்திக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு இன்னமும் 15 ஆயிரத்து 682 புதிய வீடுகள் தேவையாக உள்ளதாக மாவட்ட செயலகத்தால் மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 136 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மொத்தம் 41,367 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரைக்கும் 19, ஆயிரத்து 565 வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளதோடு, பகுதியளவில் சேதமுற்ற 3 ஆயிரத்து 418 வீடுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட மக்களில் பலர் குடும்ப உறுப்பினர்களை இழந்த நிலையில், ஒரு அங்கத்தவர் குடும்பங்களாகவும் மற்றும் 2 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களாகவும், மாறியுள்ளவர்களுக்கு இதுவரை வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லை.

இவர்களுடன், புள்ளித் திட்டங்கள் காரணமாக உள்வாங்கப்படுவதில் அதிகமான குடும்பங்கள் தகுதி பெறத் தவறியுள்ளமையால், பல குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

அத்துடன், மீள்குடியேற்றத்தின் பின்னர் திருமணம் செய்து கொண்ட பல குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

ஒட்டுமொத்தமாக இன்னமும் 15 ஆயிரத்து 682, குடும்பங்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளதுடன், 2 ஆயிரத்து 657 குடும்பங்களின் பகுதியளவில் சேதமற்ற வீடுகளும் திருத்தப்பட வேண்டியுள்ளது என புள்ளிவிபரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 990 வீடுகளும், துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 175 வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 2, ஆயிரத்து 136 வீடுகளும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 5 ஆயிரத்து 168 வீடுகளும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 4 ஆயிரத்து 616 வீடுகளும், வெலிஓயா பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 597 வீடுகளும் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 489 வீடுகளும், துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 2, ஆயிரத்து 25 வீடுகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 3, ஆயிரத்து 180 வீடுகளும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 4 ஆயிரத்து 929 வீடுகளும், புதுகுடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 6 ஆயிரத்து 870 வீடுகளும், வெலிஓயா பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 72 வீடுகளும் பல்வேறு திட்டங்களுக்கு ஊடாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)

# தமிழரை மூன்றாம் தரப்பாகத்தான் அரசாங்கம் கருதி செயற்படுகிறது

## சாந்தி எம்.பி.குற்றச்சாட்டு



உடனடியாக தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைக் கூட இந்த அரசாங்கம் தீர்க்காத நிலை தான் காணப்படுகின்றது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

வன்னியின் தற்போதைய நிலை தொடர்பில் கேட்ட போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவடைந்து 9 வருடத்தை நோக்கி செல்கின்ற நிலையிலும் வன்னியில் மக்களினுடைய அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைக் கூட இந்த அரசு தீர்க்காத ஒரு நிலையில்தான்காணப்படுகின்றது. அந்த வகையில் பூர்வீகமாக மக்கள் வாழ்ந்த நிலங்கள் விடுவிக்கப்படாமை அடிப்படை பிரச்சனை தீர்க்கப்படாமைக்கு ஒரு எடுத்துக்காட்டு. இதில் மக்கள் பூர்வீகமாக அந்நிலங்களில் வாழ்ந்தார்கள் என்பதற்கான பல ஆதாரங்கள், ஆவணங்கள் இருக்கின்றன. கொக்கிளாய், வட்டுவாகல், கேப்பாப்பிலவு, செம்மலை, அளம்பில், புதுக்குடியிருப்பு என முல்லைத்தீவு மாவட்டம் மட்டுமன்றி மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் பல காணிகள் விடுவிக்கப்படவில்லை.


மக்களிடம் காணிக்கான ஆவணங்கள் இருந்தும் அவை விடுவிக்கப்படாது இராணுவம், கடற்படை, விமானப்படை என்பன ஆக்கிரமித்து வைத்துள்ளன. இந்தக் காணிகள் விடுவிக்கப்படும் என கடந்த 8 வருடங்களாக மக்கள் காத்திருந்தார்கள். ஆனால் அவ்வாறு நடைபெறாமையால் தற்போது அந்தக் காணிகளை விடுவிப்பதற்காக மக்கள் சாத்வீக ரீதியாக வலிந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளுக்கு முன்பக்கமாக கொட்டகைகள் அமைத்து இரண்டு மாதங்களுக்கு மேலாக காணிகளை விடுவிக்குமாறு போராடி வருகிறார்கள். இதேபோன்று வன்னிக்கு வெளியே கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலும்- மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை செய்து வருகிறார்கள். இந்த அரசானது மக்களினுடைய நிலத்தில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைத்து அதனை விடுவிக்க முடியாது என தொடர்ந்து தெரிவித்து வருகின்றது.

இதனைவிட இந்த முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை மீன்பிடித் தொழில் மிகவும் பாதிப்படைந்துள்ளது. இது தொடர்பிலும் அரசாங்கத்திற்கு நாம் தொடர்ந்து தெரிவித்து வருகின்றோம். மத்திய மீன்பிடி அமைச்சர் முல்லைத்தீவுக்கு வந்த போது அரச அதிபர் தலைமையில் மீன்பிடிச் சங்கங்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடி மீன்பிடி அமைச்சருடன் கடற்கரைக்கு சென்று தென்பகுதி மீனவர்களின் வருகை, பொருத்தமற்ற மீன்பிடி முறைகளை பின்பற்றுவது தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தோம். இருப்பினும் அதனை அரசாங்கம் தடுக்காத நிலையில் மேலும் மீனவர்களுக்கு அனுமதி கொடுப்பதும், படகுகளுக்கு அனுமதி கொடுப்பதும், மக்களுடைய இறங்குதுறைகள், பாடுகளை சிங்கள மீனவர்களுக்கு வழங்குவதும் என மோசமான நிலைமைகள் தான் தொடர்ந்தும் இடம் பெற்று வருகிறது.

வாழ்வாதார ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் தொடர்ந்தும் இந்த அரசாங்கம் ஒரு பாராமுகமாக அல்லது தமிழரை மூன்றாம் தரப்பாக கருதி செயற்பட்டு வருகின்றது என்று தான் நான் கருதுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-5-250)

வன்னி வலம்

# வெடிக்காத நிலையிலிருந்த மூன்று கைக்குண்டுகள் மீட்பு



முள்ளியவளை முதலாம் வட்டாரப் பகுதியில் பழைய கிணறு ஒன்றை துப்புரவு செய்த வேளை வெடிக்காத நிலையில் இருந்த மூன்று கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் குறித்த பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வன்னியில் நடைபெற்று முடிந்த யுத்தத்தின் பின்னர் குறித்த வீட்டின் உரிமையாளரினால் மேற்படி கிணறு சுத்தம் செய்யப்பட்ட போதே கைக்குண்டுகள் மூன்று மீட்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் 59ஆவது படையணியினருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் கைக்குண்டுகளை மீட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை கடந்த கிழமையும் இக்கிணற்றினுள் இருந்து மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கிணற்றை தொடர்ச்சியாக துப்புரவு செய்வதற்கு தமக்கு அச்சமாக இருப்பதால் படைத்தரப்பினரின் உதவியை தாம் நாடியுள்ளதாகவும் கிணற்றின் உரிமையாளர் குறிப்பிட்டுள்ளார். (2-5-310)

# ஒலுமடு பகுதியில் வீசிய கடும் காற்றினால் பயன்தரும் மரங்கள் முறிந்து வீழ்ந்தன





ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடு 3 ஆம் கண்டம் கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 12.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை இடி மின்னலுடன் கூடிய திடீர் சூறாவளி, மழை காரணமாக மக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கற்சிலைமடு 3 ஆம் கண்டம் கிராமத்தில் இடி மின்னலுடன் கூடிய மழையாலும். மினி சூறாவளி காற்று காரணமாகவும் மக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர், இச்சம்பவத்தின் போது 2 குடும்பங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இதில், குடும்பம் ஒன்றின் வாழ்வாதாரத்திற்கு வழங்கப்பட்ட 2 இலட்சம் ரூபா பெறுமதியான 2 நல்லின பசு மாடுகள் இடி. மின்னல் தாக்கி இறந்துள்ளன.

இதேவேளை, பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டின் கூரை நேற்று முன்தினம் வீசிய சுழிக் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளது.

இந் நிலையில், இந்த இரண்டு குடும்பங்களும் இச் சம்பவம் தொடர்பாக கிராம அலுவலரிடம் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் கடும் காற்றுடன் கூடிய மழையினால் பலவீடுகள், பயிர்கள் என்பன சேதமாகின.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடியுடன் கூடிய காற்று வீசியதுடன் மழையும் பெய்தமையால் ஆயிரக்கணக்கான பயன் தரும் பப்பாசிமரங்கள், முருங்கை, வாழை, மா போன்ற மரங்கள் முறிந்தன.

அத்துடன் வீடுகள், பொது நோக்குமண்டபம், அரசி ஆலை ஆகியவற்றின் கூரைகள் காற்றினால் பிரித்தெறிந்த நிலையிலும் ஒலுமடு, கீரிசுட்டான் கிராமங்களில் உள் வீதிகளும் மரங்கள் முறிந்து போக்குவரத்திற்கு தடைகள் ஏற்பட்டன. (2-5-15)

# பலத்த காற்றினால் வீடு முற்றாக சேதம்



வவுனியா சூநனாமடுவில் நேற்று முன்தினம் மழையுடன் வீசிய கடும் காற்றினால் பிரதேசத்தில் வசிக்கும் இளம் குடும்பஸ்தரின் தற்காலிக வீடு பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நடைபெற்ற போது வீட்டில் யாரும் இல்லாததால் தெய்வதீனமாக உயிராபத்துக்கள் ஏற்படவில்லை எனவும் வீட்டுப் பொருட்கள் யாவும் ஆங்காங்கே வீசப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-250)

# பிரதேச செயலக ஊழியர்களுக்கு சமூக பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கு



வவுனியா பிரதேச செயலக ஊழியருக்கு சமூக பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலக அலுவலகர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா பொலிஸாரினால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் சமூக பிரச்சினைகள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன், வன்னிக்கான தமிழ்மொழி`அவசர சேவை இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது.(2-5-250)

# தேசிய இளைஞர் தின நிகழ்வையொட்டி விழிப்புணர்வு ஊர்வலம், இரத்ததானம்





(பனிக்கன்குளம்)

தேசிய கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய இளைஞர் மன்ற முல்லைத்தீவு மாவட்ட காரியாலயம் ஏற்பாடு செய்யவிருக்கின்ற தேசிய இளைஞர் தின நிகழ்வுகள் நேற்றைய தினம் நடைபெற்றது.

அந்த வகையில் "தூய்மையான இலங்கைக்கு இளைஞர்களின் குரல் இருக்கின்றது" என்ற தொனிப்பொருளில் நேற்றுக் காலை முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் இருந்து ஊர்வலமாக அவர்கள் பதாகைகளை தாங்கியவாறு விழிப்புணர்வு ஊர்வலமொன்றை நடத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.


இதன்போது சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு சுவரொட்டிகளை ஒட்டியதோடு வாகனங்களிலும் அது தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டியவாறே அந்த பேரணி முல்லைத்தீவு மேற்படி சங்க மண்டபத்தை வந்தடைந்ததும் அங்கே அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

எனவே இந்த நிகழ்வை முன்னிட்டு இரத்ததான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கே மாவட்ட இரத்த வங்கியினர் வருகை தந்து இரத்தம் சேகரிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய உதவி மாவட்ட செயலாளர் லதுமீரா. தேசிய இளைஞர் மன்றத்தினுடைய மஹரகம தேசிய காரியாலயத்தினுடைய உதவிப் பணிப்பாளர். முல்லைத்தீவு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுடைய உதவிப் பணிப்பாளர். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி உட்பட இளைஞர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (2-5-281)

# நல்லிணக்கத்தை குழப்புவோருக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கவும்

## டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து



(கொழும்பு)

**நாட்டில் அண்மைக்காலமாகத் தலைதூக்கியுள்ள இனவாதச் செயற்பாடுகள் நல்லாட்சி அரசாங்கத்தின் நல்லிணக்கப் பயணத்தில் இடையூறு விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற் கட்டளை 23/2 இன் கீழ் கேள்வியெழுப்பும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "நாட்டில் மீண்டும் இனவாத நடவடிக்கையைத் தூண்டும் வ்கையில் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அதற்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"அம்பாறை மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை வைப்பதற்கு முயற்சி செய்த சம்பவத்துடன் இனவாத நடவடிக்கைகள் தலைதூக்கியுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் சுமார் 40 பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள் மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

"கடந்த 18ஆம் திகதி தெற்கிலிருந்து வந்த சிலர் கிளிநொச்சி நகரத்தில் தேசியக் கொடியில் தமிழ், முஸ்லிம் மக்களை குறிக்கும் நிறங்களை அகற்றிவிட்டு கொடியை பறக்கவிட்டுள்ளனர்.

"இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக மீண்டும் அசாதாரண நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் சூழ்நிலையில் அதனைக் குழப்பும் வகையில் செயற்படும் இவ்வாறானவர்களுக்கு எதிராக அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)







சமூக சிற்பிகள் வழங்கும் மௌன வலிகளின் வாக்குமூலம் நூல் வெளியீடும், சங்கீத இசைக் கச்சேரியும் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (படங்கள்:- உ.சாளின்)

## கல்விமாணிப்பட்ட நிறைவு விழா

தேசிய கல்வி நிறுவகத்தின் யா/ நெல்லியடி மத்திய கல்லூரி T39 பிராந்திய நிலையத்தில் 2011/2013 கல்வியாண்டில் ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட கல்விமாணி பட்டக்கற்கை நெறியில் கல்வி பயின்று கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேறியவர்களுக்கான நிறைவு விழா நாளை 27ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யா/விக்னேஸ்வராக்கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்விமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் திருமதி செல்வராணி இளங்கோ, நெல்லியடி மத்திய கல்லூரியின் நிலைய இணைப்பாளர் எஸ்.சேதுராஜா, துறைசார்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் கல்வியியலாளர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். வடமராட்சியில் முதன்முதலாக தேசியக்கல்வி நிறுவகத்தின் பிராந்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 80 மாணவர்கள் சித்தியடைந்து கௌரவிப்பு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-108)

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(இளவாலை)

இளவாலை புனித வளனார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும். முன்பள்ளியின் நிர்வாக குழுத்தலைவர் கே.தீபச்சந்திரன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்பணி பி.பிறைன் அடிகளார் கலந்து கொள்வார். (இ-104)


## மஹோற்சவ விஞ்ஞாபனம்

வட்டுக்கோட்டை துணவி தெவிண்டப்பிராய் முருகமூர்த்தி ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (இ-7)

## தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்தி செயலமர்வு

வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 10,11 வகுப்புக்களில் நீருயிர்வளத் தொழில்நுட்பப் பாடத்தினை கற்பித்து வரும் ஆசிரியர்களுக்கான ஆதார பயிற்சி செயலமர்வு கடந்த 22, 23, 24 ஆம் திகதிகளில் தேசிய கல்வி நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தில் 8.30 தொடக்கம் 4.30 மணி வரை நடைபெற்றது. இச் செயலமர்வில் தேசிய கல்வி நிறுவகத்தின் தொழில்நுட்பப் பாட இணைப்பாளர் திருமதி சம்பிக்க பேரேரா, வயம்ப பல்கலைக்கழக மீன்பிடியியற்றுறைத் தலைவர் மற்றும் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக துறைசார் தலைவர், வடமாகாண தொழில்நுட்பப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் லெனின் ஆகியோர் கலந்து கொண்டனர்.பாடசாலைகளில் இப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயன் பெறும் வகையில் களப்பயணம், நேரடியான அனுபவப்பகிர்வு மற்றும் துறை சார்ந்த முகாமைத்துவ அறிவு பெறுதல், வினைத்திறனான கற்பித்தலை மேற்கொள்வது என்பவற்றை உள்ளடக்கியதாக இச் செயலமர்வு நடைபெற்றது. (இ-108)






சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களது பயன்பாட்டிற்கென 300 பிளாஸ்ரிக் கதிரைகள் நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டது. சமூக சேவையாளரும் இலங்கை மனித உரிமைகள் இயக்க யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கலாநிதி வை.சிவராசா (சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்ற செயலாளர்), ஸ்ரார் ஹோட்டல் உரிமையாளர் வே.நவநீதன், லக்ஷ்மி றேடேஸ் உரிமையாளர் சொ.பாக்கியராசா ஆகியோரினால் 100 கதிரைகள் வீதம் மொத்தம் 300 கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (படங்கள்:-விஜயவாசன்)



யாழ்.கரவெட்டி பிரதேச செயலகத்தில் கடந்த 23 ஆம் திகதி நடமாடும் சேவை நடைபெற்றது.கரவெட்டி உதவி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (படங்கள்: மகாலிங்கம்)



யாழ்.கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர், நெல்லியடி பொலிஸார் ஆகியோர் இணைந்து டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது கரவெட்டி ராஜ கிராமத்தில் அமைந்துள்ள வெட்டுக்கிணற்றில் கழிவுநீர் தேங்கி சுகாதாரச் சீர்கேட்டுடன் துர்நாற்றம் வீசியதை அவதானித்தனர். இக்கிணறு கரவெட்டி பிரதேச செயலகத்தினாலும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினாலும் உறுதிமொழி அளித்து இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். கரவெட்டி ராஜகிராமத்தில் அமைந்துள்ள இடத்தில் இருக்கும் குளிப்பதற்கு பாவிக்கும் கிணற்றில் இருக்கும் கழிவு நீர் குழிக்குள் தேங்கி நிற்பதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. இதனால் துர்நாற்றம் வீசுகிறது. டெங்குநோய் வரக்கூடிய நிலையில் உள்ளதாக பார்வையிட்டபோது கரவெட்டி சுகாதார உத்தியோகத்தரும் நெல்லியடி பொலிஸாரும் பார்வையிட்டனர்.இக்கிணறு கரவெட்டி பிரதேசசெயலகத்தினாலும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையினால் உறுதி மொழி அளித்து இதுவரை புனரமைப்பு செய்யவில்லை என பொதுமக்கள் விசனம் கொண்டுள்ளனர். (படங்கள்: மாகாலிங்கம்)

## இந்தியப் பிரஜைகளுக்கான Open House கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இந்தியத் துணைத்தூதரகத்தால் வட மாகாணத்தில் வசிக்கும் அல்லது பணிபுரியும் இந்தியப் பிரஜைகளுக்கான Open House கலந்துரையாடல் எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இல. 14, மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் விசா, கடவுச் சீட்டு, இந்திய வெளிநாட்டுப் பிரஜாவுரிமை மற்றும் தூதரக சேவைகள் உள்ளடங்கலாக அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதில் அக்கறையுள்ள வடமாகாணத்தில் வசிக்கும் இந்தியப் பிரஜைகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

**டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி**

பைவர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும். (சி.8589)

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 222 8680, 077 592 5088

**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூ.100), சில்லறையாகவும் (ரூ.110) பெற்றுக்கொள்ளலாம். (சி-7888)

**சிவா நறுமணப் பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) - 021 222 2567

## விளையாட்டு விழா

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் விளையாட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

ந.குமரஸ்ரீ தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.கோப்பாய்சரவணபவானந்த வித்தியாலய அதிபர் ஏ.ஆனந்தராசா, ஓய்வு நிலை செயலாளரும் சங்க போஷகருமான செ. செல்வரத்தினம், ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி ஞானேஸ்வரிசெல்வரத்தினம், கே. எஸ். இந்திரகுமார்(தொண்டு ஆர்வலர் லண்டன்) திருமதி. இரஜனி இந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

**மனதில் சுமையா?**

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

*உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.*

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை

021 222 8117, 077 900 877

(தினமும் காலை 9.00 - 1.00)

வவனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1979 பூசம் 01, 5இல் செவ்வாய், சந்திரன் கிரக பாவம் 35 லண்டனில் கல்விகற்று தொழில் புரியும் மணமகனுக்கு (Not PR) லண்டனில் PR உள்ள மணமகள் தேவை. (9008)

தொடர்பு : 077 727 4360

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பிதழும்

### அமரர் திருமதி நடராசா அன்னபூரணம்



| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 27 . 07 . 1948 | 28 . 04 . 2017 |



28.04.2017 அன்று இறைபதமடைந்த எமது அன்னையின் இறுதி நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் மருத்துவமனையில் இருந்த காலப்பகுதியில் சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

26.05.2017 இன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனை தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)**

வேம்பொடுகேணி, பளை. (C-8672)

தகவல் : குடும்பத்தினர் 0771486404

## யா/புற்றளை மகா வித்தியாலயம், புலோலி.

### புதிய வகுப்பறைத் தொகுதி கேட்போர்கூடம் திறப்புவிழா



**காலம் : 27.05.2017**

**சனிக்கிழமை**

**முற்பகல் : 10.30 மணி**

**தலைவர்**

திரு.ஆறுமுகம் சிவநாதன் (அதிபர்)

**பிரதம விருந்தினர்**

திரு. தம்பிராசா குருகுலராசா

(கௌரவ அமைச்சர், கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

கௌரவ ச.சுகிர்தன்

(வடமாகாண சபை உறுப்பினர்)

கௌரவ வே.சிவயோகன்

(வடமாகாண சபை உறுப்பினர்)

கௌரவ க.தர்மலிங்கம்

(வடமாகாண சபை உறுப்பினர்)

கௌரவ M.K.சிவாஜிலிங்கம்

(வடமாகாண சபை உறுப்பினர்)

கௌரவ சி.அகிலதாஸ்

(வடமாகாண சபை உறுப்பினர்)

உயர்திரு இ.ரவீந்திரன்

(செயலாளர், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு)

திரு. செ.உதயகுமார்

(மாகாண கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்)

திரு.சி.புஸ்பலிங்கம்

(வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (C-8683)

**பாடசாலைச் சமூகம்.**

# கண்ணியமாய் தன் கடமை



**ஆசிச் செய்தி**

சைவமும் தமிழும் இனிதே நிரம்பி ஊறுகின்ற யாழ்ப் பாண நன்னகரின் விளங்கு புகழ் சான்றோர் உருவான தீவகத்தின் வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாள ராக இருந்து இம்மண்ணிற்கு பல ஆயிரம் கற்றவர் மாணவ சமுதாயத்தை உருவாக்கி அளித்த திரு.பொன்னம் பலம் சிவானந்தராஜா அவர் கள் மணிவிழாக் காணும் வேளை அவர்க்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது மனநிறைவைத் தருகின்றது. எழுத்தறிவித்தவன் இறைவன். ஆனாலும் இவ் ஆசிரியத் தொழிலை அந்த இறைவனாலும் ஆற்ற முடியாது. அப்படிப்பட்ட பணியில் சிவானந்தராஜா அவர்கள் பல வருடங்கள் சேவையாற்றி இச் சமூகத்திற்கு நல்ல ஒழுக்கசீலர்களாக மற்றவர்களுக்கு வழிகாட்டி உள்ள நல்லதொரு மாணவர் பரம்பரையை உரு வாக்கிச் செல்வது இறைபணி என்றே கருதுகின்றேன். மேலும் அவர் இவ் ஓய்வுக்காலத்தில் சந்தோசமாக, மன நிம்மதியாக, உடல் நலத்தோடு வாழ எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.


**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹாசந்நிதானம்,**
**நல்லை ஆதீனம்.**



**வாழ்த்துச் செய்தி**

"அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்" என்னும் ஆன்றோர் வாக் கிற்கு அமைவாக கல்வி கேள்விகளால் உயர்ந்து அன்பும் அடக்கமும் மானிடப் பண்பும் அழகூட்ட பல்துறை ஆற்றல்களால் கல்வித் துறையை அலங்கரித்த வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களது அறுபதாவது அகவையில் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கல்வி கற்கும் காலத்தில் சிறந்த மாணவனாகவும் பின் பல்வேறு பட்டங்களையும் பெற்று 01.03.1979 ஆம் ஆண்டு தொடக்கம் 34 வருடங்கள் சிறந்த ஆசிரியராகவும் பணிபுரிந்து 15.02.2013 தொடக்கம் வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளராக நான்கு வருடங் கள் திறம்படப் பணியாற்றினார். போராட்ட காலங்களில் பெரும் பாதிப்புக்குட்பட்டிருந்த இப்பிரதேசத்தை மீண்டும் தொடங்கும் மிடுக்குடனும் புது உத்வேகத்தை ஊட்டிய பெருமை இவரையே சாரும். அழிக்கப்பட்ட வேலணை மண்ணை அழகூட்டி கல்வியறிவினைப்புகட்டி மக்கள் மனதிலும் மாணவர் மனதிலும் உள்ள அறியாமையினை அகற்றி, அறிவை ஊட்டி பல்துறைப் பரிமாணப்பாங்குடைய பண்பாலும் திறனாலும் தனக்கெனவோர் செயலொழுங்குப் பாணியும் துணிவும் ஒருங்கே இணைந்த ஆளுமைமிக்க இவர் மென்வாக்காலும் இன்முகத்தாலும் மாற்றாரையும் கவர்ந்து செயலாற்றும் திறன் கொண்ட கல்விச் சிந்தனையும் காலநேர நெருக்கடியிலும் தன் கடன் பணி செய்து கிடப்பதே என வாழ்ந்தவர் என்றால் மிகையில்லை. கற்றுணர்ந்த குண வோன் தனை கல்லை, காரைநகரின் மைந்தனை அறுபது அகவையாம் மணிவிழா நாளில் சீரும் சிறப்பும் பேரும் புக ழும் கொண்டு நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி விஜயகலா மகேஸ்வரன் (பா.உ.)**
**சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும்**
**யாழ்.- கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு**
**இணைத்தலைவரும்.**



**வாழ்த்துச் செய்தி**

வேலணைக் கல்விக் கோட் டக் கல்விப் பணிப்பாளராக திரு. பொன்னம்பலம்சிவானந் தராஜா அவர்கள் சேவை ஆற்றி படிப்படியாக வளர்ந்து கோட்டக் கல்விப்பணிப்பாள ராக 04 வருடங்கள் சேவை யாற்றி, இன்று மணிவிழா நாயகனாக வீற்றிருக்கிறார். அவரது சேவையைப் பாராட்டு வதில் மகிழ்வடைகிறேன். வெறுமனே கல்வியை மட்டும் போதிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது மண்ணில் பிறந்த குழந்தை வாழ்வில் நெறிபிறழாது வாழத் தேவையான ஒழுக்கம், பண்பு, ஆன்மீகம், பொது அறிவு போன்ற வற்றையும் மாணவ சமூகத்திற்கு தேவையான ஆற்றல், ஊக்கம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை அனைத்தையும் அவர்களுக்கு உட்புகுத்தி, பண்புகள் மானுடர்களாக உரு வாக்கி சமூகத்திற்கு வழங்குவதில் ஆசிரிய சேவை மகத்தா னது. இவ்வாறே தனது உன்னத பணியை செவ்வனே செய்து தன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் திரு.பொன் னம்பலம் சிவானந்தராஜா அவர்கள். இவரது இளைப்பாற்றுக் காலத்தில் மனநிறைவுடன் மகிழ்வாக வாழ வாழ்த்துவதோடு மணிவிழா சிறப்புடன் நடைபெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**த.குருகுலராசா,**
**கல்வி அமைச்சர், வடக்கு மாகாணம்.**



**ஆசிச் செய்தி**

கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளாக கல்விச்சேவையில் ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்விப்பணிப் பாளராக அரும்பெரும் சேவை யாற்றி ஓய்வுபெறும் எமது அன்புக்கும் பெரு மதிப்பிற்குமுரிய உயர்திரு பொன் னம்பலம் சிவானந்தராஜா அவர் களுக்கு எமது யாழ்ப்பாண கத்தோ லிக்க மறைமாவட்டம் சார்பாக மன மார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல் களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி யடைகின்றோம். கல்விப்பணிக்கென தான் பெற்றுக்கொண்ட அழைப்பை இறைபணியாக ஏற்று அப்பணியின் தாற்பரியத்தைத் தெளிவாக உணர்ந்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கல்விச்சமூகத்தை ஒரு சொத்தாக மதித்து இவர் ஆற்றிய அளப்பரிய பணியினால் பலனடைந்து வாழ்வில் உயர்ந்து நிற்கும் ஒவ்வொரு உள்ளம் சார்பாகவும் எமது நன்றி மலர்களை சமர்ப்பிக்கின்றோம். இலங் கைத்தீவிலேயே மிகவும் நெருக்கடிகளும் கஷ்டங்களும் மலிந்த தீவகத்தில் அவற்றை புரிந்து கொண்டு மத வேறுபாடுகளின்றி மனித மாண்பினை மதித்து இவரால் மேற்கொள்ளப்பட்ட பல வெற்றிகரமான முன்னெடுப்புக்களுக்காகவும் அதனால் மக்கள் அடைந்த நன்மை களுக்காகவும் எமது மனப்பூர்வமான வாழத்துக்களைத் தெரிவிக்கின் றோம். இறை ஆசீர் இவர்மீது நிறைவாகப் பொழியப்படவும், அமைதியோடும் மகிழ்ச்சியோடும் நல் ஆரோக்கியத்தோடும் தனது ஓய்வுக்காலத்தில் இன்புற்று வாழவும் அன்போடு வாழ்த்தி நிற்கின் றோம்.


**அருட்திரு.ப.யோ.ஜெபரட்ணம்,**
**குரு முதல்வர்,**
**யாழ். கத்தோலிக்க மறைமாவட்டம்.**



**வாழ்த்துச் செய்தி**

கல்வித்திணைக்களத்தின் வேலணைக் கோட்டத்தில் மிக நீண்டகாலமாக கோட் டக் கல்விப்பணிப்பாளராக பணி யாற்றி அதிபராக, நல் ஆசானாக அரும் சேவையாற்றி ஓய்வு பெறும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.பொன் னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் தமது 60ஆவது அகவையைப் பூர்த்தி செய்து அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையொட்டி நடைபெற விருக்கும் பிரிவு உபசார வுழாவிற்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைப்பதில் மகிழ்வடைகின்றேன். எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற முதுமொழிக்கு அமைவாக கற்பித்தல் பணியை கடந்த 38 ஆண்டுகள் சிறப்புற நடத்தி ஆசிரிய ராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக பல பதவிகளை வகித்ததுடன் மட்டும் நின்றுவிடாது கற்பித்தலுடன் இணைந்து தம்மையும் கல்விப்புலத்தில் வளப்படுத்திக் கொண்ட இப்பெருமகனின் ஓய்வு கல்வித்துறைக்கு ஒரு இழப்பாக இருக்கும் என எண்ணுகின் றேன். அறுபது வயதில் அரச சேவையில் இருந்து ஓய்வுபெறுவது என்பது தவிர்க்க முடியாத ஒரு விடயமாக உள்ள போதிலும் ஓய்வுக் காலத்திலும் தமது ஆற்றலையும் அறிவையும் வடபுலத்தின் கல்வி மேம்பாட்டிற்கு அர்ப்பணிக்க முன்வர வேண்டும் என இத்தருணத்தில் விநயமாக வேண்டுவதுடன் அவரின் ஓய்வுக்காலம் சுபீட்சமானதாக வும் சுகபலத்துடன் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேள்.

**நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்,**
**முதலமைச்சர், வடக்கு மாகாணம்.**



**வாழ்த்துச் செய்தி**

உயர் திரு பொன்னம்பலம் சிவானந் தராஜா அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு வெளியீடு செய்யும் பத்திரி கைக்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதில் பெருமையடைகின்றேன். திரு வாளர் பொன்னம்பலம் சிவானந்த ராஜா அவர்கள் ஆரம்பக்கல்வியினை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியிலும் இடைநிலை மற்றும் உயர் நிலைக் கல்வியினை யாழ்.மத்திய கல்லூரி லும் கற்றுக்கொண்டார். விஞ்ஞான விசேட பயிற்சினை NIE யிலும் கல்விமாணிப் பட்டத்தினையும் பெற்று பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமாவினை பெற்ற அதேவேளை நல்லாசிரியராக, முதலாந்தர அதிபராக விளங்கிய பெருமைக்குரியவர். 38 வருடங்களாக நல்லாசானாக, அதிபராக மற்றும் கோட்டக்கல்வி பணிப்பாளராக கல்விச் சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றி மணிவிழா காணும் இவ்வேளை வெளியீடு செய்யும் சிவா பத்திரிகை மலர்க்கு முழு முயற்சியுடன் முனைந்திருப்பது போற்றுதற்குரியது. மணிவிழா நாய கன் பண்பின் சிறப்பை பார்புகழ மெச்சுதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும் இறைவனைப் பிரார்த்தித்து என் நல்வாழ்த் துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்.**



**வாழ்த்துச் செய்தி** : ஆசிரிய சேவையில் கணித ஆசிரியராகச் சேவையில் இணைந்த இவர் சிறந்த பணியினை ஆற்றியவர். தொடர்ந்து யா/ காரை இந்துக் கல்லூரியின் அதி பராகப் பணி செய்து காரை மண்ணின் மாணாக்கர் பல்துறை விற்பன்னராக ஊன்று கோலானவர். அர்ப்பணிப்புடனான இவரது சேவை பாராட்டப்படவேண்டியது. பின் 2013 ஆம் ஆண்டளவில் தீவக வலயத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இணைந்து கொண்டார். தீவக மாணவரின் நலனிலே அக்கறையோடும் ஆசிரியர், அதிபரிடத்தே நன்மதிப்பைப் பெற்றுப் பணியாற்றிய பெருமை இவரையே சேரும். வசதியையும் வாய்ப்பினையும் பாராது சொந்த நலனை எண்ணாது ஊரையும் உறவுகளையும் நேசித்தவர். தமது வாழ்க்கை எனும் பெரும் பயணத்தில் எமது கோட்டத்தோடு தம்மை இணைத்து உழைத்த இவரைப் பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் பெருமைப் படுகின்றேன். மானிடப் பிறவிக்கு மாண்பினை உட்பாய்ச்சும் கல்வி எனும் கருவூலம் நல்லார் கைபட்டு வெளிப் படுத்தப் பட்டால் அந்தப் பிரதேசமே ஏற்றம் பெறும் என்பதுண்மை. தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார் எனும் வாக்கிற்கமைய கோட்டம் சார் கல்வி நிலை ஏற்றம் பெற முழுமையாக உழைத்த விழா நாயகனை வானகமும் வாழ்த்தும். அத்தோடு எனது வாழ்த்தும் உரித்தாகட்டும். சகல நலன்களும் பெற்று குடும்ப சமேதரராய் நீடூழி வாழ எல்லாம் வல்ல ஈழ சிதம்பரேஸ்வரர் தாள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.


**சு.சுந்தரசிவம், வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்.**

## உயர்திரு. பொ.சிவானந்தராஜா அவர்



### உயர்திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா


தந்தை :- இராசையா பொன்னம்பலம்
தாய் :- பொன்னம்பலம் நாகம்மா
மனைவி :- சி.இராஜேஸ்வரி
பிள்ளைகள் :- சிவபிருந்தன் (கொழும்பு)
சிவவதனி (லண்டன்)
மருமக்கள் :- சி.துளசி
த.விமலாக்ரன் (லண்டன்)
பேர்த்தி :- வி.விமிதா
கல்வி :- ஆரம்பக்கல்வி :-யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்
இடைநிலை, உயர்நிலைக் கல்வி :- யாழ்.மத்திய கல்லூரி
தொழிற்றகைமைகள் :- விசேட பயிற்சி-விஞ்ஞானம்
கல்விமாணி NIE
பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா - NIE
அதிபர் தரம் :- I



**வாழ்த்துச் செய்தி**

பணியால் சிறந்து பணி வால் உயர்ந்த உயர்திரு. பொன்னம் பலம் சிவானந் தராஜா ஐயா அவர் க்கு வாழ்த்துரை வழங்குவதற்கு வயதில்லை என்றாலும் தந்தபணி தரமாய் அமைய வேண்டும் என்ற அவரின் வழிகாட்டலுக்கேற்பவே நானும் ஒருவனாய் வாழ்த்து கின் றேன். சிவானந்தராஜா சேர் என் றாலே தனி விசேட மிருக்கும். பல்துறை ஆளுமை கொண்ட சேர் அவர்கள் நிமிர்ந்து நிற்பது அவரது திறனின் அடை யாளம். கடந்த நான்கு வருடங்களாக இவரது வழிநடத்தலின் கீழ் பணி புரிந்த வாய்ப்பு எனக்கு இறைவன் அளித்த இன் னொரு கொடை. கடினமான வேலைகளைக் கூட இலகுவாய் இயன்றவரை முடிப்பார். சிக்கலான பிரச்சினைகள் எழுகின்ற வேளை யாருக்கும் பாதகமின்றி தீர்க்கமாய்த் தீர்மான மெடுப் பார். இவருடைய ஓய்வுக்காலம் சிறந்து விளங்க இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.பகீரதன்,**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**கோட்டக்கல்வி அலுவலகம்,**
**வேலணை.**




தொகுப்பு : T.தயாபரன், ஆசிரியர் மண்டைதீவு மகாவித்தியாலயம், செயலாளர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், தீவகம்.

ப.பகீரதன், அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கோட்டக்கல்வி அலுவலகம், வேலணை.

# மையில் உயர்ந்தோனுக்கு...

## ா அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்



**தராஜா** (SP.Trd.Sc., B.Ed (HONS) School. mGT, SLPS - I)

**சேவை விபரம்**

வ/புளியங்குளம் - G.T.M.S.ஆசிரியர் 01.03.1979 - 26.06.1980
வ/கோவில்புதுக்குளம் A.M.T.M.S. -
ஆசிரியர்-27.06.1980 - 18.01.1982
பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை
ஆ.மாணவர் - 19.01.1982 - 31.12.1983
வவுனியா - CCTM School ஆசிரியர் - 01.01.1984-30.01.1986
வவுனியா மகா வித்தியாலயம் - ஆசிரியர்-01.02.1986-31.12.1988
யாழ்ற்ரன் கல்லூரி-காரைநகர் - ஆசிரியர்-01.01.1989-31.05.1992
யா/சென்மேரிஸ் வித்தியாலயம் (O.L.R.) -
ஆசிரியர் - 01.06.1992 - 31.12.1997
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி - ஆசிரியர்-01.01.1998-31.12.2005
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்-அதிபர் - 01.01.2006-15.06.2010
யா/Dr.தியாகராஜா ம.மகா வித்-அதிபர்-16.06.2010-14.02.2013
கோட்டக்கல்வி அலுவலகம் வேலணை கோ.க.ப. -
15.02.2013 - 26.05.2017
சேவைக்காலம்-38வருடங்கள் (கோட்டக்கல்விப்பணிப்பாளர்-04வருடங்கள்)

**நிரந்தர முகவரி : சல்லை, காரைநகர்.**



**வாழ்த்தி எழுத முடியவில்லை - அதனால் வணங்கி எழுதுகின்றேன்...!!!**


1979 ஆம் என்தாயின் கருவறையில் வெளிவந்து விழித்துப்பார்த்தேன் - புளியங்குளத்தில் அதிபர் அறையில் கடமையேற்று கையொப்பம் இடுகிறீர்கள். உங்கள் குணத்திலும் குறை ஒன்றும் இல்லை கடமையிலும் கறையொன்றுமில்லை இந்த அதிசயம் 39 என்பது வருடங்கள் எப்படி உங்களால் சாத்தியமானது... கற்றுத் தாருங்கள் ஏனென்றால் நானும் நடக்க வேண்டிய நீண்ட தூரம் இருக்கிறது... பதவிக்காய் பணியாத நிமிர்ந்த நெஞ்சு - தீயதை எதிர்க்கும் துணிவு பாலையும் நீரையும் பிரித்துப் பார்க்கும் பக்குவம் - நீங்கள் மிதித்த புல்லும் நிமிர்ந்து பார்க்கும் பாசம் வேஷம் போடாத வெளிப்படை நடிப்புக்கும் வளையாத நாக்கு...!!

ஆற்றல் உள்ளவனை அரை நொடிக்குள்
அடையாளம் காணும் திறன்...!!
பூனை செல்லும் சிறிய வழிக்குள்
யானையை கூட போக வைக்கும் பேராற்றல்...!!
ஐயா! ஆண்டவா - எப்படி
இந்த ஆறடி மனிதனுக்கு அற்புத ஆற்றல் கொடுத்தாய்
தொடர்ந்து வருகின்றோம் - sir ple கற்றுத் தாருங்கள்
அம்புகளை ஏற்று மாலைகளை வெறுத்த பீஷ்மரே
இன்னும் இன்னும் இனிதே உயருங்கள் வணங்குகின்றேன்.

**T.தயாபரன், ஆசிரியர் மண்டைதீவு மகாவித்தியாலயம்**
**செயலாளர், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், தீவகம்.**

. செயலாளர்

**இப்பத்திரிகை மலருக்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், நிதிப்பங்களிப்புகள் வழங்கிய அனைத்துப் பெருந்தகைகளுக்கும் கோடி நன்றிகள் உரித்தாகட்டும்.**



**ஆசிச் செய்தி**

யாழ்ப்பா்ணத்தின் இதயபூமி என்று சொல்லப்படுகின்ற தீவகத்திலே நீண்டதொரு கல்விப் பாரம்பரியம் தோன்றி வளர்ந்திருக்கின்றது. அதில் குறிப்பிட்ட கட்டத்திலே இணைந்து கொண்ட திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் அர்ப்பணிப்புள்ள கல்விச் சேவையினை வழங்கியுள்ளார் என்பது யாவரும் அறிந்த உண்மை. வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரியினுடைய ஓய்வு சிறு மன வருத்தத்தைத் தந்தாலும் இது கட்டாயமானது என்ற அடிப்படையிலேயும் அவருடைய குடும்பத்தாருடன் மகிழ்ச்சிக்குரிய காலமாக அது அமைய வேண்டும் என்ற வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்று. குறிப்பாக கடல் கடந்த தீவுப் பாடசாலைகளிலும் அதிலும் நயினாதீவுப் பாடசாலைகளில் இவருடைய தரிசிப்பும் கண்காணிப்பும் அதிகமாய் இருந்ததை நான் அவதானித்திருக்கின்றேன். எனவே ஓய்வுக் காலத்தில் அவர் மகிழ்ச்சியாக மனநிறைவோடு வாழ வேண்டும் என ஆசி கூறுகின்றேன்.


**நவதஹல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ**
**நாகதீப விகாரை, நயினாதீவு**



**வாழ்த்துச்செய்தி**

பல காலம் நிறைபணி செய்து படிப்படியாய் உயர்ந்து அதனால் எல்லோர் மனதிலும் நிற்கின்ற உயர்திரு பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அறமும் ஆன்மீகமும் நிறையவே நிரம்பப் பெற்ற யாழ்ப்பாணத்தின் தக்கமிகு சான்றோர் சமுதாயத்தை தன்னகத்தே கொண்ட தீவகத்தில் வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து இன்று அகவை அறுபதுடன் ஓய்வுபெற்றுச் செல்கின்ற திரு. பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் இயல்பிலேயே ஆன்மீக சிந்தனை அதிகம் கொண்டவர். ஆற்றல் மிகுந்த ஆசிரியராக தன் பணி தொடங்கி 29 வருடங்கள் நல்லதொரு மாணவ சமுதாயத்தை உருவாக்க உழைத்தவர். அதில் வெற்றியும் கண்டவர். விஞ்ஞானத்தில் நல்லதொரு வினைதிறன் காட்டினாலும் அதற்குள் மெய்ஞானத்தையும் கலந்தவர். எம் தீவக கல்வி வளர்ச்சியிலேயே தனக்குரிய இடத்தினை தக்க வைத்துக் கொண்டு இன்று எல்லோர் மனதிலும் நிறைவானதொரு நிலையெய்தி ஓய்வு பெறுகின்றார்.

**டக்ளஸ் தேவானந்தா**
**நாடாளுமன்ற உறுப்பினர் (யாழ். தேர்தல் மாவட்டம்)**
**செயலாளர் நாயகம்**
**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி**



**வாழ்த்துச் செய்தி**

யாழ் / காரைநகரை பிறப்பிடமாக கொண்ட திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் 1989 தொடக்கம் 2005 வரை ஆசிரியராக யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரையில் உள்ள பிரபல பாடசாலைகளில் (யாழ் இந்துக் கல்லூரி உட்பட) கடமையாற்றியுள்ளார். மேலும் 2006 தொடக்கம் 2012 வரை யாழ்/கோப்பாய மகாவித்தியாலயம், யாழ்/Dr தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றியுள்ளார். 2013 இல் கோட்டக்கல்வி பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று வேலணையில் 26.05.2017 வரை கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார். இவரது 38 வருட சேவையை பாராட்டுவதுடன் அவரது சேவை கல்விப்புலத்திற்கு தொடர அவர் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் சி.விக்கினேஸ்வரன்**
**உப வேந்தர்**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**



**வாழ்த்துச் செய்தி**

காரை இந்துக்கல்லூரி அதிபராக வரலாற்றில் தடம் பதித்து கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். பின்னர் வேலணை கோட்டக் கல்வி அதிகாரியாக பதவியால் உயர்ந்தவர். பழகுவதற்கு எளியவர், இனியவர். ஆசிரியராக, அதிபராக,கோட்டக் கல்வி அதிகாரியாக கல்விப்புலத்தில் தடம்பதித்தவர். அதிபர்களை, ஆசிரியர்களை, மாணவர்களை அன்புக்கட்டுக் கோப்புக்குள் சுவாரசியமாக வைத்து நிர்வாகம் செய்யும் திறன் கொண்டவர். 39 ஆண்டுகள் கல்விப்புலத் தில் சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெறும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் ஓய்வுக்காலத்தில் தமது குடும்ப உறுப் பினரோடும் சமூகத்தோடும் நல்லுறவாடி, நற்பணியாற்றி மனமகிழ்வு பெற்று உடல் நலத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப்பெருமான் அருள்பாலிக்க வேண்டுமென வாழ்த்து கிறேன்.

**திருமதி.சிவந்தினி வாகீசன்,**
**பிரதி அதிபர்,**
**யா/காரைநகர் இந்துக்கல்லூரி,**
**காரைநகர்.**

**அன்புடன்**
**ஆசிரியரின் பழைய மாணவர்கள்**



**ஆசிச் செய்தி**

எப்பணியிலும் பெரியபணி ஆதலின் கல்விப்பணியே உயர்ந்தபணி. இறைவனால் படைக்கப்பட்ட குழந்தைகள் தாய், தந்தைக்குப் பிறகு குருவிடமே ஒப்படைக்கப்படுகின்றார்கள். அவனை இந்த உலகிற்கு நல்லவனாகக் கொடுக்கின்றபாரியபொறுப்பு ஆசிரிய சமூகத்திடமே ஒப்படைக்கப்படுகின்றது. இறைவனாலே கண்காணிக்கப்படுகின்ற இந்த உலகில் தரமான ஒரு சமுதாயத்தை உருவாக்குதல் மிகச் சிறந்த ஆசிரிய பணி. அதனை ஏற்று திரு. பொ.சிவானந்தராஜா அவர்கள் திறம்பட தன் பணியை நிறைவேற்றியிருக்கின்றார். கல்விதன்னிலும் கைப்பொருள் தன்னிலும் கல்வியே அதிசிறப்பானது என்பதை அகத்தில் இருத்தி அள்ளி அள்ளித் தெளித்து அறிவை வளர்த்து ஆளானவர்கள் அன்னாரை மறவார் என்றும் ஆதலால் அன்னாரின் நீண்ட வாழ்வுக்கும் இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

**அஸ்ஸலாம்**

**அல்ஹாஜ் ஏ.எம்.ஏ.அஸீஸ் மௌலவி (காஸிமி)**
**யாழ் - கிளி.மாவட்ட உலமாசபை சர்வமத தலைவர்**



**வாழ்த்துச்செய்தி**

திரு.பொன்னம்பலம் சிவாணந்தராஜா 1979 தொடக்கம் 2017 வரை மொத்தமாக 38 வருடங்கள் அரச பணியில் ஆசிரியராக, அதிபராக வவுனியா மாவட்டத்திலும் யாழ். மாவட்டத்திலும் கடமையாற்றியதுடன் ஒய்வு பெறும் சேவையின் நிறைவாக நான்கு வருடங்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளராக யாழ்.மாவட்டத்திலுள்ள வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்திலும் கடமையாற்றினார். அவர் தனது சேவைக்காலத்தில் கல்வியுடன் அறம், ஒழுக்கம் ஆகியவற்றை கற்பித்து இளம் சமூகத்தை நெறிப்படுத்தி நல்லாசிரியனாக, ஒரு உத்தமமான கல்வியியலாளனாக மிளிர்ந்திருப்பார். அவர் தனது ஓய்வுக்காலத்தில் உடல்-உள ஆரோக்கியத்துடன், பூரண ஆயுளுடன் தனது அன்புக்குரிய குடும்ப உறவுகள் சகிதம் அமைதியும் ஆனந்தமும் மிக்க வாழ்வைப் பெற இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து, வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**ரெஜினோல்ட் கூரே**
**ஆளுநர்,**
**வடக்கு மாகாணம்.**



**வாழ்த்துச் செய்தி**

வேலணைக் கல்விக் கோட்டத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.பொ. சிவாணந்தராஜா அவர்களது சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன் விஞ்ஞான பாடத்தில் விசேட பயிற்சியுடன் கல்விமாணிப் பட்டத்தினையும் பெற்ற இவர் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியராக சிறந்த பணியினை ஆற்றியவராவார். தனது சிறப்பான ஆசிரியப் பணி காரணமாக அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு அதிபர் பணியினையும் சிறப்பாக ஆற்றியுள்ளார்.சிறப்பான அதிபர் பணியின் காரணமாக 2013ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வில் செல்கின்றார். கோட்டக் கல்வி பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் தீவக வலயத்தினது கல்விச் செயற்பாடுகளிற்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இவரது ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்**



**வாழ்த்துச் செய்தி**

நல்ல கணவராக, நல்லாசிரியனாக, நல்லநண்பனாக, நல்ல தந்தையாக, பாராட்டு மிக்க அதிபராக , பண்பான அதிகாரியாக பரிணமித்து ஓய்வு பெறும் நண்பன் சிவாணந்தராஜாவின் அறுபதாவது அகவையில் வாழ்த்துவதைப் பெருமையெனக் கொள்கின்றேன். பண்பான மனிதர்களுக்கு அடையாளமூக விளங்குகின்ற யாழ். தீபகற்பத்தின் காரைநகர் பெற்றெடுத்த பொன்னம்பலம் - நாகம்மா தம்பதியரின் புதல்வன் சிவாணந்தராஜா எப்போதும் மகிழ்வான சிரிப் போடு நடமாடும் உன்னதமான நண்பன். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பெற்றெடுத்த அருமைக்குழந்தை. யாழ். மத்திய கல்லூரியின் மைந்தர்களுக்கே உரித்தான உன்னத பண்புகள் பலவற்றைப் பறைசாற்றி நிற்கும் நல்ல மனிதன். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து நண்பன் என்ற வகையில் பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியவர். ஆசிரியனாக, அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக இவர் அலங்கரித்த பதவிகள் அனைத்தும் சிறப்பானவை. நல்ல மனையாளோடு, நல்மக்கட்பேற்றுடன் நீண்ட ஆயுள்கொண்டு வாழவேண்டுமென்று அகவை அறுபதில் வாழ்த்துகின்றேன்.

**சரா.புவனேஸ்வரன்,**
**பொதுச்செயலாளர்,**
**இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம்.**

# மகோக்கனி மரத்தை நாட்டினார் மைத்திரி





கான்பராவிலுள்ள தேசிய தாவரவியல் பூங்காவுக்கு நேற்று முன்தினம் காலை விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவுஸ்திரேலியாவுக்கான தனது விஜயத்தை நினைவு கூரும் வகையில் அங்கு ஒரு மகோக்கனி மரக்கன்றொன்றை நாட்டினார்.

கான்பராவிலுள்ள தேசிய தாவரவியல் பூங்காவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, கான்பரா முதலமைச்சரைப் பிரதிநிதித்துவப்படுத்தி கான்பராவின் சட்டமா அதிபர் கோல்டன் ரம்சே வரவேற்றார். பூங்காவில் பதில் கடமை புரியும் நிறை வேற்று முகாமையாளர் ஸ்கொட்சேட்லரும் இந்த நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தார்.

அவுஸ்திரேலியாவுக்கான தனது விஜயத்தை நினைவு கூரும் வகையில் ஜனாதிபதி பூங்காவில் ஒரு மகோக்கனி மரக்கன்றொன்றை நாட்டி வைத்த பின்னர் உரையாற்றிய கான்பராவின் சட்டமா அதிபர் ரம்சே, சுற்றாடல் துறை அமைச்சராகவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இவ் விஜயம் உண்மையிலேயே ஒரு கௌரவம் எனத் தெரிவித்தார்.

2003 ஆம் ஆண்டு ஏற்பட்ட காட்டுத் தீயின் மூலம் சுமார் 20 ஆயிரம் ஏக்கர்கள் அழிவடைந்ததைத் தொடர்ந்து இப்பூங்கா தாபிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட நிறைவேற்று முகாமையாளர் சேட்லர், தற்போது இங்கு 44 ஆயிரம் விதைகள் நடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். இப் பூங்கா மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கான ஒரு தனித்துவமான சுற்றாடல் நிலையமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இத்தேசிய பூங்காவில் உள்ள இரண்டு காடுகள் சுமார் 100 வருடங்கள் பழைமை வாய்ந்தவையாகும்:

உலகின் மிகப்பெரும் அரிய மரங்களைக் கொண்ட பூங் காவாகத் திகழும் இங்கு 250 ஹெக்டெயர் நிலப்பரப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட 44 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரங்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அங்கு வைக்கப்பட்டிருக்கும் விருந்தினர் புத்தகத்திலும் ஜனாதிபதி கைச்சாத்திட்டார். (இ-7)


# முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை தடுத்து நிறுத்த பொலிஸார் தவறிவிட்டனர்

## மனிவுரிமைகள் செயற்பாட்டாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முஸ்லிம்களின் வணிக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்களுக்கு எதிரான தாக்குதல்களை தடுக்க பொலிஸார் தவறி விட்டதாக, மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான வணிக நிலையங்கள், பள்ளிவாசல்கள், மையவாடி (இடுகாடு) என்பனவற்றின் மீது கடந்த ஒரு மாத காலத்துக்குள் இடம்பெற்றுள்ள 20 வரையான தாக்குதல்கள் தொடர்பாக இதுவரையில்




பொலிஸார் எவரும் கைது செய்யப்படவில்லை.

இது தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் கருத்து வெளியிட்ட மனித உரிமை செயற்பாட்டாளராக விக்டர் ஐவன்,

"பொலிஸாரின் செயலற்ற தன்மையால் தான், 2014 ஆம் ஆண்டு 4 பேரைப் பலிகொண்டது போன்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் மீள நிகழ்த்தப்பட்டுள்ளன.

குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காததன் மூலம், இந்த நடவடிக்கைகள் தொடர்வதற்கு பொலிஸாரே பொறுப்பாளியாகியுள்ளனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான இந்த வன்முறைகளுக்கு பௌத்த அடிப்படைவாத அமைப்பு ஒன்றே காரணம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# விமான பயணிகள் காவிச் செல்லும் கைப்பை தொடர்பாக புதிய கட்டுப்பாடுகள் அறிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாகப் பயணம் செய்யும் விமானப் பயணிகள், கைப்பையில் காவிச் செல்லக்கூடிய பொருட்கள் தொடர்பாக புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அனைத்துலக சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் ஒழுங்குமுறைக்கு அமையவே, இந்தப் புதிய கட்டுப்பாடுகள் வரும் ஜூன் முதலாம் நாளில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளன.

புதிய நடைமுறைகளின் படி, விமானப்பயணிகள்கையில் காவிச்செல்லும் பையில் எடுத்துச் செல்லக் கூடிய திரவப் பொருட்களின் அளவு மட்டுப்படுத்தப்படவுள்ளது. இதில் திரவப் பொருட்கள் மற்றும் ஜெல் என்பன உள்ளடங்கும்.

எல்லா திரவப் பொருட்களும் வெளிப்படையான, முத்திரையிடப்பட்ட, 20X20 அளவுடைய பிளாஸ்டிக் பைகளிலேயே கொண்டு செல்ல வேண்டும்.

திரவப் பொருட்கள் ஒரு லீற்றரை விட அதிகமாக இருக்கக்கூடாது.

ஒவ்வொரு பயணியும் ஒரு பிளாஸ்டிக் பையை மாத்திரம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்.

மருந்துகள் மற்றும் குழந்தைகளுக்கான உணவுகள் மருத்துவரின் வழிகாட்டலுக்கு ஏற்ப அனுமதிக்கப்படும்.

புதிய கட்டுப்பாடுகளுக்கு பயணிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு சேவைகள் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது. (இ-7)

# 'தெரிவுக்குழு அமைக்கவும்'

## அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்து

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் இடங்கள் மற்றும் அவை அழிக்கப்படுகின்றமை தொடர்பில் முரண்பாடான புள்ளிவிபரங்கள் வெளியிடப்படுகின்றன. ஆகையால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தெரிவுக்குழுவை அமைக்கவேண்டும்" என, ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியல் கட்டளையின் கீழ், எம்.பிக்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் எழுப்பியிருந்த கேள்விகளுக்குப் பின்னர் கருத்துரைக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கோரி நின்றார்.

எனினும், இந்தக் கோரிக்கை தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அடிக்கோடு இடத் தெரியாதவர்கள்

ஒரு பாதசாரி நடுரோட்டில் நடந்து போகிறாரோ என ஹோர்ன் அடித்தால் அவர் திரும்பி நின்று ஒருமுறை முறைக்கிறார். கனலைக் கக்குகிறார்.

தன்மீது வண்டி மோதிவிடக் கூடாது என்பதற்குத்தானே எதிராளி ஹோர்ன் அடிக்கிறார் என்பது ஏனோ இவருக்கு விளங்குவது இல்லை.

புட்போர்டில் பயணம் செய்கிற பயணியைப் பார்த்து "யோவ்! ஏறுயா மேலே!" என்று கண்டக்டர் கோபித்துக் கெள்கிறார். பலர் முன்னிலையில் நம் மானம் போய்விட்டது என்று கண்டக்டர் மீது பாய்கிறோம். ஆனா லும் நாம் கீழே விழுந்து விடக்கூடாதே என்ற அக்கறையில் தான் அவர் அப்படிச் சொன் னார் என்பது பலருக்குப் பிடிபடுவது இல்லை. முதலாளி அல்லது மேலதிகாரி கோபித்துக் கொள்கிறார். "பெரிசா புத்தி சொல்ல வ... துட்டாரு எனக்கு!" என்று சலித்துக் கொள்கிறார்கள சிலர்.

பிள்ளை கீழே விழுகிறது. தாய் "ஓடாதேன்னு சொன்னாக் கேட்டாத்தானே?" என்று அவளும் ஓர் அடி வைக்கிறாள்.

மேற்கூறிய சம்பவங்களிலெல்லாம் எதிரா ளியின் அணுகுமுறை நமக்கு பிடித்த மாதிரி அமையாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் அடிக்கோடு இடப்பட வேண்டிய விடயம் அவற்றை நம் நன்மைக்குத்தான் சொல்கிறார்கள்-செய்கிறார்கள் என்பதே.

"என் அப்பா அவ்வளவு கண்டிப்பு. இன்னைக்கு நான் ஒரு மனுசனா இருக்கேன்ன... அதற்கு என் அப்பா தான் காரணம் என்பவர்களையும் " இன்னைக்கு நான் ஒரு நல்ல நிலையில் இருக்கேன்னா என்னைப் பிரம்படி கொடுத்தே படிக்க வைத்த இன்ன வாத்தியார் தான் காரணம்" என்பவர்களையும் சற்றே விசாரியுங்கள்.

நிச்சயமாக அவர்கள் தம் இளமைக் காலத்தில் அந்த அப்பாவையும் அந்த வாத்தியாரையும் அடியோடு எதிர்த்தவர்களாகவும் எதிரிகளாக நினைத்தவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் காலம் உருள உருளத்தான் நமக்கு நல்லது என்று தானே அப்படிச் செய்தார்கள் என்ற உண்மை தெரிய வரும்.

கோபமாகச் சொன்னாலும் சரி அவமானப்படுத்துகிற வகையில் சொன்னாலும் சரி முரட்டுத்தனமாகச் சொன்னாலும் சரி கண்டித்துச் சொன்னாலும் சரி நம் நன்மைக்குத்தான் சொல்லுகிறார்கள் என்பதை மட்டுமே அடிக்கோடு இட்டுப்பழகிக் கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படை உண்மையை உணராமல் அவர்களை எதிரிகளாகக்கருதிக்கொண்டு பிரச்சினையை அடியோடு திசை திருப்பி அவர்களோடு போராட ஆரம்பிக்கிறவர்கள் வளர்ச்சிப்பாதையின் நுழைவாயிலைத் தரிசிக்கக் கூடத் தகுதியற்றவர்கள்.


**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-1

ஆசிரியர் வே.அன்பழகன்

◆ தரப்பட்டுள்ள கூற்றுக்கு மிகவும் பொருத்தமான விடையத் தெரிவு செய்க.

21) படத்தில் தரப்பட்டுள்ள நிறுத்தாடுவளை ஆனது தராசு அமைப்பில் செயற்படுகிறது. இதனை வைத்துக் கூறக்கூடியது




1) விமல், கமலிலும் நிறை கூடியவர்
2) விமல், கமிலிலும் உயரம் கூடியவர்
3) விமல் கமலிலும் நிறை குறைந்தவர்

◆ கீழே தரப்பட்டுள்ள தகவலை வாசித்து விடைகளைத் தெரிவு செய்க.

நிமலன், கமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 60 kg எனவும் கமலன், அமலன், ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 64 kg எனவும் நிமலன், கமலன், அமலன், ஆகிய மூவரனதும் நிறைகளின் கூட்டுத்தொகை 98 kg எனவும் தரப்பட்டிருப்பின்

22) அமலனின் நிறை யாது?
1) 30 kg 2) 34kg 3) 38 kg

23) நிமலன், அமலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது
1) 68kg 2) 72kg 3)76 kg


◆ ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்ப சரியான வாக்கியம் அமையும் எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

24) A- பையை எடுத்துக்கொண்டு B-ஆடைய அணிந்து C-தந்தை D- புறப்பட்டார் E- சைக்கிளில்
1) ABCED 2) CBAED 3) CBDAE

25) A- அக்கா B-தம்பிக்கு C-தங்கைக்கு D-பாவாடையையும் E- காற்சட்டையையும் F-வாங்கினார்
1) ABDCEF 2) ABEDCF 3)ABECDF


26) இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.
1) 3446758 - 3447658
2) NMWAY - MNWAY
3) 3YB2RR - 3YB2RR

27)




உருவில், கீழுள்ள இரு கூடுகளின் எண்களின் கூட்டுத்தொகை, அதன் மேலுள்ள கூட்டிற்குரிய எண்ணாக வரும். இந்தக் கோலத்திற்கேற்ப இறுதியாக உள்ள A கூட்டிற்குள் வரவேண்டிய எண் யாது?
1) 16 2) 24 3) 32

28)





தரப்பட்ட மூன்று இலக்கங்களாலும் உருவாக்கக்கூடிய மூவிலக்க எண்களின் எண்ணிக்கை 6 ஆகும். அந்த எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது 795 என்ற எண் எத்தனையாவதாக வரும்?
1) மூன்றாவது 2) நான்காவது 3) ஐந்தாவது

29) □ + △ =10
□ - △ =2

இத் தொடர்பிற்கேற்ப □ இவ்வுருவின் பெறுமதி யாது?
1) 4 2) 6 3) 8


30)



தரப்பட்ட உருவானது மூன்று சதுரமுகிக் கட்டைகளைக் கொண்டு அமைக்கப்பட்டது. இவ்வுருவிற்கு நிறம் தீட்டும்போது 5 முகங்களும் மை பூசப்பட்ட சதுரமுகிகள் எத்தனை?
1) 0 2) 1 3) 2


முதலில் தரப்பட்ட உருக்க்ளுடன் ஒத்த தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.

31)




1) 2) 3)

32)



1) 2) 3)

பின்வரும் உருக்களைக்கொண்ட வரிசையை நன்கு அவதானித்து தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




33) மேலே உருக்களைக்கொண்ட வரிசையில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை
1) 5 2) 6 3) 7

34) மேலே உருக்களைக் கொண்ட வரிசையில் அதிகளவு இடம்பெற்றுள்ள குறியீடு
1) ○ 2) △ 3) □

◆ பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

35)




A B C D E

36)



A B C D E

37) A , B, C என்னும் எண்சட்டங்கள் வரையப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்சட்டத்தைத் தெரிவு செய்க.



A B C ............ 1) 2) 3)


38) பின்வரும் கணிதச் செய்கையில் A,B ஆகிய வெற்றுக் கூடுகளுக்குப் பொருத்தமான இலக்கங்களைத் தெரிவு செய்க.

```
  6 5 4
  2 A 3
  -----
  4 B 1
  -----
```

1) 1, 6 2) 1, 4 3) 2, 7

39) குயில் முட்டை இடுவதற்காக மரக்கிளை ஒன்றில் அழகான கூடொன்றைக் கட்டியது . இக்கூற்றுப் பிழையானது. இதற்குரிய காரணமாக அமைவது
1) குயில் முட்டை இட்டு இனப்பெருக்கம் செய்வதில்லை என்பதனாலாகும்.
2) குயில் முட்டை இடுவது தண்ணீரில் என்பதனாலாகும்.
3) குயில் முட்டை இடுவதற்கு கூடு கட்டுவதில்லை என்பதனாலாகும்.

40)



இவ்வுருவில் எத்தனை சதுரங்களை அவதானிக்கலாம்?
1) 12 2) 13 3) 14

### 17.05.2017 புதன் அன்று பிரசுரிக்கப்பட்ட வினாத்தாள் பகுதி-2 இன் விடைகள்

01) கெட்டது 02) நல்லதை 03) திண்ணிய 04) சூரியன்
05) செய்த 06) அன்னாய் 07) தீவினை 08) 5
09) கருத்துள்ள வாக்கியங்கள் 10) 1. பயன்படுத்தாதது கெடும்
2.பலதுக்கு ஒன்று உதாரணம்
11) ஒழுகும், அடைக்கலம்
12) BIG, TAKE 13) BOOK, TABLE, CHAIR, PEN
14) அண்ணா எனக்கு பால் தாருங்கள். இதோ தங்கை குடியும்.
15) 2 16) 3 17) 2 18) 3 19) 1 20) 1 21) 2 22) 2
23) 1,3,1 24) 1,2,1 25) 2 26) 1 27) 3 28) 1. சுரையை இறுக்குதல்
2. மரம் குடைதல், செலுத்துதல் 3. கம்பி வெட்டுதல் 4. திருகாணி இறுக்கிப் பிடித்தல்
29) 324 30) 258 31) 246 32) 4.24 33) 6 ஆவது முக்கோண எண் 21 புள்ளடிகள்
34) 6 ஆவது சதுர எண் 36 புள்ளடிகள். 35) 10km 36) 9kg 500g
37) நிமிடமுள் 6, மணிமுள் 10-11 இடையில் 38) சனி 3 ஆவது நிரை, 6 ஆவது நிரல்
39) $\frac{2}{8}$ பகுதியை நிழற்றியது 40) $36cm^2$

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

ஆசிரியர் வே.அன்பழகன்

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்குரிய விடையை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.

> பிரபாவும் பாபுவும் ஒரே கிராமத்தில் வாழ்ந்தவர்கள். இருவரும் இணை பிரியாத நண்பர்கள். ஒரே பாடசாலையில் ஒன்றாகவே படித்தனர்.பாடசாலைப் படிப்பை முடித்தபின்னர் இருவரும் வேலை தேடத் தொடங்கினர். செல்வந்தர் ஒருவர் இருவருக்கும் வேலை வழங்கினார்.

1. "ஊர்" என்ற சொல் பந்தியில் எச்சொல்லால் குறிப்பிடப்பட்டது?..............................
2. "கிராமங்களில்" என்பதன் ஒருமை வடிவம்? ..............................
3. உயர்திணைப் பலர்பாற் பெயர்ச் சொல் யாது? ..............................
4. "தொழில்" என்பதை வெளிக்காட்ட பந்தியில் வந்த சொல் ? ..............................
5. "ஏழை" என்ற சொல்லின் எதிர்ப்பதம்? ..............................
6. பலர்பால் வினைச் சொல்லைக் குறிப்பிடுக. ..............................

02) சரியான சொல்லைத் தெரிந்து வெற்றிடங்களில் எழுதுக.
(அவன், நான், எனது, நீ, அவர்கள்)
1. ................. போய்க் கணக்குப்பிள்ளையிடம் கேட்டுவா.
2. நீங்கள் ................... வேலையில் பிழை காண்கிறீர்கள்.

04) பின்வரும் பாடலை வாசியுங்கள்.

இடர் வரும் போதும்-உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் -மாந்தர்
உறவு கொள்வர் அப்பா

இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. ..............................

05) பின்வரும் சொற்களை வகைப்பிரித்து உரிய இடங்களில் எழுதுக.
( அவன், படிக்கிறான், கண்ணகி , பறந்தது , நான் , வரைந்தார்கள்)

1. அஃறிணை இறந்தகால ஒருமை வினைமுற்று. ..............................
2. உயர்திணை நிகழ்கால ஆண்பால் வினைமுற்று. ..............................
3. உயர்திணைப் பெண்பாற் சொல். ..............................

06) வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.
1. கூலி, வேதனம், நன்கொடை, ஊதியம்
2. மகன், புத்திரன், மைந்தன், சேய்

07) சரியான எழுத்துக்கள் கொண்ட சொல்லின் கீழ்க்கோடிடுக.
1. தீவாளி, தீவாலி, தீபாவளி, தீபாஆவளி
2. பாவக்காய், பாகக்காய், பாவற்காய், பாகற்காய்

08) தொடர்மொழிக்கு ஒருமொழி தருக.
1. மற்றவர்களைப் பற்றிய அக்கறை இல்லாதவன் ..............................
2.முனிவர்கள் வாழும் இடம் ..............................


09) பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.
1. புண்படுத்தல் ..............................
2. ஆறப்போடல் ..............................

10) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.
1. Clap your hands ..............................
2. Happy birthday ..............................

11) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
1.வைத்தியசாலை ........................ 2. கரும்பலகை ..............................

12) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.
1. குறுத்துமா எய்த? ..............................

13) கீழுள்ள உருக்களுக்கான தமிழ்ச் சொல்லுக்குரிய சிங்களத்தை எழுதுக.

1)  ..............................
2)  ..............................

14) பின்வரும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஒருவாக்கியத்தில் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
1. ..............................
2. ..............................
3. ..............................

15) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.


01. "நான் ஒரு சிறுபிள்ளை. என்னால் ஆற்றப்படவேண்டிய கடமைகளை வீட்டுக்கும் வகுப்புக்கும் பாடசாலைக்கும் செய்யும் ஒரு சிறுபிள்ளையாவேன்" இக்கூற்று மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் ,
1) பிரார்த்தனை 2) மனவுறுதி 3) மலர்வு 4) மனதைத் தளர்த்துதல்


02. 
அருகிலிருக்கும் முகம் காட்டும் உணர்வானது,
1) கோபம் 2) மகிழ்ச்சி 3) பயம் 4) ஆச்சரியம்

03.வரட்சி காரணமாக பயிர்கள் அழிந்தமையால் உணவுத் தட்டுப்பாட்டினால் அவதியுறும் நண்பன் ஒருவன் எமது வகுப்பறையில் சகபாடியாக உள்ளான். அவனுக்காக நாம் செய்யவேண்டியது,
1) நமது உணவை அவன் பார்க்காதவாறு உண்ணல்
2) உண்ணும்போது அவனை விட்டு விலகுதல்
3) அந்த நண்பனுக்காக உணவு கொண்டுவரல்
4) நாமும் உணவு கொண்டுவராது விடல்

04.செல்லப்பிராணியை இழந்த மாணவரொருவரின் கவலையைப் போக்கச் செய்யவேண்டியது,
1) செல்லப்பிராணிகளை வளர்ப்பது தவறு எனக் கூறல்
2) அவரின் மனதைத் தேற்றுதல்
3) அவருக்குத் தண்டனை வழங்கல்
4) இழந்த செல்லப்பிராணி பற்றிக் கூறுதல்

05. உணவை மெல்லாது விழுங்குபவைகளில் அடங்காதது,
1) பல்லி 2) தவளை 3) மான் 4) பாம்பு

06. 
இப்பிராணியுடன் தொடர்பற்ற கூற்று,
1) புத்தக அலுமாரியில் வாழும்
2) புத்தகங்களை அரித்து உண்டு சேதமாக்கும்
3) வித்துக்கள் பரம்பலடைய உதவும்
4) குட்டி ஈனும் தன்மையுடையது

07. 
A B

அருகில் உள்ள உருக்கள் தொடர்பாக கூறக்கூடிய சரியான கூற்று,
1) A பேன், B இலையான் 2) A யும் B யும் இலையான்
3) A இலையான், B பேன் 4) A யும் B யும் பேன்

08. இலங்கைக்குரிய முலையூட்டிகள் அல்லாதது,
1) மரநாய் 2) கருங்குரங்கு 3) சுண்டெலி 4) கங்காரு

09. இலங்கைக்குரித்தான பாம்பு அல்லாதது,
1) பச்சைப்பாம்பு 2) நீர்ப்பாம்பு 3) நாகபாம்பு 4) வயல்கோதி

10. கீழுள்ள உரு குறிப்பது,

1) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
2) தீ பற்ற வைப்பது ஆபத்தானது
3) எரிபொருள் நிரப்பு நிலையம்
4) மின் தாக்குதல் ஏற்பட இடம் உண்டு

11. இலங்கைக்கு மேற்கே அமைந்துள்ள நாடு,
1) இந்தியா 2) ஆபிரிக்கா 3) தாய்லாந்து 4) மலேசியா

12.நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு,
1) குடா 2) தீவு 3) களப்பு 4) முனை

## 19.05.2017 வெள்ளி அன்று பிரசுரிக்கப்பட்ட பகுதி-1 வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 11) 2 | 21) 2 | 31) 2 |
| 02) 1 | 12) 3 | 22) 2 | 32) 3 |
| 03) 2 | 13) 3 | 23) 2 | 33) 2 |
| 04) 3 | 14) 2 | 24) 2 | 34) 2 |
| 05) 2 | 15) 3 | 25) 2 | 35) 3 |
| 06) 2 | 16) 3 | 26) 3 | 36) 1 |
| 07) 1 | 17) 3 | 27) 3 | 37) 1 |
| 08) 3 | 18) 1 | 28) 1 | 38) 3 |
| 09) 3 | 19) 3 | 29) 2 | |
| 10) 1 | 20) 2 | 30) 1 | |



இலங்கையில் நடந்த இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் மே18ஆம் திகதி உலகமெங்கும் வாழும் தமிழர்களால் நடத்தப்பட்டன. அந்த வகையில் பிரித்தானியா வாழ் தமிழர்களும் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்துள்ளனர். இந் நிகழ்வினை தமிழீழ செயற்பாட்டாளரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அங்கத்தவருமான திருநாவுக்கரசு கிருபாகரன் மற்றும் நோதனராசா நிக்ஷன் என்போர் மேற்கொண்டிருந்தனர். இந் நிகழ்வில் தமிழீழ செயற்பாட்டாளர் அழகையா-மதனகுமாரன் பொதுச்சுடரினையும் அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் மற்றும் கலை நிகழ்வுகள் இடம் பெற்று நன்றியுரையினை சோதிநாதன் சுஜேந்திரன் நிகழ்த்தினார்.

# கருணாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



முன்னாள் மீள் குடியேற்றப் பிரதி அமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிரான வழக்கை, நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதவான் லால் ரணசிங்க பண்டார, செப்டெம்பர் மாதம் [illegible] ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டியுள்ளதாகவும் அதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால், கோரப்பட்டதற்கு அமையவே, வழக்கு மேற்குறித்த திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், பிரதியமைச்சராக இருந்த காலப்பகுதியில், ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட வாகனத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் விசாரிப்பதற்கு, கடந்த வருடம் நவம்பர் 29 ஆம் திகதி நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினால் அழைக்கப்பட்டு, அன்றைய தினமே கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டு, அன்றையதினமே, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, டிசெம்பர் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர், பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 900 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாகனத்தை, தமது பதவிக் காலம் முடிவடைந்ததன் பின்னரும் முறைகேடாகப் பயன்படுத்தினார் என்றும் மட்டக்களப்பில் வைத்து, அந்த வாகனம் மீட்கப்பட்டது என்றும் நிதிக்குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வாகனத்தைப் பொறுப்பேற்றுமாறு, ஏற்கனவே எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக, கருணா தரப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விற்பனை தடை செய்யப்படும்

## பிரதமர் ரணில் அறிவிப்பு



குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு தடை விதிக்கும் வகையிலான சட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை புதிய தொழிற்சாலையொன்றை திறந்து வைத்து உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

"குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களை இலங்கையில் விற்பனை செய்வதை தடுக்கும் வகையில் புதிய சட்டமொன்று கொண்டுவரப்படும்.

ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு இயந்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு வரி விலக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்றுமதியின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கே நாம் முயற்சித்து வருகின்றோம்.

தேசிய உற்பத்திகளுக்கு மாறாக சர்வதேச முதலீட்டாளர்களுக்கு உற்பத்திகளில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இலங்கைக்கு கிடைத்தது மட்டுமன்றி சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ள நிலையில், நாட்டில் புதிய யுகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திருட்டுக் குற்றச்சாட்டில் பூசகர் கைது

(கரணவாய்)

ஆலயக் குருக்களின் நகைகளைத் திருடிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பூசகரை நெல்லியடிப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

அல்வாய்ப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் இடம் பெற்ற உற்சவம் ஒன்றிற்காக அவ் ஆலயத்தின் குருக்கள் பூசகர் ஒருவரை உதவிக்கு அழைத்து வந்துள்ளார்.

ஆலயக்குருக்களின் நகைகளைத் திருடிக் கொண்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த குறித்த பூசகர் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆலயக் குருக்களின் வீட்டிலிருந்து தலைமறைவானார்.

இந் நிலையில் அன்று இரவு நெல்லியடிப் பொலிஸார் மாலுசந்திப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இதையடுத்து நேற்று முன் தினம் புதன்கிழமை நகையினைப் பறிகொடுத்த குருக்கள் நெல்லியடிப் பொலிஸிற்கு வந்த போது திருடிக் கொண்டு ஓடிய பூசகர் பொலிஸ் நிலையத்தில் இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து பூசகர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறைப் பொலிஸில் பாரப்படுத்தப்பட்டார். அவர் திருடிய நகைகள் நெல்லியடியிலுள்ள வங்கி ஒன்றில் அடகு வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. (இ-3-60)



"தூய்மையான இலங்கைக்கு இளைஞர் குரல் வேலைத்திட்டம்" எனும் தொனிப்பொருளில் தேசிய இளைஞர் தின நிகழ்வு நேற்றைய தினம் யாழ் திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது. யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றமும் இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டதுடன், விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எஸ். சுகிர்தன், யாழ்ப்பாண பிரதேச செயலர் தயானந்தன் உட்பட தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரிகள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், இளைஞர்,யுவதிகள், பாடசாலை மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

# பேருந்து- உழவு இயந்திரம் மோதி விபத்து



கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்த பருத்தித்துறை சாலைக்குரிய பேருந்து நெல்லியடி நகரப் பகுதிக்குள் திரும்பும் போது பிரதேச சபையின் உழவியந்திரத்துடன் மோதுண்டதால் இரண்டு வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. விபத்துக்குள்ளான இரு வாகனங்களுடன் இருதரப்பினரும் நெல்லியடி பொலிஸாரால் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று காலையில் இருந்து இரவு 7மணி வரை சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுடன் சட்டதிட்டங்களுக்கமைய வாகன போக்குவரத்து பரிசோதகரை வரவழைத்து பரிசோதனை செய்து நீதிமன்றத்தில் வழக்கு தொடருமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7-60)


# கிணறு துப்புரவு செய்யப்பட்டது



காரை அபிவிருத்தி சபையின் நன்னீர் பொதுக் கிணறுகளை துப்புரவாக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக மல்லிகை குடிநீர்க் கிணறு, கோவளம் விளையாட்டுக் கழகத்தினரால் துப்புரவு செய்யப்பட்டு பொது மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. (இ-100)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பூகோள வெப்பமயமாதலில் இருந்து புவியைப் பாதுகாப்போம்





புவி எமது வாழ்க்கையின் ஆதாரம். நம்மைதாங்கும் ஒரு தாய்.அத்தகைய பூமித்தாய் இன்றைய சூழ்நிலையில் அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு இன்னலே பூகோள வெப்ப மயமாதலாகும். இவ் இன்னலிலிருந்து புவியைக் காப்பது எம் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

“மாறுதல் இந்தயுகத்தின் விதி” என்பது பாரதியார் வாக்கு. அதற்கிணங்க நம் புவியும் பல்வேறு வகையான மாறுதல்களுக்கு முகங்கொடுத்தே இன்றுள்ள இந்நிலையை அடைந்துள்ளது.

இற்றைக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் புவியின் நிலைமைக்கும் இன்றைய புவியின் நிலைக்கும் மிகப் பாரியளவிலான மாற்றங்கள் காணப்படுகின்றதென்றால் அதுபொய்யாகாது. இம் மாற்றங்கள் புவியில் ஏற்படக் காரணகர்த்தாவாக விளங்குவது நவீனவிஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி என்று தான் கூற வேண்டும்.

அவ்வகையில் மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்த மனித நாகரிகம் வேடர் யுகம், இடையர் யுகம், விவசாயயுகம் எனப் பலயுகங்களைத் தாண்டி இன்று நவீன விஞ்ஞானத் தொழில் நுட்ப யுகத்தில் வெற்றிநடைபோடுகின்றது. விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சிகள் மனிதனின் நாளாந்த வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்கள் ஏராளம். அவற்றினால் மனித வாழ்க்கை முறையே முற்றாக மாறிவிட்டது. மனிதன் தனது அன்றாடத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்வதற்கு தொழில்நுட்பம் இன்றியமையாததாகி விட்டது.

இவ்வாறு நம் வாழ்விற்கு அத்தியாவசியமான விஞ்ஞானமே நம் வாழ்விற்கு ஆதாரமான புவியையே நிலை குலையச் செய்து நமது வாழ்விற்கு இன்னலை ஏற்படுத்தக் கூடியதொன்றாக மாறி வருகின்றது. இங்கு பூகோள வெப்பமயமாதல் ஏற்படுவதற்கு ஏதோ ஒருவகையில் விஞ்ஞானமும் காரணமாகி நிற்கின்றது.




ஓசோன் படை நலிவடைதல் பூகோள வெப்பமயமாதலை தூண்டும் காரணியாகும். ஓசோன் படை வளிமண்டலத்தின் படை, இடைமண்டலங்களுக்கிடையில் அமைந்துள்ளது. இவற்றில் காணப்படும் தடித்தபடை சூரியனிலிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள் பூமியினுள் உட்புகுவதைக் கட்டுப்படுத்துகின்றது.

எனவே பூமியினுள் நச்சுக்கதிர்களும் வெப்பம் நிறைந்த கதிர்களும் பிரவேசித்தல் தடைப்படுகின்றது. பூமியில் நடைபெறும் பலசெயற்பாடுகள் ஓசோன் படையை நலிவடையச் செய்வதில் பங்களிக்கின்றன. அளவிற்கதிகமான CFC பாவனை ஓசோன் படையின் தடிப்பைக் குறைக்கின்றது: அதாவது குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றிலிருந்து வெளிவரும் CFC போன்ற வாயுக்கள் ஓசோன்





படையை நலிவடையச் செய்கின்றது.

மேலும் பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்றவற்றை எரிக்கும் போது வெளிவரும் நச்சுத்தன்மையான வாயுக்களும் ஓசோன் படையைப் பாதிக்கின்றன.

சூழல் மாசடைதலும் பூகோள வெப்ப மயமாதலை ஏற்படுத்துவதில் முக்கியமான ஒரு காரணியாகும். சூழல் மாசடைதல் என்பதை விட வளிமாசடைதலே இதற்கு முக்கிய காரணமாகின்றது. வாகனப்புகை, தொழிற்சாலையிலிருந்து வெளிவருகின்ற நச்சுத் தன்மையான புகைகளும் வளி மண்டலத்தை மாசாக்கி அவற்றை வெப்பமாக்கி இறுதியில் மிகப் பாரியளவிலான பிரச்சினையான பூகோள வெப்ப மயமாதலைத் தோற்றுவிக்கின்றன.

மரங்களை வெட்டுதல் என்பது இன்றையகாலத்தில் ஒருமிகப் பெரியபிரச்சினையாக உருமாறி வருகின்றது. அன்றாட வாழ்க்கை




யில் தனிப்பட்டதேவைக்காக மரங்களை வெட்டுகின்ற நிலைப்பாடு இன்று காணப்படுகின்றது.

இதுவே கூட சிறிதுசிறிதாக அதிகரித்து பூகோள வெப்பமயமாதலிற்கான பாரிய காரணமாக அமையலாம்.

பூகோள வெப்பமயமாதல் ஒரு பாரதூரமான சவாலாகும். இதை நாம் உணருவதில்லை. இதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் அறிவதில்லை. பூகோளவெப்பமயமாதலினால் சூழல் வெப்பநிலை கூடும், காலநிலை மாற்றங்களில் வித்தியாசம் ஏற்படும், நீர்ப்பற்றாக்குறை ஏற்படும், வறட்சி நிலவும், துருவப் பிரதேசங்களில் பனிப்பாறைகள் உருகும். இதனால் தீவுகள் நீரில் மூழ்கும் நிலைமை கூட ஏற்படலாம்.

இப்பாரிய பிரச்சினையைக் கொடுக்கும் பூகோள வெப்பமயமாதல் பற்றி நாம் ஒவ்வொருவரும் அறியவேண்டியது அவசியம்.

இதனைத் தடுக்கும் முகமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டியதும் எமது கடமையாகும். முதலில் இது பற்றியவிழிப்புணர்வை அனைவரிற்கும் ஏற்படுத்தவேண்டும்.

மரம் வளர்ப்பதை ஊக்குவித்தல் இதற்கு ஏதுவானதொரு முறையாகும். இதன் மூலம் குளிர்ச்சியை ஏற்படுத்தி வெப்பத்தைத டுக்கலாம். மேலும் CFC வாயு அடைக்கப்பட்ட குளிரூட்டிக்குப் பதிலாக சூழலுக்கு நேசமான HFC வாயுப்பாவனையை ஊக்குவித்தலும் நன்மையானதாகும். மேலும் சூழலுக்கு இசைவான இலகுவில் பிரிந்தழியக் கூடியபொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைத் தூண்டுதல் முக்கியமாகும். இவ்வாறான் செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் பூகோள வெப்பமயமாதலைத் தடுக்கமுடியும்.

இவ்வாறான வகையில் நாம் வாழும் பூமியைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது முக்கியமானதொன்றாகும். இதன்மூலமே நாமும் எமது வருங்கால சந்ததியும் சிறந்ததொரு வாழ்வினை இப் பூமியில் முன்னெடுக்கமுடியும். எனவே புவியைபூகோள வெப்பமயமாதலிலிருந்து பாதுகாத்து இன்னலற்ற அமைதிவாழ்வு வாழ, விண் வெளியில் வாழிடம் தேடும் மனித குலத்தை நமதுபுவியைப் பேணிப் பாதுகாக்க ஒருங்கிணைப்போம்.

R. துளசிகா
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி
2017/ உயிரியல் பிரிவு

## வாரத்திற்கு ஒரு புதிர்! 185

உருக்கப்பட்ட சல்பரினை (கந்தகத்தை) மிகவும் தாமதமாக ஒருவளிமண்டலஅமுக்கத்தில் குளிரவிட உண்டாகும் முதல் திண்மம் எது?

**புதிர் 185இற்கான விடைகளை 05.06.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 184 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

உ. டிலக்சிகா
யா/ வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை


**புதிர் 184க்கான கேள்வியும் விடையும்:**

MIDI (Musical Instrument Digital Interface) எந்தஆண்டில்அறிமுகப்படுத்தப்பட்டது?

1983

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 185

சரியான விடை:-........................................
முழுப்பெயர்:-........................................
முகவரி:-........................................
தொ.பே. இல:........................................
கையொப்பம்:........................................




# யாழ்.மாவட்டம் வடமராட்சி வடக்கு தும்பளை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் (இத்திமரத்தாள் - மாமரத்தாள்) வெளிமடைப் பூஜை சிறப்பிதழ் (2017.05.26 வெள்ளிக்கிழமை)

**மடைப்பண்ட பூசை**
**மாலை 5.00 மணி**
**26,05.2017 வெள்ளி**

**வளந்துப் பூசை**
**இரவு 11.00 மணி**
**26.05.2017 வெள்ளி**

**வெளிமடை பூசை**
**காலை 6.00 மணி**
**27.05.2017 சனி**

**விளக்கு வைப்பு**
**19.05.2017**
**வெள்ளி**



## அருளாசிச் செய்தி

இத்தி மரத்தாள் என்றும் மாமரத் தாள் என்றும் முன்னோராலும் எம் மாலும் அழைக்கப்படும் நெல்லண் டைப் பத்திரகாளித் தாய் திருவருள் இந் நாளில் எங்கும் பரவிக் கலக்க வேண்டு மென்று எம் அன்னையின் அடிமலர் தாள் சரண் புகுந்து வாழ்த்துவோமே. இற்றைக்கு நான்கு நூற்றாண்டுக ளுக்கு முன்னரே எமக்குத் திருவருள் தர அமர்ந்து கொண்ட அன்னை கணம் கணம் தோறும் பல்லாயிரம் பக்தர்களின் கடு வினைகளை களைந்த வண்ணம் உள்ளாள். (இத்திமா மால் துணைவி) என்று பழைய வெண்பா பாடல் வரி சான்று பகரும்.

**ஆத்தாள் அருளுதி நெல்லண்டை**
**மாநிழல் மேவிய அன்னையே!**

என்றும் சான்று பகரும் "கூத்து வந்தாய் நேத்தியெல்லாம்" என்றும் பண்டிதர் நமசிவாய தேசிகர் திருவூஞ்சல் மூலம் விளக்கியுள்ளார்.

எமது முன்னோர் வழிவழியாக எமது உரித்தை முழுக்க முழுக்க சட்ட பூர்வமாக கொண்டு வழ. இல. 53/2001 ஆம் ஆண்டின் கொழும்பு மீளாய்வு நீதிமன்றமும் அதன் பின் யாழ். உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிர காரம் எம் அன்னையின் பூசையில் யாரும் தலையிடா வண்ணம் எம் அன்னை நெல் லண்டைப் பத்திரகாளி திருவருள் பொழி யும் வண்ணம் உதவிய எமது குருமார் சிவபிரம்ம ஸ்ரீ சதாசிவ குருக்கள் நியாய சிரோன்மணி சுப்பிரமணிய சாஸ்திரிகள், நாராயண சாஸ்திரிகள், ஆத்மார்த்த குரு சிவஸ்ரீ.கந்தசிவபாத சுந்தரக்குருக்கள், வித்தியா குருமார் அருணாசலம் சண்முக தாஸ், மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி சிவலிங்கராஜா, அருள்நங்கை சண்முகநாதன், சபா.ஜெயராசா, கலாநிதி த.கலாமணி சேர் அவர்கட்கும் எம் மன மார்ந்த நன்றியைத் தெரிவித்து அவர் களுக்கும் வணக்கம் செலுத்துகின்றோம்.

எமது தந்தையார் சிவஸ்ரீ.கந்த தியா கராஜா குருக்கள் அவர்தம் நண்பர் சிதம் பரப்பிள்ளை வாமதேவன் (உத்தரவு பெற்ற நில அளவையாளர்) மற்றும் சி.மு.கந்தசாமி, கமலேஸ்வரன், கதிரவேற்பிள்ளை, வீரகத்திப் பிள்ளை, நடராசா சற்குணராசா, இராஜ துரை அவர்கட்கும் (அமரர்) ருத்திரா (சிரேஷ்ட சட்டத்தரணி), உருத்திரேஸ்வரன் விஜயராணி (சட்டத்தரணி), அன்புநண்பர் தம்பு இராமச் சந்திரன் அவர்கட்கும் என் நாளாந்த வணக்கத்தை எம்அன்னை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி திருவருள் நிறை தருவாள்.

அன்னையின் மாதாந்த வருடாந்த உற்சவங்களையும் உபயங்களையும் செய்யும் அனைத்து மெய்யடியார்கட்கும் மற்றும் நான் நலிவுற்ற காலத்தில் உத வியஎல்லா அன்புநெஞ்சங்கள், அனைத்து மெய்யடியார்கள், அன்பர்கள், பெரிய வர்கள் அனைவருக்கும் நன்றியுடன் அன்னையிடம் வணக்கம் செலுத்தி ஆசி கூறி வாழ்த்தி மீண்டும் அன்னை ஸ்ரீ நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன், ஸ்ரீ நெல்லண்டை இலட்சுமணன் தோட் டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வடபத்திர காளியம் மன், இலட்சுமணன் தோட்டம் அருள்மிகுபிள்ளையார்திருவருளும்பொழிக் என வணங்கி விடைபெறுகின்றோம்.

**சுபமஸ்து**



பரம்பரை உரித்துடைய அர்ச்சகர் சிவ ஸ்ரீ. சோமாஸ்கந்த தனஞ்சயன் குருக்கள் அவர்கள்



பிரதம குருக்கள் சிவஸ்ரீ. இராமலிங்கம் குருக்கள் சுந்தரலிங்கக் குருக்கள் அவர்கள்

## ஆலயத்தின் புராதன வரலாறு

அகில அண்டங்களும் சராசரங்களும் உள்ள பொருளுமாய் ஐம்பத்தொரு (51) அச்சரமாய் தொண்ணூற்றாறு (96) கோணங்களும் உயிருமாய் நிற்கும் மனோன்மணி அன்னையே முன்னை சிவனுடன் முடுகியே நடம்புரிந்த சக்தி நீ.மும் மூர்த்தி களின் ஆதாரம் ஆனாய். எங்கும் எதையும் ஆற்றலுடன் இயங்க வைப்பாய்.

ஏழைகளாகிய நின் ஜீவன்கள் துயர் தீர்க்க என எண்ணியே உருவத் திருமேனி யையும் அருவுருவத் திருமேனியையும் உற்று முன்னொருகாலத்தில் தென்னிந் தியாவில்உள்ளகோடிக்கரைஎன்றவேதாரணி யத்தை சேர்ந்த சந்நியாசி ஒருவர் மரகத லிங்கப் பெருமானாகிய திருமறைக்காடு வேதவேதாரணியேஸ்வர சுவேதனப் பெருமானின் ஞான சிஷ்யன் ஒருவரால் முன்னே சொன்ன சந்நியாசி ஒருவனுக்கு இற்றைக்கு நான்கு நூற்றுகளுக்கு முன்பு (400 வருடங்களுக்கு) ஆன்மார்த்த பூசை யின் பொருட்டு அளிக்கப்பட்ட பத்திரகாளி யந்திரத்தையும் மூர்த்தியையும் தாம் சென்ற இடமெல்லாம் கொண்டு சென்றார்.

அவர் ஈழவள நாட்டிற்கு வந்த போது இந்த தும்பளை நெல்லண்டைப்பதியின் நெல்லி நின்ற ஓடை என்ற ஆதீனத்தில் சில நாட்க்ள் தங்கியிருந்தார்கள் அத்த கைய அருட் திருநாளில் ஒருநாள் சந்நி யாசியின் கனவில் தோன்றி தாம் அரு கில் நின்ற மாமரம் ஒன்றின் கீழேயே அமைந் திருக்க விரும்புவதாக கூறினார்.

அதன் பிரகாரம் அச் சந்நியாசியார் அங்கே வைக்க அன்னை மாமரத்தடி யில் உறைந்தார். இன்றும் அம்மாமரம் நீண்ட பழைமையை புதுப்பித்துக் காட் டிய வண்ணம் கணம்கணந்தோறும் நினைத்தவண்ணம் எங்கும் அருள் மழை பொழிந்து ஆட்சி செய்து வருகின்றாள்.

நமது மூதாதையர்கள் சின்னையர் முதற்கொண்டு ஆறாவது பரம்பரையான தியாகராஜக் குருக்கள் அவர்களும் அவர் மகன் சிவஸ்ரீ.தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களும் அவர் தம் புத்தி ரன் சோமாஸ்கந்த தனஞ்சயக் குருக்கள் பரம்பரை பூசகராகக்கொண்டு இன்றுவரை பூசை புரிந்து வருகின்றார்கள்.

பிரதம குருக்களாக தியாக சோமாஸ் கந்தராஜாக் குருக்கள் அவர்களின் மூத்த மகன் சிவஸ்ரீ.இராமலிங்கக் குருக்கள் சுந்தரலிங்கக் குருக்கள் பூசை செய்து வரு கின்றார்கள். தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாளின் பராக்கிரமம் என் கின்ற மாண்மியம் கணந்தோறும் பெரு கிக் கொண்டே வருகிறது. அன்னையின் அருட்பிரவாகத்தால் வைத்திய நிபுணர் எவராலும் குணப்படுத்த முடியாத பல வகை யான நோய்களும் அன்னையின் அருளால் இன்றும் குணமடைந்த வண்ணமே உள்ளன.

மற்றும் குழந்தைப்பேறும் கல்விப் பேறும் அருட்பேறும் செல்வப்பேறும் வெற்றிப்பேறும் வற்றாத புகழ் என்பனவும் முன்னைக்கும் இம்மைக்கும் நம்பி அடைக் கலம் புகுந்த அனைத்து அடியார்களும் உலகமயமாதலோடு கூடி இற்றைவரை அருள் மழை பெற்று வருகின்றார்கள்.

இவ் ஆலயத்தில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் சித்திரா பௌர்ணமி அடு த்து வருகின்ற அமாவாசைத் திதியின் பின் முதல் வெள்ளிக்கிழமை வெள்ளிமடை வேள்வி பொங்கல் உற்சவம் நடைபெற்று வருவது சரித்திர புகழ் வாய்ந்த நிகழ்வாகும்.

கந்தபுராண செய்யுள் முழுவதும் உரை யோடு பயன் சொல்லி பாராயணம் செய்யும் ஆலயமாகவும் இது அமைகின்றது. தைப் பூசம் தொடங்கி பங்குனி உத்தரம் கழிந்த சுப நாளில் கந்தபுராண நிகழ்வாகிய வள்ளி திருமணப் படிப்பும் அடுத்தநாள் வளந்துப் பூசையும் அன்று காப்புக்கட்டி அன்ன தானமும் மிகப்பெரியளவில் நடைபெற்று மறுநாள் நிறைமணி என்கின்ற நிகழ்வும் தவறாமல் நடைபெற்று வருகின்றது. நித்திய, நைமித்திய, காமிய பூசைகள் காலம் தவறா மல் நடைபெற்று வருகின்றது. அன்னை யின் அடியார்கள் அன்புக்கும் வேத மந்திர சாஸ்திர தோஸ்திரங்களுக்கும் மட்டுமன்றி இயற்றமில் என்கின்ற கூத்து, நாடகம், நாட்டியம் ஆகியவற்றிலும் பெரும் விருப் பமுடையவள் எம் நெல்லண்டைத்தாய்.

முன்னைய காலம் தொடக்கம் இற்றை வரை வடமோடி, தென் மோடி ஆட்டக்கூத் துக்கள், நாடகங்கள் அரங்கேற்றம் செய் யப்படும் ஈழத்தின் கலைமளித்த திருத்தலங் களில் பழைமைமிக்க தலமாகவும் இது விளங்குகின்றது.

இவ்வைபவங்களில் வல்லிபுர ஆழ் வாரை நினைத்து கதிரைப்பூசை நிகழ்வும் இற்றைவரையும் நிகழ்ந்து வருவதைக் காணலாம். இவ் அன்னையின் மூர்த்தி அம்சங்கள் தாய்த்தெய்வ வழிபாடாகிய நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி வடபத்திரகாளியம்மன், நெல் லண்டை பிராந்தாள் முத்துமாரியம்மன், தும்பளை மேற்கில் வில்வளை ஸ்ரீ பித்தி யங்கரா காளிகாதேவியம்மன் வழிபாட்டு அம்சங்களும் மிகப்பெரும் வளர்ச்சியுடன் வெளிமடைத்தொடர்புகளும்உள்ளடங்கிவரு வதை தொடர்ச்சியாகக் காணமுடிகின்றது.

அன்னையின் கிழக்குப் புறத்தில் உள்ள தீர்த்தம் ஊரில் உயிர் வாழ்க்கை யாக அமைந்து அனைத்து நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாக விளங்குகின்றது. தல விருட்சமாக மாமரம், இத்திமரம் இன் றும் அதிசயமாக விளங்குகின்றது. கிழக் குப் பக்கத்தில் நெல்லிமரமும் வெளிவீதி யில் உள்ள ஆல், அரசு, மகிழ் போன்ற தல விருட்சங்களும் நிழல் தருகின்றன.

இவ்வாலயம் நீண்ட காலங்களுக்குப் பின்பு முதன் முதலில் ருதோற்காரி வருடம் கார்த்திகை மாதம் 16ஆம் நாள் (12.12.1983) வெள்ளிக்கிழமையும் சுவாதி நட்சத்திர மும் தனுலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் கும்பாபிஷேகம் நிகழ்வுற் றது. பின் 1997 லும் 2000ஆம் ஆண்டி லும் அதன் பின்னர் நவக்கிரக ஸ்தாபன கும்பாபிஷேகமும் அதேநாளில் முகப்புத் தோரண வாயில் கும்பாபிஷேகமும் 2013 ஆம் ஆண்டு தைமாதம் ரோகிணி நட்சத் திரமும் கூடிய நாளில் மூன்றாவது தடவை மகாகும்பாபிஷேகமும் இதன் மண்டலாபி ஷேக பெரும் சாந்திவிழா (08.03.2013) வெள்ளிக்கிழமைநடைபெற்றபோதுஸ்ரீபத்திர காளி பிரதிஸ்டாவிதி என்கின்ற நூல் வெளி யீடும் 1008 கலச சங்காபிஷேகமும் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற் றது. தை மாதத்தில் பிரதிதோறும் ரோகிணி நட்சத்தி ரத்தை நிறைநாளாகக்கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவமும் மாசி மாதத்தில் மாசி மக உற்சவமும். மகாமக உற்சவமும் மகோதைய உற்சவமும் பங்குனி மாதத்தில் பங்குனித்திங்கள் பங்குனி உத்தரமும் வள்ளி திருமணப் படலமும் அன்னதானமும் நிறைமணியும் சித்திரை மாதத்தில் சித்திராப் பௌர்ணமி யும் அடுத்து வருகின்ற அமாவாசையின் முதன் வெள்ளியை வெளிமடையாகவும் அதன் முதன் வெள்ளியை விளக்கு வைத் தலும் சித்திரைச் சதயத்தில் அப்பர் குரு பூசையும் வைகாசி மூலத்தில் சம்பந்தர் குருபூசையும் ஆனிமாதத்தில் மக நட்சத் திரத்தில் மாணிக்கவாசகர் குருபூசையும் ஆடி மாதத்தில் பூர நட்சத்திரத்தில் பூர்வ கர்ம நிகழ்வும் (சாமத்தி யச்சடங்கு) ஆடிச் சோதியில் சுந்தரர் குரு பூசையும் ஆவணி மாதத்தில் ஓணப் பெரு விழாவும் வரலட்சுமி விரதமும் புரட்டாதி மாதத்தில் சிறப்புற விளங்கும் நவராத்திரிப் பெருவிழாவும் தொடர்ந்து தீபாவளி, அமாவாசை தொடர் ந்து கேதாரகௌரி விரதமும் ஐப்பசி மாதத் தில் வெள்ளிக்கிழமை சிறப்புப் பூசையும் கார்த்திகை மாதத்தில் சோமவாரத் திருவிழா வும் பிள்ளையார் பெருங்கதையும் மார்கழி மாதம் திருவெம்பாவை, திருவாதிரை, ஆருத் திரா தரிசன விழாவும் இனிது நடை பெற்று வருகின்றன.

ஏகைவசக்தி பரமேஸ்வரஸ்ய
ப்ரயோஜ நார்த்தாய சதுர் விதாபூத்
போகேச பவானி புருஷேஷீ விஸ்ணு
க்ரோதேச காளீ சமேரேச துர்க்கா
(காமிக ஆகமம்)

அன்னையே ஆனந்த ரூபினியாக, காளியாக, ஸ்ரீபத்திரகாளியாக, ரூபபேதங் களைக் கொண்டு நிற்கின்றாள். சிவ மங் களம் நிகழும் சிவம் பெருகும் நிலையில் உயரும் அனைத்து உயிரிலும் கலந்தும் மறைந்து செறிந்தும் மிளிரும் அன்னை அகிலம் காக்கும் ஆக்ஞையுடையவள்.

உலக முதற்காரண தத்துவம் சக்தியு டையது. சிவமயமாக சிவனுடன் இணைந் தாள் சக்தியே பத்திரகாளி. பத்திரை என்பவள் மிக உயர்ந்தவள் எனப் பொருள்படுவாள்.

மிக உயர்ந்த காளிகாம்பா என்பது நேர்பொருள். இதன் புதைபொருள் தேவர் களும் உணராத்தன்மையிலும் மேலான வள். சிவனை தினமும் நினைப்பவர்களும் உடனிருப்பவர்களும் சிவசக்தி அவளே. வீரபத்திரகாளி இவளே. பார்வதி உமா மலைமகள், அங்கையற்கண்ணி, அகி லாண்டேஸ்வரி, புவனேஸ்வரி, திரிபுரசுந்தரி, தேவிமகாகாளி சண்டிகா, மகா சரஸ்வதி, பகவதி, பவானீ, பைரவீ என பலகோடி நூறா யிரம் பெயர்கள் உடையவள் இவளே. அதர் வண வேதபத்திரகாளியாக வாமசார வழி பாடுகளும் சக்தி தாந்திர முறைகளும் நிகழ்வுற்று வருகின்றன. இது இந்தியாவி லும் இலங்கையிலும் குறிப்பாக இற்றை வரை எமது நெல்லண்டை பத்திர காளி யம்மன் ஆலயத்திலும் விளங்குகின்றது. அவள் பாதம் நிதம் பணிவோம்.

உலகாண்ட நாயகியாய் காட்சி தந்தாய்
உக்கிரமாய் தாண்டவமும்
ஆடிக்கொண்டாய்
சிலகாலம் சிவன் நோக்கி நிட்டை
கொண்டாய்
சீட்டர்களுக்கு அபயகரம் நீட்டி
நின்றாய்
பலவாய தருமங்கள்
போதித்தாண்டாய்
பக்வைமாய் என் பாச வினை
நீக்கினாய்
நலம்சேரும் சோமாஸ்கந்தராஜன்
என்பதனை அருளோடு பொருள்
கொண்டு ஆண்டாயே

தும்பளைநெல்லண்டைபத்திரகாளியம் மன் தேவஸ்தானம் ஆதீனகர்த்தா, சைவ சித்தாந்த பண்டிதர், சிவாகம உபதேச வாசஸ்பதி, சிவஸ்ரீதியாகசோமாஸ்கந்தராஜாக் குருக்கள் (BA.Dip.in.Edu,MA பிரதி அதிபர்) தும்பளை, நெல்லண்டை, பருத்தித்துறை

# மத்திய தரைக் கடலில் படகு கவிழ்ந்து விபத்து

## அகதிகள் 30 பேர் பலி!



(ரோம்)

**லிபியாவில் இருந்து மத்திய தரைக் கடல் ஊடாக இத்தாலிக்கு சென்ற அகதிகள் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று குழந்தைகள் உள்ளிட்ட 30 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

வளைகுடா நாடுகளில் இருந்து உள்நாட்டு போர் மற்றும் தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக பலர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் பாதுகாப்பில்லாத படகு பயணங்களை மட்டுமே தேர்வு செய்கின்றனர்.

சிறிய படகுகளில் அளவுக்கு அதிகமானோர் பயணம் மேற்கொள்வதால் கடலில் படகு கவிழ்ந்து விபத்து ஏற்படுவது தொடர் கதையாகி விட்டது.


இந்நிலையில், லிபியாவில் இருந்து சுமார் 500 முதல் 700 பேர் அகதிகளாக மத்திய தரைக்கடலில் மரப்படகு மூலம் ஐரோப்பிய நாடான இத்தாலியை நோக்கி பயணம் மேற்கொண்டுள்ளனர்.

லிபியா கடல் எல்லையிலிருந்து 20 கடல் மைல் தொலைவில் நேற்று முன்தினம் படகு நடுக்கடலில் திடீரென கவிழ்ந்தது. இதில், படகிலிருந்த 200 பேர் கடலில் விழுந்து தத்தளித்தனர்.

விபத்து குறித்து தகவலறிந்து சென்ற மீட்புக்குழுவினர் கடலில் விழுந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில், 3 குழந்தைகள் உள்ளிட்ட 30 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். மீட்கும் பணியில் இத்தாலிய கடற்படை தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. (இ-3)

# இந்தோனேசியாவில் இரட்டைக் குண்டுவெடிப்பு

## மூன்று பொலிஸார் பலி



இந்தோனேசியா தலைநகர் ஜகார்தாவில் உள்ள பேருந்து நிலைய வளாகத்தில் இரட்டை குண்டுகள் வெடித்ததில் மூன்று பொலிஸார் பலியாகினர். இந்த குண்டுவெடிப்பு தற்கொலைப் படை தாக்குதலாக இருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தோனேசியா தலைநகர் ஜகார்தாவில் உள்ள பேருந்து நிலையத்தின் வாகன நிறுத்தப்பகுதியில் நேற்று முன்தினம் பயங்கர சத்தத்துடன் இரு வெடிகுண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன. இந்த குண்டுவெடிப்பில் பேருந்து நிலையத்தில் பாதுகாப்பு பணியிலிருந்த மூன்று பொலிஸார் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், ஐந்து பொலிஸார் உள்ளிட்ட 10 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த குண்டு வெடிப்பு தற்கொலைப்படை தாக்குதலாக இருக்கலாம் என பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இருவரை அடையாளம் காணும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக தீவிரவாத தடுப்பு பிரிவினர் அருகிலுள்ள பாண்டென், மேற்கு ஜாவா மாகாணங்களில் இரு வீடுகளில் அதிரடி சோதனைகளை நடத்தியுள்ளனர்.

உலகில் முஸ்லிம் மதத்தினர் அதிகமாக வசிக்கும் நாடுகளில் ஒன்றான இந்தோனேசியாவின் பாலி நகரில் கடந்த 2002ஆம் ஆண்டில் அல்-கொய்தா இயக்கத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் 202 பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# பாக். குற்றச்சாட்டு ஐ.நா. நிராகரிப்பு

(ஜெனிவா)

எல்லைப்பகுதியில் ஐ.நா. வாகனத்தை இந்திய இராணுவம் குறிவைத்து தாக்கியதாக, பாகிஸ்தான் வெளியிட்ட தகவலுக்கு ஐ.நா. மறுப்பு தெரிவித்துள்ளது.

காஷ்மீர் மாநிலம் எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகே கடந்த ஒரு வாரமாக பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டனர்.

இதனால், அப்பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதற்கு பதிலடியாக சமீபத்தில் இந்திய இராணுவம், பாகிஸ்தான் இராணுவ நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியது.

இந்தியாவின் இந்த தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவ நிலைகள் பலத்த சேதமடைந்துள்ளன. இதற்கு ஆதாரமாக சில வீடியோ காட்சிகளையும் இராணுவம் வெளியிட்டது. இருப்பினும், பாகிஸ்தான் இராணுவம் இதை மறுத்துள்ளது.

இந்நிலையில், எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் கண்காணிப்பு பணியிலிருந்த சர்வதேச இராணுவ பார்வையாளர்களின் வாகனத்தின் மீது இந்தியா தாக்குதல் நடத்தியுள்ளதாக பாகிஸ்தான் இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த தாக்குதலில் அதிகாரிகளுக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை எனவும் கூறியுள்ளது.

ஆனால், பாகிஸ்தான் இராணுவத்தின் தகவலை ஐ.நா. மறுத்துள்ளது.

எல்லைப்பகுதியில் தங்கள் இராணுவ பார்வையாளர்களை இந்திய இராணுவம் குறி வைத்து தாக்கியதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றும் ஐ.நா. பொதுச் செயலாளரின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக் கூறியுள்ளார்.

'பாகிஸ்தான் கட்டுப் பாட்டில் உள்ள காஷ்மீரின் பிம்பர் மாவட்டத்தில், பாகிஸ்தான் பாதுகாவலர்களுடன் ஐ.நா. இராணுவ பார்வையாளர்கள் சென்றபோது துப்பாக்கியால் சுடும் சத்தத்தை கேட்டுள்ளனர்.

ஆனால், அது ஐ.நா. இராணுவ பார்வையாளர்கள் குறிவைக்கப்பட்டதாக கூறுவதற்கு ஆதாரம் இல்லை' என்றும் அவர் கூறினார்.

எல்லைப்பகுதியில் இந்தியா, பாகிஸ்தான் இராணுவத்தினரின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக சர்வதேச இராணுவ பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)




# உலகெங்கிலும் அமைதி நிலவ கூடுதல் முயற்சி

## போப்பை சந்தித்த பின் ட்ரம்ப்







(வாடிகன்)

உலகெங்கிலும் அமைதி நிலவ கூடுதல் முயற்சி எடுக்க இருப்பதாக போப் பிரான்சிஸை சந்தித்த பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் முதன் முறையாக வளைகுடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு டொனால்ட் ட்ரம்ப் அரசு முறை பயணமாக சென்றுள்ளார். இந்த பயணத்தில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்களை அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

தனது சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக இத்தாலி நாட்டுக்குச் சென்ற ட்ரம்ப் நேற்று முன்தினம் ஜனாதிபதி செர்ஜியோவைச் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். முன்னதாக போப் பாண்டவர் பிரான்சிஸை வாடிகன் நகரில் சந்தித்த ட்ரம்ப், அவருடன் தனியாக அரை மணிநேரம் ஆலோசனை நடத்தினார்.

டொனால்ட் ட்ரம்ப், போப் பிரான்சிஸ் இடையே ஏற்கனவே கருத்து மோதல் போக்கு இருந்ததால், இந்தச் சந்திப்பு குறித்து உலக அளவில் பெரிய எதிர்பார்ப்பு நிலவியது. மெக்சிக்கோவிலிருந்து அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக குடியேறும் நபர்களைத் தடுக்கும் வகையில் இருநாட்டு எல்லையில் சுவர் எழுப்பப்போவதாக ட்ரம்ப் அறிவித்த போது அதற்கு போப் பிரான்சிஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

நாடுகளுக்கு இடையே பாலங்கள் அமைப்பதே நல்ல தலைவருக்கு அழகு எனத் தெரிவித்த போப், சுவர் எழுப்புவது உண்மையான கிறிஸ்தவரின் பணியாக இருக்காது என கடுமையாக விமர்சனம் செய்திருந்தார்.

அப்போது ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ட்ரம்ப், போப் பிரான்சிஸ் அவ்வாறு பேசியது அவருக்குத் தேவையற்றது என்று கருத்து தெரிவித்திருந்தார். இந்நிலையில், இந்த சந்திப்பின் இறுதியில் ட்ரம்புக்கான தமது செய்தி அடங்கிய குறிப்பு ஒன்றை வழங்கிய போப் பிரான்சிஸ், பல்வேறு பரிசுப் பொருட்களையும் அளித்தார். பதிலுக்கு மார்ட்டின் லூதர் கிங் எழுதிய புத்தகம் ஒன்றை ட்ரம்ப் போப் பிரான்சிஸ் இற்கு பரிசாக வழங்கினார்.

சந்திப்பு முடிந்த பின்னர், “வாடிகனை விட்டுசெல்லும் போது உலகெங்கிலும் அமைதி நிலவ கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும் என உறுதியெடுத்துக் கொண்டேன்” என ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பை முடித்துக் கொண்ட ட்ரம்ப் ஜோர்ஜியா நோக்கிச் சென்றார். (இ-3)

கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே.

- ஔவையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிவன் - குருக்கள் விசாரணை
## இயேசு - அருட்தந்தை தடுத்து வைப்பு
## புத்தர் - தேரருக்கு முழுச் சுதந்திரம்

நீதி என்றால் என்ன? இந்தக் கேள்விக்கு மனுநீதி கண்ட சோழன், பொற்கைப் பாண்டியன் போன்றவர்கள்தான் பதிலாகுவர்.

கன்றிழந்த பசுவுக்கு நீதி கிடைக்க மனுநீதிச் சோழ மன்னன் தன் மகன் வீதிவிடங்கனை தானே தேர்க்காலில் வைத்துக் கொன்றான்.

பொற்கைப் பாண்டியனோ தன் கையை வெட்டி நீதியை நிலை நாட்டினான்.

நீதி என்பது சகலருக்குமானது. நீதிக்கு முன் சகலரும் சமன் என்பதுதான் நீதியின் தத்துவம். அதனால்தான் நீதி தேவதையின் கண்கள் கறுத்தத் துணியால் கட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு கண்கள் கட்டப்பட்டது ஏன்? நீதியை வழங்குபவர் இவர் நமர்; அவர் பிறர் என்று பார்க்கக்கூடாது. எதிரில் நிற்பது நம் பிள்ளையாயினும் தீர்ப்பு ஒன்றுதான் என்பதாக நீதியின் தீர்ப்பு அமைய வேண்டும்.

ஆனால் இலங்கையில் நீதி என்ற விடயம் இன்னமும் கேள்விக்குரியதாகவே இருக்கிறது.

வித்தியாவின் கொலை வழக்கை கொழும்புக்கு மாற்றினால் நீதி கிடைக்காமல் போகும் என்று மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர் எனில் நீதியான தீர்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதுதான் பொருள்.

ஆக, இந்த நாட்டில் சமாதானம், அமைதி என்பன ஏற்பட வேண்டுமாயின் முதலில் நீதிபரிபாலனம் சமனாக அமைய வேண்டும்.

நீதி பரிபாலனம் அனைவருக்கும் சமமாக அமையுமாக இருந்தால், அரசியல் அமைப்பு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை என எதுவும் தேவையற்றதாகிவிடும்.

வடக்கு கிழக்கை உயர் நீதிமன்றம் பிரிக்க முடியுமென்றால், அதை இணைக்கவும் அந்த நீதிமன்றால் முடியும்.

தமிழ் அரசியல் கைதிகளை தடுத்து வைப்பதற்கு இடமுண்டாயின் தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இருக்கக்கூடிய படையினரை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடவும் முடியும்.

ஆனால் நீதி ஒரு பக்கமாக நிற்கிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுனாமி கணக்கு விவகாரத்தில் காப்பாற்றியது நான் விட்ட பெரும் தவறு என்கிறார் ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சரத் என். சில்வா.

மின்சார நாற்காலியில் இருந்து போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்றி விட்டேன் என்பதுதான் ஜனாதிபதி மைத்திரியின் கர்ச்சிப்பு.

ஆக, போர்க்குற்றவாளிகள் இப்போது சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்பது இதன் பொருள்.

நிலைமை இதுவாக இருக்க, கடந்த சில நாட்களுக்குள் மும்மதம் சார்ந்த மதகுருமார்களுக்கு நடந்தது என்ன?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் அருட்தந்தை எழில்ராஜன் பொலிஸாரால் தடுத்து வைத்து விசாரணை; திருநெல்வேலி காளி கோவில் குருக்கள் அலங்கார வளைவின் வடிவம் காரணமாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை.

இனவாதம், மதவாதம் பேசி இந்த நாட்டின் ஒட்டுமொத்த அமைதிக்கும் குந்தகம் செய்யும் ஞானசார தேரருக்கு முழுச் சுதந்திரம், முழுப் பாதுகாப்பு.

இதுதான் நீதி என்றால் நாடு உருப்படுவது எங்ஙனம்?

## சுவரொட்டிப் போட்டி

வலி. கிழக்கு பிரதேச செயலகத்தினால் சிறுவர் ஊழியத்திற்கு எதிரான தினத்தை நினைவுகூரும் சுவரொட்டிப் போட்டி நடத்தப் படவுள்ளது. இப் போட்டிக்கான இறுதித் திகதி 31.05. 2017 ஆகும். இப் போட்டியில் கோப்பாய் பிரதேச பாடசாலைகள் கலந்து கொள்ளும்படி கோப்பாய் பிரதேச செயலர் திருமதி. சுபாஜினி மதியழகன் அறிவித்துள்ளார். (இ-3-136)

## பக்திரச கீதங்கள்

வட்டுக்கோட்டை காக்கையம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் விசேட நிகழ்வாக கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பக்திரச கீதங்கள் பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (இ)

# விடையளிக்கும் நுட்பங்கள் தொடர்பில் வடக்கில் செயலமர்வு

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் இவ்வருடம் க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் கணிதப்பிரிவு மாணவர்களுக்கு இணைந்த கணித பாட வினாக்களிற்கு விடையளிக்கும் நுட்பங்கள் தொடர்பான செயலமர்வினை நடத்தவுள்ளது.

இச்செயலமர்விற்கு வளவாளராக பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலந்து கொள்ளவுள்ளார்.

இச் செயலமர்வினை வலய ரீதியாக பிரிக்கப்பட்டு கீழ்க் குறிப்பிடப்படும் நேர அட்டவணைக்கு ஏற்ப நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் மாணவர்களின் நன்மைகருதி அவர்கள் விரும்பிய நிலையத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

26.052017 யாழ்ப்பாணம் தீவகம்-யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, 29.05.2017 வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு-வ/வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி , 30.05.2017 வடமராட்சி-யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, 01.06.2017 மன்னார்,மடு-மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, 02.06.2017 முல்லைத்தீவு, துணுக்காய்-மு/வித்தியானந்த கல்லூரி, 05.06.2017 தென்மராட்சி-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 06.06.2017 கிளிநொச்சி -கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் . (இ)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சமூகப் புரவலர் வித்தியாதான கீர்த்தி அமரர் மாணிக்கம் சுப்பிரமணியத்தின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்த நினைவுப் பேருரை 26.05.2017 இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் பேராசிரியர் மா.சின்னத்தம்பியால் நிகழ்த்தப்படும். (இ)

## சாஸ்திரங்கள்

✦ வீடுகளுக்குத் தீ வைப்பது, சூறையாடுவது, குடிமக்களைக் கொல்வது ஆகிய பாவங்களைச் செய்தவர்களை, வெறிநாய்களை விட்டுக் குதறச் செய்வது.
-சாரமேயாதனம் (கருடபுராணம்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 60 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** நெடுந்தீவு பிரதேசம், நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, கொடிகாமம் கச்சாய் வீதி, பனைவள ஆராச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளானட், நெடுந்தீவு தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** தேக்கவத்தை பிரதேசம், கந்தசாமிநகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், இலுப்பைகுளம், அழகாபுரி, துட்டுவாகை, செட்டிகுளம் நகரம், சின்னசிப்பிகுளம், முதலியார்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம், அரசடிகுளம், காந்திநகர், அரசன்குளம், வலயம் 06, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கஜசிங்க புர இராணுவ முகாம், செட்டிகுளம் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** பள்ளமடு விலிருந்து வெள்ளாங்குளம், விடத்தற்தீவு கிராமம், கள்ளியடி, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி, கணேசபுரம், விடத்தற்தீவு வைத்தியசாலை, தேவன்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், கணேசபுரம் இராணுவ முகாம ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நேசிக்கப்படுபவனாயிரு!

ஞானம் விவேகமாக உன்னுள் உறைந்து விட்டால் அது உன்னை ஒரு போதும் விடாது. விவேகம் உன் இதயத்தில் குடி கொள்கிறது.

கடவுளை உனது ஆத்ம நண்பன், காதலனாக, காதலியாக ஆக்கிக்கொள். இதுவே நீ முதலாகக் கடைசியாகச் செய்ய வேண்டியதாகும்.

உன் மென்மையான இதயத்தைப் பாதுகாப்பான இடத்தில் வை, சிறு சிறு விடயங்கள், நிகழ்ச்சிகள் பற்றிய நினைவு அதில் அழுத்தமாகப் பதிந்து விடும். உன் இதயத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்ளவும் மனம் தெளிவுடன் இருக்கவும் கடவுளைத் தவிர சிறந்த இடம் வேறு எதுவுமில்லை. எந்தக் காலமும் நிகழ்ச்சிகளும் உன்னைத் தீண்ட முடியாது; எந்த வடுவையும் ஏற்படுத்தாது.

விலையுயர்ந்த கல்லை வைத்துக் கட்டுவதற்கு வெள்ளி அல்லது தங்கம் தேவை. அதைப்போன்று உனது இதயத்தைக் கடவுளிடம் வைத்துக்கொள்ள ஞானமும் விவேகமும் தேவையாகின்றன.

கடவுளை உன்னுடைய ஆத்மார்த்த அன்பனாகச் செய்து கொள். நீயும் கடவுளால் ஆத்மார்த்தமாக நேசிக்கப்படுவாய் என்பதை அறிந்து கொள்.


அதுதான் அன்புக்குரியவன் என்பது.

## வருமுன் காப்போம் மரணம் தவிர்ப்போம்!

கடித்த விலங்கு தெருநாயாகவோ அன்றி 14 நாட்கள் அவதானிக்க முடியாததாகவோ இருக்குமாயின் உடனடியாக விசர் நோய் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுதல் வேண்டும்.

**விலங்கு விசர் நோய் பற்றி அறிந்து கொள்வோம். அவதானமாக இருப்போம்.**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ். மாநகரசபை.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# பணக்கஷ்டம் நீங்க...

தினமும் சித்தர் துதியினை ஒரு நாளைக்கு இரு முறை என்று 1 வருடம் வரை வீட்டு பூஜை அறையில் ஜபித்து வந்தால், வீட்டில் உள்ள பணக்கஷ்டங்கள் குறையும்.

**சித்தர் துதி**

ஓம் அகத்தீசாய நமக
ஓம் நந்தீசாய நமக
ஓம் திருமூல தேவாய நமக
ஓம் கருவூர் தேவாய நமக
ஓம் ராமலிங்க தேவாய நமக

**பணக்கஷ்டம் குறைவதற்கு எளிய பரிகாரங்கள**

காலை வேளையில் குளித்து முடித்தவுடன் சிறிது சர்க்கரை எடுத்து வீட்டு வாசல் வெளியே தூவி வர வேண்டும். ஏனெனில் அந்த சர்க்கரையை சிறு பூச்சிகள் மற்றும் எறும்புகள் சாப்பிட்டு வரும் போது, நமது கஷ்டங்கள் சிறிது சிறிதாக குறையுமாம்.

வியாழக்கிழமை அன்று கொஞ்சம் குங்குமம் வாங்கி அதை வெள்ளிக் கிழமைகளில் அம்பாள் அல்லது தாயார் சந்நிதியில் தொடர்ந்து 11 வாரங்கள் கொடுத்து வர வேண்டும்.

தொடர்ந்து 5 வெள்ளிக் கிழமைகள் மஹாலக்ஷ்மி சந்நிதியில் மல்லிகை பூ மாலை சாற்றி வழிபட்டு வந்தால், கடன் மற்றும் பணக்கஷ்டப் பிரச்சினைகள் ஏற்படாதாம்.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நல்லதை மட்டும் பேசுங்கள்

❖ தவறு செய்பவர்களை மன்னித்துவிட வேண்டும் பொறுத்துக் கொள்ளவும் வேண்டும். இறைவன் உங்களை மன்னிக்க வேண்டுமென விரும்பவது இல்லையா என்ன?

❖ எப்போதும் குறை கூறிக் கொண்டே இருப்பவனும், சபிப்பவனும், ஆபாசமாகவும் அற்பமாகவும் பேசுபவனும் இறை நம்பிக்கையாளன் அல்லன்.

❖ இறைவன் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக சிரமப்படுத்துவதில்லை. சிரமத்திற்குப் பின்னர் இலகுவை இறைவன் உண்டாக்குவான். உண்மையில் சிரமத்துடன் இலகுவும் இருக்கிறது

❖ எவர் இறைவனையும் மறுமையையும் ஏற்றுக் கொள்கிறாரோ, அவர் நல்லவற்றைக் கூறவும் அல்லது மவுனமாக இருக்கவும்.


❖ திண்ணமாக மென்மை எதில் உள்ளதோ அது அதனை அழகுபடுத்துகிறது. எதிலிருந்து அது அப்புறப்படுத்த படுகிறதோ அது அதனை கோரப்படுத்துகிறது.

❖ எந்தப் பொருளில் மானக்கேடான தன்மை பொதிந்துள்ளதோ அது அதனைப் பாழ்படுத்தி விடுகிறது. எந்தப் பொருளில் நாணம் உள்ளதோ அது அதனை ஒளிரச் செய்கிறது.

**- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**

## ஜதூசன், சன்சஜன் சிறப்பாட்டம்

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III யாழ். ஜொனியன்ஸ் அபார வெற்றி





சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டி வரிசையில் 20.05.2017 அன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி, நியூஸ்ரார் அணியை 159 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 50 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 379 ஓட்டங்களைப் பெற்றது.

ஜதூசன், சன்சஜன் ஜோடி 6 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 170 ஓட்டங்களைப் பெற்றமை யாழ். நகரில் கிரிக்கெட் வரலாற்றில் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டியில் இது ஓர் சாதனையாக அமைந்துள்ளது.

கஜீபன்-54, நேசவர்மன்-31, அன்புஜன்-22, ஜதூசன்-83, சன்சஜன்-104, லவேந்திரா - 21, கபில்ராஜ்-14 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜசிந்தன் - 01, ரமணன் - 02, கபிசாந் - 02, பிரசாந் - 02, கிரிசாந் - 02 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 38 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

கபில்ராஜ் -39, மோகன்-23, மோகனதீபன் - 55, கஜேந்திரா - 45 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழ். ஜொனியன்ஸ் சார்பாக கபில்ராஜ் - 04, டக்ஸன் - 02, லவேந்திரா - 01, ஜதூசன் - 03 இலக்குகளைப் கைப்பற்றினர். (க)

## சம்பியனானது ஞானமுருகன்

உடுவில் பிரதேச செயலக இளைஞர் கழக போட்டிகள்-2017 உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் இளைஞர் அணியை எதிர்த்து ஞானமுருகன் இளைஞர் அணி மோதியது.

இப் போட்டியில் ஞானமுருகன் இளைஞர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஞானமுருகன் இளைஞர் அணி சார்பில் வகின்சன் ஒரு கோலினைப் போட்டார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இவ்வருடம் நடதப்படுகின்ற 29 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் குழுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் (21.05.2017) தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மகரகம பிரதான காரியாலய வளாகத்தில் நடைபெற்ற கயிறு இழுத்தல் போட்டியில் யாழ்.மாவட்ட அணியாக பங்கேற்ற கணேசன் இளைஞர் கழக பெண்கள் அணி மூன்றாமிடத்தினை பெற்றுக்கொண்டது. (க-281)

# நவிண்டில் கலைமதி வி.கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## அடுத்த சுற்றில் இமையாணன், ஐயனார்





நவிண்டில் கலைமதி வி.கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

24.05.2017அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் உரும்பிராய் திருக்குமரன்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் மோதியது.

முழுநேர ஆட்ட முடிவில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தை 04.01 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது திருக்குமரன் விளையாட்டுக் கழகம்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் மோதியது. இப் போட்டியில் 05.00 என்ற கோல் அடிப்படையில் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

# தேசிய மட்டத்திற்கு தெரிவாகியது இமையாணன் மத்தி பெண்கள் அணி



பெண்களுக்கான மாவட்ட மட்ட எல்லே போட்டியில் கரவெட்டி இளைஞர் கழகம் சார்பாக பங்குபற்றிய இமையாணன் மத்திய வி.கழகம் கடந்த வருடம் சங்கானை இளைஞர் கழக அணியை வீழ்த்தி 2017 ற்கான சம்பியனாகியது. இவ் அணியானது தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. (க)

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்று தொடர்

## சம்பியனானது உடுவில் பிரதேச செயலகம்



யாழ்.மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் இறுதிப்போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்கொண்ட உடுவில் பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. அணி சார்பில் ஜெகன் ஒரு கோலினைப்போட்டார்.

உடுவில் பிரதேச செயலக அணி சார்பாக ஞானமுருகன் அணி வீரர்களான தாரகன், ஜெகன், தீபன் வகின்சன், சுமன், ஜெரோம் ஆகியோர் விளையாடியமை குறிப்பிடத்தக்கது. (க)

## மகிந்தவுக்கு...

துச் சபை பஸ்களைப் பாவித்தமைக்கான கட்டணத்தைப் பெற்றுத்தருமாறு கொழும்பு வர்த்தக மேல்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இன்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை தொடுத்துள்ள இந்த வழக்கின் பிரதிவாதிகளாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த ஆகிய மூவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார வேலைகளுக்காக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களைப் பாவித்தவகையில் சபைக்கு 14 கோடி (140 மில்லியன்) ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதால் அத்தொகையை பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுத்தருமாறு இந்த வழக்கு கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மன்னிப்பு...

ள்ளது. வடமாகாணசபையின் 93ஆம் அமர்வு நேற்றைய தினம் பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அவை தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் இந்த வருத்தத்தை மாகாண சபையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் பல இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

அந்த மக்களுடைய நினைவேந்தல் நிகழ்வு வடமாகாண சபையின் ஒழுங்கமைப்பில் கடந்த 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்தபோது சில குறுக்கீடுகள் உருவானது.

இந்த குறுக்கீடுகளுக்காக வடமாகாண சபை வருத்தம் தெரிவிக்கிறது என சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார். இதேவேளை குறித்த இடையூறுகளுக்கு மாகாண சபை மன்னிப்புக் கோருவதாக அவைத்தலைவரால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சில உறுப்பினர்களின் எதிர்ப்பு காரணமாக அதில் வருத்தத்தை தெரிவிக்கின்றது என மாற்றம் செய்து குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## வட அமைச்சர்கள்...

எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா அமைச்சர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகள் எப்போது பகிரங்கப்படுத்தப்படும் என முதலமைச்சரை பார்த்து கேட்டிருந்தார். இதற்கு பதிலளித்த முதலமைச்சர், குறித்த விசாரணை அறிக்கை பரிசீலனையில் உள்ளது. அடுத்த தவணையில் விசாரணை அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் பல குற்றச்சாட்டுக்கள் பல்வேறு தரப்புக்களால் முன்வைக்கப்பட்ட நிலையில், அமைச்சர்களை விசாரணை செய்யுமாறு மாகாண சபை உறுப்பினர்களால் முதலமைச்சரிடம் கோரப்பட்டது. அதையடுத்து ஓய்வுபெற்ற நீதிபதிகள் மூன்று பேரை கொண்ட குழுவினர் விசாரணையாளர்களாக நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு அவை முடிவடைந்துள்ள நிலையில்,

அதில் முப்பதுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையிலும், ஆறு குற்றச்சாட்டுகள் பாரதூரமாக உள்ள நிலையிலும் அறிக்கை விசாரணையாளர்களால் முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே குறித்த அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சி தலைவர் தவராசா கேட்டிருந்ததுடன் அடுத்த அமர்வில் பகிரங்கப்படுத்துவதாக முதலமைச்சரும் பதில் கூறியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## குளத்தில் மூழ்கி...

வியாழக்கிழமை மாலை நான்கு முப்பது மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குளிப்பதற்காக இரண்டு நண்பர்களுடன் குளத்திற்கு சென்ற கனகாம்பிகைகுளம் கிராமத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் விஜிதன் (வயது 22) என்பவரே நீரிழ் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் சுமார் ஒரு மணித்தியாலய தேடுதலின் பின் குளத்தில் இருந்து மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-312,55)

## 300 பிக்குகளின்...

னங்களானது பிற்போடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் உள்ள பௌத்த விகாரையிலேயே மேற்படி பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்படவிருந்தன.

கடந்த கால யுத்தமானது நிறைவடைந்த பின்னர் கடந்த ஆட்சிக்காலத்தில் அன்று வீடமைப்பு அதிகார சபையின் அமைச்சரால் நாவற்குழியில் சிங்கள பௌத்த மக்கள், வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணியில் குடியமர்த்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு குடியமர்த்தப்பட்ட நாவற்குழி குடியிருப்பு பகுதியில் சிங்கள மக்கள் பௌத்த விகாரையொன்றை அமைத்திருந்ததுடன், கடந்த இரு வராரங்களுக்கு முன்பு அவ் விகாரையில் புதிதாக தூபியொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தனர். எனினும் இவ் புதிய விகாரை அமைப்பதற்கான அனுமதியானது சாவகச்சேரி பிரதேச சபையானது வழங்கியிருக்க வில்லை.

பிரதேசசபையின் எந்தவொரு அனுமதியும் இன்றி குறித்த விகாரையில் புதிய துபி அமைப்பதற்கான அடிக் கல்லானது இராணுவ பிரிகேடியர் ஒருவரால் நாட்டப்பட்டிருந்தது. இதனையடுத்து இவ் சட்டவிரோத துபி கட்டுவதை உடன் நிறுத்துமாறு பிரதேச சபையினால் எழுத்துமூல கடிதமொன்று விகாராதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே குறித்த விகாரையில் ஆசீர்வாத பூஜை எனும் சமய அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்கு நேற்றைய தினம் 300 பௌத்த மத துறவிகள் யாழ்ப்பாணம் செல்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் குறித்த பௌத்த துறவிகளில் ஒரு தொகுதியினர் நேற்றைய தினம் செல்வதற்கு ஒத்துழைக்காமையால் இவர்களது இவ் பூஜை வழிபாடுகளை எதிர்வரும் ஜுன் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்தி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## வடக்கு சபை...

என வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அந்த அமர்வை நடத்துவதாக அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போதே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது, உறுப்பினர் தவநாதன் தெரிவிக்கையில், மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களை ஆராய என சிறப்பு அமர்வினை நடத்துவதில் என்ன பிரயோசனம் இருக்கின்றது.நாங்கள் என்னத்தைக் கேட்டாலும் இங்கிருக்கின்ற அமைச்சர்கள் மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அவர்கள் எங்களுக்கு இன்னும் பதில் அனுப்பவில்லை.நிதியில்லை என வழமையாக அமர்வுகளில் எங்களுக்கு வழங்கும் பதில்களையே சிறப்பு அமர்விலும் கூறப்போகின்றனர்.இந்நிலையில் வீணாக ஏன் சிறப்பு அமர்வை கூட்ட வேண்டும் என்றார்.

உறுப்பினர் ஆனோல்ட் தெரிவிக்கையில், தவநாதனின் கருத்துக்கு நானும் ஒத்துப்போகின்றேன். மாகாண சபையில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் சபையில் கதைக்கும்போது வழமையாக வழங்கும் பதில்களையே சிறப்பு அமர்வில் கூறப்போகின்றனர். எனவே இவ்வாறான சிறப்பு அமர்வில் எந்த பயனும் இருக்காது. அப்படியானால் மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்வோம் அதற்காக வேண்டுமானால் அமர்வை நடத்தலாம் என்றார்.

உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல விடயங்களை செய்துள்ளது. ஆனால் வெளியாட்களுக்கு மாகாண சபை எதுவும் செய்யவில்லை என்ற கருத்துக்கள் பரவலாக இருக்கின்றன. மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி திரும்புவதாக ஜனாதிபதியும் கூறியுள்ளார். ஆகவே நிச்சயமாக சிறப்பு அமர்வை நடத்த வேண்டும். மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அபிவிருத்திகளை அந்த அமர்வில் நாம் பட்டியலிடுவோம் அதனை அந்த அமர்வில் ஆராய்வோம் என்றார். (செ-4)

## பாசத் தவிப்பு...

கொண்டிருந்த புகையிரதத்துக்கு முன்னால் பாய்ந்து உயிரை மாய்ப்புச் செய்து கொண்ட துயரச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த புகையிரதத்தில் பாய்ந்து குறித்த மாணவி உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

உயிரிழந்தவர் மன்னாரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் க.பொ.த உயர் தரத்தில் கல்வி கற்கும் தயாளினி என அழைக்கப்படும் சண்முகலிங்கம் மிதுலா என்ற மாணவி என இனங்காணப்பட்டார்.

சம்பவ தினம் அன்று தனது சொந்த இடமான முழுங்காவில் பகுதிக்குச் சென்று விட்டு மீண்டும் மன்னார் உப்புக்களம் பகுதியில் உள்ள தனது உறவினர் ஒருவரின் வாடகை வீட்டிற்குச் சென்ற போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது.

குறித்த மாணவி தற்கொலை செய்து கொண்டுள்ள போது தனது வேதனைகள் உள்ளடங்கிய கடிதம் ஒன்றை சுமார் 3 பக்கத்தில் எழுதிய நிலையில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மாணவியின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-281)

# தற்காலிக மீளாய்வுக் குழு வடக்கு ஆளுநரால் நியமிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுச்சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கையில் திருப்தி அடையாத உத்தியோகத்தர்கள் முறையீடு செய்த விடயங்களை மீளாய்வு செய்வதற்கான மூன்று பேர் அடங்கிய தற்காலிக குழுவினரை வடமாகாண ஆளுநர் நேற்று முன்தினம் நியமித்துள்ளார்

பொதுச்சேவை ஆணைக்குழுவால் பரிசீலிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் திருப்தி அடையாது வடமாகாண ஆளுநரிடம் மேன்முறையீடு செய்யும் உத்தியோகத்தர்களின் மேன்முறையீட்டு விடயங்களை ஆராய்ந்து ஆளுநருக்கு விபரங்களை சமர்ப்பிப்பதற்காக இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மீளாய்வு குழுவுக்கு இலங்கை நிர்வாக சேவை உள்ளூராட்சி சேவை ஆகியவற்றில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களான நீக்களாஸ்பிள்ளை, இராசையா, இராசநாயகம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த தற்காலிக குழு 30 நாட்களுக்கு மட்டுமே செயற்படும்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கையில் திருப்தி அடையாத உத்தியோகத்தர்கள் முறையீடு செய்த விடயங்களான, வடமாகாணத்தின் சில அரச சேவைகளின் சேவை பிரமாண குறிப்புக்கள்-தொடர்பான விடயங்கள், பல்வேறு காலகட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பதவி உயர்வுகள், நிலுவை கொடுப்பனவுகள் முதலிய பல்வேறான நிர்வாக விடயங்கள் உள்ளிட்ட 18 அம்ச விடயங்களை ஏற்கெனவே வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் வடமாகாண சபை சார்பில், ஆளுநருக்கு சமர்ப்பித்திருந்தார்.

அத்துடன் ஆளுநருக்கும் இது தொடர்பில் கிடைத்த மேன்முறையீடுகளையும் இக்குழு 30 நாட்களுக்குள் ஆராய்ந்து ஆளுநரின் மேலதிக பரிசீலனைக்கு அனுப்புவார்கள். அதன் பின்னரே ஆளுநர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார் என ஆளுநரின் ஒருங்கிணைப்பு செயலாளர் சுமணபாலா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முறையில் மேல் மாகாண சபையிலும் ஒரு மீளாய்வு குழு அமைக்கப்பட்டு தீர்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ரயில் மோதியதில்...

இருந்து இரவு 7.00 மணிக்கு கொழும்பு நோக்கி பயணித்த இரவுத்தபால் புகையிரதத்தால் மோதுண்ட குடும்பஸ்தர் ஒருவர சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு 8.50, மணியளவில் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து அக்கராயன்குளம் செல்லும் வீதியை ஊடறுத்துச் செல்லும் புகையிரத பாதையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் பின்புறமாக உள்ள புகையிரதக் கடவையில் இருந்து கிளிநொச்சி நோக்கிய பக்கமாக சுமார் 100 மீற்றர் தூரத்தில் புகையிரத பாதையில் ஒருவர் படுத்திருப்பதை அவதானித்த புகையிரதத்தின் சாரதி ஒலி எழுப்பி அவருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் புகையிரதத்தை நிறுத்துவதற்கு முயற்சித்த போதும், படுத்திருந்தவர் எழுந்திருக்காத நிலையில் அவரின் தலைப்பகுதியில் புகையிரதம் மோதிச் சென்று நின்றுள்ளது.

இச்சம்பவத்தில் தலை சிதறி உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டுள்ள புகையிரத பொலிஸார் சடலத்தை புகையிரதத்தில் ஏற்றிக் கொண்டு சென்று மாங்குளம் புகையிரத நிலையத்தில் வைத்து மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவத்தில் திருமுறிகண்டி கிராமத்தைச் சேர்ந்தவரும் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையாக துவிச் சக்கர வண்டி திருத்தகத்தை நடத்தும் 05, பிள்ளைகளின் தந்தையான தவம் அன்ரன் - பாலசூரியர் வயது - 44 என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மாங்குளம் பொலிஸார் சடலத்தை பொறுப்பேற்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து குறித்த நபர் தனித்து வாழ்ந்து வந்த நிலையில் தற்கொலை செய்யும் நோக்கோடு புகையிரத பாதையில் படுத்திருக்கலாம் எனத் தெரிய வந்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-15,281,85,312,250)

## இன உரிமை...

என நாம் தெரிந்து கொண்டோம் என தெரிவித்துள்ள யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிங்கள மாணவனான இந்திரஜித் குமார இன்று முடியாவிட்டாலும் நாளை முடியாவிட்டாலும் நூறு வருடங்களானாலும் அவர்கள் தமது உரிமையை வென்றெடுப்பார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத் தின சிரேஷ்ட மாணவரான இந்திரஜித் குமாரவினால் மே 20ஆம் திகதி அன்று முகநூலில் பதிவிடப்பட்ட பதிவின் தமிழாக்கம் பின்வருமாறு,

“மறக்க முடியாது, மன்னிக்கவும் முடியாது, தமிழ் இன அழிப்பு நாள் மே-18” இவ்வாறே தமிழ் எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது. அதில் மலர் ஒன்று இருக்கிறதே, அதுதான் ஈழ இராச்சியத்தின் தேசிய மலர், அந்த சிகப்பு, மஞ்சள் நிறமே அவர்களின் கொடியின் வர்ணம்.

இதைப் பார்க்கும் போது கோபமும் வெறுப்பும் வருகிறதா? மீண்டும் யுத்தம் புரிய தோன்றுகிறதா? ஆனால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் எங்களுக்கு அவ்வாறு தோன்றவில்லை. பெரிய ஏமாற்றமே ஏற்படுகிறது. இவர்களை நினைத்து அல்ல, எம்மவர்களை (சிங்களவர்களை) நினைத்து.

நாங்கள் கண்ணியமற்ற முறையில் நடந்துகொள்கிறோம். ஒரு சிங்களவராக நான் இதை கூறுவதில் வெட்கமடைகிறேன். எங்களுக்குள் எந்த வித ஒற்றுமையும் இல்லை. இந்த யாழ்.பல்கலையினுள்ளே நாம் அடித்துக் கொள்கிறோம். ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொள்கிறோம். இப்படி எமக்குள்ளே ஆயிரம் பிரச்சினைகள்.

ஆனால் இங்குள்ளவர்கள் அவ்வாறில்லை. அவர்களுக்கு அன்றும் இன்றும் (நாளையும்) ஒரே பிரச்சினை. அது அவர்களின் இன உரிமையை பாதுகாக்கும் பிரச்சினை. இதுவே இங்கு நாம் தெரிந்து கொண்டோம். இவர்கள் எப்போதும் இவர்களுக்காக இறந்தவர்களை மறக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் அவர்களை நினைவு கூருகின்றனர். இங்குள்ள அரசியல்வாதிகள் ,பணமோகம் பிடித்தவர்களில்லை. அவர்கள் எங்கும் எப்போதும் கதைப்பது அவர்களின் உரிமையை பற்றி மட்டும் தான்.

எமது நாட்டில் மூன்றோ நான்கோ தமிழ் பத்திரிகைகள்மட்டுமே உள்ளது. ஆனால்அவையும் அவர்களின் உரிமைப்பிரச்சினையை பற்றிக் கதைப்பதில் பின்னிற்பதில்லை.

தென்னிலங்கையில் இதுவரை எத்தனையோ பாலியல் துஷ்பிரயோகம் நிகழ்ந்துள்ளது. அவை எல்லாம் எமக்கு இன்று நினைவில்இல்லை. ஆனால்வித்தியா படுகொலையை இவர்கள் இன்றும் மறக்கவில்லை. வித்தியா படுகொலைக்காக பெரிய போராட்டம் நடந்தது. ஒரு இனம் என்ற ரீதியில் அனைவரும் முன்னின்றனர்.

ஆனால் நீங்கள் இதையெல்லாம் ஒரு

(4ஆம் பக்கம்...)

## நாவற்குழி விகா...

க்கையில்.

நாவற்குழி பகுதியில் சிங்கள விகாரை ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் 14.05. 2017 அன்று நாட்டப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது. அவ்வாறன கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான கட்டட வரைபட அனுமதி, உள்ளூராட்சி சபையிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த விகாரை தாது கோபுரம் அமைக்கப்படவிருக்கும் பகுதி நகர அபிவிருத்தி சபையின் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் அமையாமையால் உள்ளூராட்சி சபையின் அனுமதி பெற்றே அவ்வாறான கட்டடத்தை அமைக்க முடியும். அவ்வாறாக சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லை என்பதை அறிகின்றேன்.

எனவே முதலமைச்சர் உள்ளூராட்சி மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில், இவ்வாறான கட்டடங்கள் உள்ளூராட்சி சபைகளின் விதிகளுக்கு அமைவாக அனுமதி பெற்றே அனுமதிக்கப்படுவது உறுதி செய்ய வேண்டும் என தனது பிரேணையை முன்மொழிந்தார். இதனையடுத்து இந்த பிரேரணை முதலமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்போது ஆறடி நிலம் தவிர எந்த நிலமும் யாருக்கும் சொந்தமில்லை. தென்னிலங்கையில் உள்ள பெரும்பாலான இந்து கோவில்களை சிங்களவர்களே கட்டினார்கள். இந்துக்களின் கடவுளாகிய விநாயகரை சிங்களவர்களும் தமது பௌத்த கோவில்களில் வைத்து வழிபடுகின்றார்கள் என தெரிவித்த உறுப்பினர் தருமபால செனவிரத்ன, சட்டத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்குமாறும் கூறியிருந்தார்.

அவரது கருத்தை மறுதலித்து பேசிய உறுப்பினர் சர்வேஸ்வரன், தவறான வரலாற்று பதிவு ஒன்றை கூறியுள்ளீர்கள். தென்னிலங்கையில் உள்ள இந்து கோவில்கள் எதனையும் சிங்களவர்கள் கட்டவில்லை அங்குள்ள தமிழர்களே கட்டியிருந்தார்கள். நாட்டில் எல்லா மதமும் சமமாகவே மதிக்கப்படுவதாக கூறியுள்ளீர்கள் இது தவறான கருத்தாகும். புதிய அரசியலமைப்பில் பௌத்தத்திற்கே முன்னுரிமை என கூறப்பட்டுள்ளது.

ஆகவே செனவிரத்னவின் கருத்துக்கள் முற்றிலும் தவறானது. ஒரு இந்து கோவில் கட்ட வேண்டும் என்றாலும் பௌத்த சாசன அமைச்சிடமே அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது எனவும் கூறினார். இதன் போது குறுக்கிட்ட அவைத்தலைவர் சிவஞானம், சர்வேஸ்வரனை பேசவிடாது தடுத்ததோடு, சிங்கள உறுப்பினர் பேசியது சரியானது எனவும் சர்வேஸ்வரனோடு வாதிட்டார். இதனால் சபையில் சிறிது நேரம் குழப்பம் நிலவியது.

இதன் போது கருத்து தெரிவித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இவ்வாறு முல்லைத்தீவு கொக்கிளாயிலும் அனுமதி பெறப்படாமல் விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியதுடன், இது தொடர்பிலும் தான் கவனமெடுப்பதாகவும் கூறினார். இதேவேளை மத்திய அரசு இது போன்ற இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை தவிர்க்க வேண்டும் என உறுப்பினர் ரவிகரனும் இதில் கருத்து தெரிவித்திருந்தார். (செ-4)

## இரு மோ.சைக்கி...

கிள்கள் இரண்டும் மோட்டார் சைக்கிள் பாகங்கள் சிலவும் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த காங்கேசன்துறை வடக்கு பகுதி கடந்த வருடம் நவம்பர் மாதம் பொதுமக்களின் பாவனைக்காக இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டிருந்தது.

அப்பகுதியில் உள்ள குரு வீதி என்ற இடத்தில் உள்ள பொதுமக்கள் விடுவிக்கப்பட்ட தமது நிலங்களை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் 5 பேருக்கு சொந்தமாக உள்ள பொதுக் கிணற்றினை நேற்றைய தினம் சுத்தம் செய்ய கிணற்று உரிமையாளர்கள் ஆயத்தமாகியுள்ளனர்.


அப்போது கிணற்றில் உள்ள தண்ணீரை வெளியேற்றிக்கொண்டிருந்த போது கிணற்றுக்குள் மோட்டார் சைக்கிள்களின் பாகங்கள் தென்பட்டுள்ளது. அப்போது உடனடியாக கிணற்றின் உரிமையாளர்கள் காங்கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளை வெளியே எடுக்குமாறும் தாம் பின்னர் வருவதாகவும் கூறியுள்ளனர்.

அப்போது பொதுமக்களே குறித்த மோட்டார் சைக்கிள்கள் (கீரோ கொண்டா பசன், ரீ.வி.எஸ்) மற்றும் மோட்டார் சைக்கிள் பாகங்களை சில கிணற்றில் இருந்து வெளியே எடுத்துள்ளனர். அச்சமயம் அந்த இடத்துக்கு திடீரென இராணுவத்தினர் பலர் வந்து அங்கு நின்ற அனைவரையும் வெளியேற்றியுள்ளனர்.

அதன் பின்னரே பொலிஸார் அவ்விடத்துக்கு வருகை தந்துள்ளதுடன் குறித்த விடயம் தொடர்பாக காணி உரிமையாளர் களை இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரால் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்த பொதுமக்களின் இடங்கள் மற்றும் குறிப்பாக கிணறுகளில் இருந்து தொடர்சியாக பெருமளவிலான வெடிபொருட்கள் மீட்கப்பட்டு வருகின்றன. அந்த நிலையில்முதன் முறையாக நேற்றைய தினம் இவ்வாறான மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்மை மக்கள் மத்தியில் பாரிய அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (செ-9)

## இலக்கத்தகடுக...



காங்கேசன்துறை பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து நேற்றைய தினம் மீட்கப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளை இராணுவத்தினர் உடைத்து எடுத்துக் கொண்டு அவ்இடத்தை விட்டு விரைவாக நழுவிச் சென்றுள்ளனர் என இச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை வடக்கு, குரு வீதி என்ற இடத்தில் உள்ள பொதுக் கிணற்றினை நேற்றைய தினம் சுத்தம் செய்ய கிணற்று உரிமையாளர்கள் ஆயத்தமாகியுள்ளனர். அப்போது கிணற்றில் உள்ள தண்ணீரை பம்பி மூலம் வெளியேற்றிக்கொண்டிருந்த போது கிணற்றுக்குள் மோட்டார் சைக்கிள்களின் பாகங்கள் தென்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவலை வழங்கிவிட்டு பொதுமக்களே குறித்த மோட்டார் சைக்கிள்கள் (கீரோ கொண்டா பஷ[illegible] ரீ.வி.எஸ்) மற்றும் மோட்டார் சைக்கிள் பாகங்கள் சிலவற்றை கிணற்றிலிருந்து வெளியே எடுத்துள்ளனர்.

அப்போது அவ்விடத்துக்கு உடனடியாக வான் ஒன்றில் பதற்றத்துடன் வருகை தந்த இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்த அனைவரையும் வெளியேற்றிவிட்டு மோட்டார் சைக்கிளில் இருந்த இலக்கத்தினை உடைத்து எடுத்துக்கொண்டு மிக விரைவாக அவ் இடத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

அதன் பின்னரே பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து மோட்டார் சைக்கிள்களை பார்வையிட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் இருந்த இலக்கத்தகடு தொடர்பாக பொலிஸாரை கேட்ட போது தாம் வரும் பொழுது மோட்டார் சைக்கிள்களில் இலக்கத் தகட்டினை[illegible] காணவில்லை என தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் இந்த செயல் அப்பகுதி தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (செ-9)


O/L உடன் மாதம்
25,000/- சம்பாதிக்க!
100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 9ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் ஜூன் 6 செவ்வாய் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
(சி-8689)
175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கில்கள் வெல்லும் வாய்ப்பு
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-8839)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(சி-8852)

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0767070069
(9023) M.Suren

வேலையாட்கள் தேவை
எமது ஸ்தாபனத்துக்கு பொதி சுமப்பவர்களும், பொருள் காட்சிப்படுத்துநர்களும் நிரந்தரமாக வேலை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை.
நேரில் சமுகம் தரவும்.
தேனு களஞ்சியம்
( நெஸ்லே விநியோகஸ்தர் )
மில்லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
075642013, 0214921258
(9033)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY
T.P: 021 205 7455
❖ சகல வைபவங்களுக்குமான உயர்தர உணவுகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
❖ வட மாகாணத்தில் அதிகூடிய உணவு உற்பத்தியாளர்கள்.
❖ வடக்கு முழுவதற்கும் இலகுவான விநியோக முறை.
❖ மிக மிக சுத்தமான கைதடி உணவுத் தொழிற்சாலையை பார்வையிட்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
ஆச்சி (FOOD FACTORY) ஆச்சி ஹொட்பூட் ரெஸ்ரோரன்ஸ்.
147, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P: 021 222 5001
கைதடி கிழக்கு, கைதடி.
(சி-8684)


## கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை (வ/து)

### பணிநிலை விண்ணப்பம் கோரல்

| | | |
|---|---|---|
| பதவி | : | அலுவலக உதவியாளர் |
| சம்பள குறியீட்டு இல. | : | 317/16 |
| சம்பள அளவுத்திட்டம் | : | 13160 - 15360 |
| (சுற்றுநிருபம் 2015/3 படி) | | 105X10 - 115X10 |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவத்துடன் 5-ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.

அல்லது

ஆ) 8-ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.

இ) வயது : 45 வருடம் (கூட்டுறவு சேவையில் உள்ளவர்களுக்கு வயது எல்லை கணிக்கப்படமாட்டாது)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையால் மேற்படி பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தினை சுய விபரத்தினை உள்ளடக்கி சுயமாக தயாரித்து அனுபவ, கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறதகைமைச் சான்றிதழ்களின் பிரதியுடன் 2017.06.15 ஆம் திகதிக்கு முன் தலைவர் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை, A9 வீதி, டிப்போச்சந்தி அருகாமை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

**தலைவர்,**
**மாவட்ட கூட்டுறவு சபை, கிளிநொச்சி.**

(சி-8686)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.